ன் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu வார மலர் ඊළනාඩු





மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.



Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 12.07.2026 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 187 பக்கங்கள் : 16


# இலங்கையில் கடுமையாகும் வரி அறவிடல் செயற்பாடுகள்!

### நாணய நிதியத்தின் பரிந்துரையை அடுத்து

கொழும்பு, ஜூலை. 12

சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளுக்கு அமைவாக இலங்கையில் எதிர்வரும் காலங்களில் வரி அறவிடல் செயற்பாடுகள் கடுமையான முறையில் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரியவந்துள்ளது.

இலங்கைக்கு வழங்கப்படும் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவித் திட்டம் 2027 மார்ச்சில் முடிவடைய உள்ளது.

இந்தக் காலக்கெடுவுக்குள் நாட்டின் வரி நிர்வாகத்தை முழுமையாகச் சீர்திருத்துமாறு இலங்கையின் வருமான நிர்வாக சீர்திருத்தங்கள் மற்றும் நவீனமயமாக்கல் சபைக்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிதித் துறை கடுமையான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

அதன் பிரகாரம் வரி விகிதங்களை மாற்றுவதற்குப் பதிலாக, வரி ஏய்ப்பாளர்களையும் வணிகங்களையும் டிஜிற்றல் முறையில் சிக்க வைப்பதே ஒரே தீர்வு

15




## தமிழ் அரசியல் கைதிகளின் பாதுகாப்பை உறுதி செய்க!

### நீதி மற்றும் சமத்துவத்திற்கான கனேடியர் அமைப்பு இலங்கை அரசிடம் கோரிக்கை

கொழும்பு, ஜூலை. 12

தமிழ் அரசியல் கைதிகளின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு இலங்கை அரசாங்கத்திடம் கனடாவின் ரொரன்டோவை தலைமையிடமாகக் கொண்ட நீதி மற்றும் சமத்துவத்திற்கான கனேடியர்கள் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

குறித்த அமைப்பின் பிரதிநிதியான ரோய் சமதானம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: -

இலங்கையில் ஏற்பட்டுள்ள சிறைச்சாலை நெருக்கடி காரணமாக, மெகசின், போகம்பரை மற்றும் கொழும்பு விளக்கமறியல் உள்ளிட்ட சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

நாட்டின் சிறைச்சாலைகள் சுமார் 10,000 கைதிகளை மட்டுமே தங்க வைக்கும் வசதியைக் கொண்டிருந்தாலும், தற்போது சுமார் 40,000 பேர் சிறை வைக்கப்பட்டுள்ளதால் கடுமையான நெரிசல் நிலவுகிறது.

1983ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலை படுகொலை மற்றும் 2000ஆம் ஆண்டு

15

## விவசாயிகளுக்கு துரோகம் செல்வந்தர்களுக்கு சலுகை

### அரசைச் சாடுகின்றார் சஜித்



கொழும்பு, ஜூலை. 12

"தற்போதைய அரசாங்கமும் கடந்த அரசாங்கத்தைப் போலவே பேச்சுச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் உள்ளிட்ட மக்களின் அடிப்படை உரிமைகளை அப்பட்டமாக மீறி வருகின்றது" என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

15

## இலங்கையில் மேற்கொண்ட முதலீடுகளை மீளப்பெறும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள்

கொழும்பு, ஜூலை. 12

இலங்கையின் பங்கு மற்றும் அரசாங்கக் கடன் பத்திரச் சந்தைகளிலிருந்து வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தங்கள் முதலீடுகளைத் திரும்பப் பெற்றுக்கொள்ளும் போக்கு அண்மைக் காலமாக அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

அவ்வாறு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தங்கள் பணத்தை வெளியே எடுத்துச் சென்றதால், இந்த ஆண்டுக்கான மொத்த நிகர வெளிநாட்டு மூலதன வெளியேற்றம் தற்போது 30 பில்லியன் ரூபாவையும் தாண்டியுள்ளது.

கொழும்புப் பங்குச் சந்தையிலிருந்து இந்த ஆண்டு இதுவரை (ஆண்டுத் தொடக்கத்திலிருந்து) நிகர வெளிநாட்டு வெளியேற்றம் 25 பில்லியன் ரூபாவைத் தாண்டியுள்ளது.

15

## டெங்கு மரணங்கள் 47 ஆக அதிகரிப்பு!

கொழும்பு, ஜூலை. 12

நாட்டில் பதிவாகியுள்ள டெங்கு மரணங்களின் எண்ணிக்கை 47 ஆக உயர்ந்துள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் இந்த ஆண்டில் இதுவரை நாடு

14

## நீதி அமைச்சரை பதவியிலிருந்து நீக்காமல் நியாயமான விசாரணை சாத்தியமில்லை!

### சிறை மோதல் குறித்து நளின் பண்டார எம்.பி.

கொழும்பு, ஜூலை. 12

நீர்கொழும்பு சிறைச்சாலையில் அண்மையில் இடம்பெற்ற மோதல் விவகாரத்தில் அரசாங்கம் மிகவும் பொறுப்பற்ற முறையில் செயற்படுவதாகக் குற்றம் சாட்டியுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார, நீதி அமைச்சரைப் பதவியிலிருந்து நீக்காமல் இச்சம்பவம் குறித்து ஒருபோதும் நியாயமான விசாரணையை முன்னெடுக்க முடியாது என குறிப்பிட்டார்.

அத்துடன், சிறைச்சாலை நெரிசலைக் குறைப்பதற்கான மாற்றுத் திட்டங்களை விடுத்து, வரலாற்றுச் சிறப்புமிக்க போகம்பறை சிறைச்சாலை வளாகத்தை மீண்டும் சிறைச்சாலையாக மாற்றுவதற்கு அரசு எடுத்து வரும் தன்னிச்சையான நடவடிக்கைகள்

15

## தேசிய பாதுகாப்பு நிலை மிக உயர்ந்த மட்டத்தில்!

### பாதுகாப்பு பிரதி அமைச்சர் தெரிவிப்பு


கொழும்பு, ஜூலை. 12

தற்போதைய அரசாங்கம் பதவியேற்றது முதல் நாட்டின் தேசிய பாதுகாப்பு மிக உயர்ந்த மட்டத்தில் பாதுகாக்கப்பட்டுள்ளது என்று பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர தெரிவித்துள்ளார்.

நாவலப்பிட்டியில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர், ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர்

15

## 'இசைக்குயில்' ஜானகி காலமானார்!



மைசூர், ஜூலை. 12

இந்தியத் திரையுலகின் புகழ்பெற்ற மூத்த பின்னணிப் பாடகி, 'ஜானகி அம்மா' என்று அன்போடு அழைக்கப்படும் எஸ். ஜானகி (வயது-88), வயது முதிர்வு மற்றும் உடல்நலக்குறைவு காரணமாக மைசூரில் உள்ள தனியார்

15

## மின் இணைப்புப் பணியில் ஈடுபட்ட இளைஞர் மின்சாரம் தாக்கி மரணம்!

### இயக்கச்சியில் பகுதியில் துயரம்

கிளிநொச்சி, ஜூலை. 12


கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பனிக்கையடி - இயக்கச்சி பகுதியில் மின்சாரம் தாக்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் 31 வயதுடைய சிவகுமார் சிவதாஸ் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த இளைஞன் மின்சார இணைப்புப் பணியில் ஈடுபட்டிருந்தபோது திடீரென மின்சாரம் தாக்கியுள்ளது.

15

## வடமாகாணத்திலும் பாதிப்பை ஏற்படுத்தவுள்ளது எல் நினோ!



யாழ்ப்பாணம், ஜூலை. 12

மத்திய பசுபிக் பிராந்திய கடற் பகுதிகளில் இருந்து இந்த சமுத்திர கடல் பிராந்தியத்துக்கு ஊடுருவியுள்ள எல்நினோ இம்மாதம் ஜூலை தொடக்கம் ஒக்ரோபர் மாதம் வரை வெப்ப தாக்கத்தைச் செலுத்தும் என யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல் துறை பேராசிரியரும் கலை

14

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# யாழ்ப்பாணம், கட்டுநாயக்க, மத்தள ஒரே நேரத்தில் நவீனமயமாக்கப்படும்!

## அமைச்சர் அநுர கருணாதிலக்க அறிவிப்பு



கொழும்பு, ஜூலை. 12

இலங்கையின் அந்நியச் செலாவணி வருவாயை அதிகரித்து, தேசிய பொருளாதாரத்தை வலுவூட்டும் நோக்கில் கட்டுநாயக்க, யாழ்ப்பாணம் மற்றும் மத்தள ஆகிய மூன்று பிரதான சர்வதேச விமான நிலையங்களையும் ஒரே நேரத்தில் நவீனமயமாக்குவதற்கான துரித உத்திகளைப் புதிய அரசாங்கம் ஆரம்பித்துள்ளது என்று துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் அநுர கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய மக்கள் சக்தியின் புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததைத் தொடர்ந்து, இலங்கையின் விமான போக்குவரத்துத் துறையை சர்வதேச தரத்துக்கு உயர்த்தி நாட்டின் பொருளாதாரத்துக்கு வலுசேர்க்கும் நோக்கில் கட்டுநாயக்க, யாழ்ப்பாணம் மற்றும் மத்தள ஆகிய மூன்று பிரதான சர்வதேச விமான நிலையங்களையும் ஒரே நேரத்தில் நவீனமயமாக்குவதற்கான துரித திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது ஆண்டுக்கு 11.5 மில்லியன் பயணிகளைக் கையாளும் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் பயணிகளின் எண்ணிக்கை 2032 ஆம் ஆண்டளவில் 16.5 மில்லியனாக அதிகரிக்கும் என கணிக்கப்பட்டுள்ளதால், அதன் உட்கட்டமைப்பை விரிவாக்குவது அவசியமாகியுள்ளது.

இதற்கமைய, பல வருடங்களாக முடங்கிக்கிடந்த ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு முகவர் அமைப்பின் நிதி உதவியுடனான இரண்டாவது முனையத்தின் கட்டுமானப் பணிகள், புதிய அரசாங்கத்தின் வெற்றிகரமான பேச்சுக்களை அடுத்து வரும் நவம்பர் மாத நடுப்பகுதியில் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த புதிய முனையம் மூலம் 96 புதிய செக்-இன் கவுண்டர்கள், 16 போர்டிங் கேற்றுகள் மற்றும் 26 குடிவரவு கவுண்டர்கள் போன்ற பல நவீன வசதிகள் சேர்க்கப்படவுள்ளதுடன், பயணிகள் தங்களது பொதிகளைப் பெற்றுக்கொள்வதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்க புதிய ஸ்கானர் மற்றும் கன்வெயர் பெல்ட் முறைமைகளும் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

இதேவேளை, இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கான பிராந்திய விமான சேவைகளை வழங்கும் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் வருகை, புறப்பாடு முனையங்கள் மற்றும் பயணிகள் தங்கும் கூடங்களை விரிவுப்படுத்தி நவீனமயமாக்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், உள்நாட்டு விமானப் போக்குவரத்துக்கான இடவசதிகளும் இதன் மூலம் விரிவாக்கப்படவுள்ளன. மறுபுறம், ஆரம்பம் முதலே கடுமையான நட்டத்தில் இயங்கி வரும் மத்தள சர்வதேச விமான நிலையத்தை அரசு-தனியார் பங்களிப்புடன் இலாபகரமானதாக மாற்றுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. மத்தள விமான நிலையத்தை ஒரு வர்த்தக மையமாக மாற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன-என்றார்.

(அ)

# புலம்பெயர் தொழிலாளர்களுக்கு புதிய ஓய்வூதிய திட்டம் விரைவில்!



கொழும்பு, ஜூலை. 12

இலங்கையில் பணிபுரியும் புலம்பெயர் தொழிலாளர்களுக்காக, அவர்களின் பணிக்காலம் மற்றும் வருமானத்திற்கு ஏற்ப வடிவமைக்கப்பட்ட புதிய மற்றும் கவர்ச்சிகரமான ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்தத் திட்டத்தில் சேரும் தொழிலாளர்கள், தங்களுக்குத் தேவையான வகையில் ஓய்வூதிய முறையைத் தேர்வு செய்யலாம்.

அதாவது, ஓய்வுக்குப் பிறகு மாதந்தோறும் ஓய்வூதியம் பெறுவதையோ, அல்லது பணிக்காலம் முடிந்ததும் மொத்தத் தொகையை ஒரே தடவையாகப் பெறுவதையோ அவர்களே தீர்மானிக்கலாம்.

சட்டபூர்வமாக அனுப்பப்படும் பணத்தின் பதிவுகளை முறையாகப் பராமரிக்கவும், ஓய்வூதியக் கணக்கீட்டில் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்தவும் டிஜிற்றல் தொழில்நுட்ப அமைச்சகத்துடன் இணைந்து பிரத்தியேக செயலி அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

ரதவிரு ஓய்வூதியத் திட்டத்திற்காக குவைத் நிதியம் ரூ. 2.1 மில்லியனை ஒதுக்கியுள்ளது. 2026 டிசெம்பர் 31 ஆம் திகதிக்குள் இந்தத் திட்டத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எட்ட எதிர்பார்க்கிறோம்.

தற்போது சுமார் 17 இலட்சம் இலங்கையர்கள் வெளிநாடுகளில் பணிபுரியும் நிலையில், கடந்த 2025 ஆம் ஆண்டில் வரலாற்றில் இல்லாத அளவிலான பணவரவு பதிவாகியுள்ளது.

இருப்பினும், தற்போதுள்ள ஓய்வூதியத் திட்டத்தில் 307 தொழிலாளர்கள் மட்டுமே இணைந்துள்ளனர். இதனை மாற்றியமைக்கும் விதமாகவே இந்தத் தன்னார்வ ஓய்வூதியத் திட்டம் அமையும் - என்றார்.

(அ)

# இலங்கைக் குடும்பம் தாய்லாந்தில் கைது!

கொழும்பு, ஜூலை. 12

தாய்லாந்தின் பாங்கொக்கில் உள்ள டான் முயாங் சர்வதேச விமான நிலையத்தில், மலேசிய கடவுச்சீட்டுகளைப் பயன்படுத்தி கசகஸ்தான் செல்ல முயன்ற இலங்கைக் குடும்பம் ஒன்று குடிவரவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளதாக தாய்லாந்து ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த இலங்கைக் குடும்பம் முதலில் தங்களது சொந்த இலங்கைக் கடவுச்சீட்டுகளைப் பயன்படுத்தி தாய்லாந்துக்குள் நுழைந்த பின்னர், தரைமார்க்கமாக மலேசியாவுக்கு பயணித்துள்ளனர்.

பின்னர், மலேசியக் கடவுச்சீட்டுகளைப் பயன்படுத்தி மீண்டும் தாய்லாந்துக்குள் நுழைந்து கசகஸ்தான் செல்ல முயன்றுள்ளனர். அவர்களுடன் பயணித்த மலேசியப் பெண் ஒருவர், இரு குழந்தைகளின் உயிர்த்தாயாக பொய்யாகக் கூறியிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், விமான நிறுவன அதிகாரிகள் பயண ஆவணங்களில் முரண்பாடுகளை கண்டறிந்ததால் அவர்களுக்கு விமானத்தில் ஏற அனுமதி மறுக்கப்பட்டது. இதையடுத்து, மியன்மார் வழியாக பயணிக்க முயன்ற நிலையில், சம்பவம் குடிவரவு அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

பின்னர் மியன்மாரிலிருந்து டான் முயாங் விமான நிலையம் ஊடாக கசகஸ்தான் செல்ல மீண்டும் முயன்றபோது, தாய்லாந்து குடிவரவு அதிகாரிகள் தலையிட்டு அவர்களை கைது செய்தனர்.

மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், இலங்கைப் பெண்ணும் மூத்த குழந்தையும் வேறு நபர்களுக்குச் சொந்தமான மலேசியக் கடவுச்சீட்டுகளை சட்டவிரோதமாக பயன்படுத்தியமை தெரியவந்துள்ளது. இளைய குழந்தை சட்டபூர்வமாக வழங்கப்பட்ட மலேசியக் கடவுச்சீட்டுடன் பயணித்திருக்கலாம் என அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர்.

பயண ஆவணங்களை தவறாக பயன்படுத்தியமை மற்றும் குற்றச் சதியில் ஈடுபட்டமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் இரு வயது வந்த பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(அ)

# ஜனாதிபதியின் பொது மன்னிப்பு பரிந்துரை அறிக்கை கையளிப்பு

கொழும்பு, ஜூலை. 12

சிறைக் கைதிகளுக்கு ஜனாதிபதியின் பொது மன்னிப்பு வழங்குவது தொடர்பான பரிந்துரைகள் அடங்கிய அறிக்கை கையளிக்கப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் எஸ். துரைராஜாவினால் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி ஆயிஷா ஜினசேனவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கைதிகளை ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்வதற்கு முறையான, நியாயமான மற்றும் வெளிப்படைத்தன்மை கொண்ட வழிமுறையொன்றை பேணுவதற்காக இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையானது நேற்று முன் தினம் நீதி அமைச்சில் வைத்து கையளிக்கப்பட்டுள்ளது.

2025 ஜூன் 25 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், தற்போதுள்ள அரசியலமைப்பின் 34 (1) பிரிவின் தற்காலிக ஏற்பாடுகள் உட்பட ஏனைய சட்ட கட்டளைச் சட்டங்கள் மற்றும் நீதிமன்றத் தீர்ப்புகளை ஆராய்ந்து, சிறைச்சாலைத் துறையில் உள்ள நிர்வாக நடைமுறைகளின் குறைபாடுகளை நிவர்த்தி செய்து பரிந்துரைகளை வழங்குவதற்காக, ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் எஸ். துரைராஜாவின் தலைமையில் இக்குழு நியமிக்கப்பட்டது.

சிறைச்சாலைகளில் தற்போதுள்ள அதிகளவிலான நெரிசலைக் குறைப்பதற்கும், கைதிகளை புனர்வாழ்வளிக்கும் முறைகளில் உள்ள பல்வேறு குறைபாடுகளைத் தவிர்த்து, சர்வதேச தரத்திற்கு அமையக்கூடிய சிறைச்சாலை அமைப்பொன்றை உருவாக்குவதற்காக அரசாங்கம் மேற்கொண்டு வரும் சீர்திருத்தங்களின் ஒரு முதற்படியாக இது அடையாளப்படுத்தப்படுகிறது.

(அ)

# 6 மாவட்டங்களுக்கு வெப்ப எச்சரிக்கை!

கொழும்பு, ஜூலை. 12

வானிலை மையம் ஆறு மாவட்டங்களுக்கு வெப்ப எச்சரிக்கையை விடுத்துள்ளது.

அதன்படி, முல்லைத்தீவு, வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களில் பகல் நேரங்களில் வெப்பக் குறியீடு "எச்சரிக்கை" நிலையை எட்டக்கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மனித உடல் உணரும் வெப்ப நிலையைப் பிரதிபலிக்கும் வெப்பக் குறியீடு, இந்த மாவட்டங்களின் சில பகுதிகளில் எச்சரிக்கை தேவைப்படும் அளவிற்கு உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, பொதுமக்கள் போதிய அளவு நீர் அருந்துமாறும், நேரடி சூரிய ஒளியில் நீண்ட நேரம் இருப்பதைத் தவிர்க்குமாறும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

(அ)




# கதிர்காமம் செல்லும் பக்தர்களுக்காக விசேட இ.போ.ச. பஸ் சேவை ஆரம்பம்

கொழும்பு, ஜூலை. 12

கதிர்காம ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு, பக்தர்களின் போக்குவரத்தை இலகுபடுத்தும் நோக்கில் இலங்கை போக்குவரத்து சபையினால் விசேட பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, கொழும்பில் இருந்து கதிர்காமம் வரையிலும், கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து கதிர்காமம் வரையிலும் இந்த விசேட பஸ் சேவைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.


பயணிகளின் நலன் கருதி, கதிர்காமம் பஸ் நிலையத்தில் ஆசனங்களை முன்பதிவு செய்வதற்காக இரண்டு விசேட முன்பதிவு நிலையங்கள் தற்போது நிறுவப்பட்டுள்ளன.

அதன்படி, கதிர்காம உற்சவத்திற்குச் செல்லும் பக்தர்கள் இந்தச் சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலையில் எழுச்சியுடன் நடந்த சம்பந்தனின் நினைவேந்தல்



திருமலை, ஜூலை. 12

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் தலைவரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பெருந்தலைவருமான அமரர் இரா. சம்பந்தனின் இரண்டாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று திருகோணமலை மாநகர சபை மண்டபத்தில் மிக எழுச்சியாகவும் உணர்வுபூர்வமாகவும் நடைபெற்றது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில், கட்சியின் தலைவர் சி.வி.கே. சிவஞானம், பொதுச் செயலாளர் சுமந்திரன், பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், மாநகர சபை மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசியல் தலைவர்களும் பெருந்திரளான பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

நிகழ்வின் தொடக்கத்தில், மறைந்த பெருந்தலைவர் அமரர் இரா. சம்பந்தனின் திருவுருவப் படத்திற்கு ஈகச்சுடர் ஏற்றப்பட்டு, மலர் தூவி மிக உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டது. கட்சியின் தலைவர், பதில் பொதுச் செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் (மாநகர சபை மற்றும் பிரதேச சபை) பிரதிநிதிகள் அனைவரும் மலர் அஞ்சலி செலுத்தியதுடன், ஐயாவின் வரலாற்றுச் சிறப்புமிக்க அரசியல் பங்களிப்பினை நன்றியுடன் நினைவு கூர்ந்தனர்.

(அ)

# சந்நிதியான் ஆச்சிரமத்தின் வாராந்த உதவி வழங்கல்



யாழ்ப்பாணம், ஜூலை. 12

வடமராட்சி தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்தம் நடத்தப்படும் நிகழ்வு சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெற்றது.

இதில் "பொது நீக்கிதனை நினைய வல்லார்க்கு பெருந்துணையே" என்னும் ஆன்மீக அருளுரையினை,

கலாநிதி இளையதம்பி ஜெயந்திரன் நிகழ்த்தினார்.

உதவிகளாக பளையைச் சேர்ந்த பொருளாதாரத்தால் நலிவடைந்த குடும்பம் ஒன்றுக்கு ஆழ்துளையிடும் கிணறு அமைப்பதற்காக 150,000 ரூபா நிதியும், கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையின் கோரிக்கைக்கு அமைவாக 30,000 ரூபா பெறுமதியான கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்கு தேவையான காகிதாதிகளும்,

தொண்டைமானாறு பகுதியில் அமைந்துள்ள விவேகானந்தா சனசமூக நிலையத்தினரால் நடத்தப்படவுள்ள முன்பள்ளி விளையாட்டு நிகழ்வுக்காக 50,000 ரூபா நிதியும், யாழ்ப்பாணம் இந்து மாணவர் சேவாலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக அலுவலக தளபாடங்கள் கொள்வனவுக்காக 100,000 ரூபா நிதியும் வழங்கப்பட்டுள்ளது.

(அ)




# வாகன இறக்குமதி கட்டுப்பாடுகள் சந்தையில் பாதிப்பை ஏற்படுத்தும்!

## பொருளாதார ஆய்வாளர் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை. 12

வாகன இறக்குமதிக்கு கட்டுப்பாடுகளை விதிப்பது சந்தையில் கடுமையான சிக்கல்களை ஏற்படுத்தும் அபாயம் உள்ளதாக பொருளாதார ஆய்வாளர் தனநாத் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நாட்டின் வாகனத் தேவை தற்போது பெருமளவில் பூர்த்தியாகியுள்ளதால், கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது இம்முறை வாகன இறக்குமதியால் கிடைக்கும் வரி வருமானம் குறையக் கூடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் ஓகஸ்ட் 15ஆம் திகதிக்குப் பின்னர் வாகன இறக்குமதி கொள்கையை நீட்டிப்பது தொடர்பாக அரசாங்கம் எடுக்கும் தீர்மானம் முக்கியமானதாக இருக்கும் என அவர் தெரிவித்தார்.

மேலும், அதிக இறக்குமதி வரிகளை தொடர்ச்சியாக விதிப்பதை விட, அரச செலவினங்களை திறம்பட முகாமைத்துவம் செய்து பொருளாதார



சீர்திருத்தங்களை விரைவுபடுத்துவதன் மூலம் நாட்டின் வரி வருவாயையும் பொருளாதார வளர்ச்சியையும் மேம்படுத்த முடியும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

(அ)

## பறவை மோதியதால் பரபரப்பு;

# இலங்கையிலிருந்து பறந்த விமானம் அவசர அவசரமாகத் தரையிறக்கம்!

கொழும்பு, ஜூலை. 12

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து இஸ்தான்புல் நோக்கிப் பயணித்த டர்கிஷ் எயார்லைன்ஸ் விமானம், புறப்பட்ட சில நிமிடங்களிலேயே பறவை ஒன்றுடன் மோதியதாகக் கூறப்பட்டதை அடுத்து, நேற்று சனிக்கிழமை அவசரமாக மீண்டும் கட்டுநாயக்கவுக்குத் திரும்பியது.

விமானத்தின் கட்டுப்பாட்டு அமைப்புகள் வழமை போல் இயங்குவதாகவும், விமானத்திலிருந்த பயணிகள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் பாதுகாப்பாக இருப்பதாகவும் அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

ரி.கே. 731 என்ற விமான இலக்கத்தைக் கொண்ட எயார்பஸ் ஏ 330-300 ரக விமானமே இவ்வாறு அவசர தரையிறக்கத்திற்கு உள்ளாகியது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, தரையிறங்குவதற்கு முன்னதாக இந்த விமானம் இலங்கையின் மேற்கு கடற்கரைக்கு அப்பாலுள்ள வான்பரப்பில் மூன்று மணித்தியாலங்களுக்கும் மேலாக பறந்துகொண்டிருந்தது.

இந்த விமானத்தில் பறக்கும் போதே எரிபொருளை வெளியேற்றும் வசதி இல்லை என்பதால், தரையிறங்குவதற்கான எடையைக் குறைக்கும் பொருட்டு வான்பரப்பில் பறந்தபடி எரிபொருளை எரிக்க வேண்டியிருந்ததாக இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை தெரிவித்துள்ளது.

விமானம் தரையிறங்குவதற்கு முன்னதாக, நிலையான செயல்பாட்டு நடைமுறைகளின்படி பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் அவசரகால மீட்பு மற்றும் தீயணைப்புப் பிரிவினர் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர்.

(அ)

# ஓமந்தையில் 27 மில்லியன் ரூபா செலவில் புதிய வகுப்பறை கட்டடத்துக்கு அடிக்கல்!



வவுனியா, ,ஜூலை. 12

வடக்கு மாகாணப் பிள்ளைகளுக்கு தரமான கல்வியை வழங்குவதற்காக அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் பாடசாலை அபி விருத்தி வேலைத் திட்டத்தின் கீழ், வவுனியா ஓம ந்தை மத்திய மகா வித்தியாலயத் தின் புதிய மாடிக் கட்டடத்துக் கான அடிக்கல் நாட்டு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.திலகநாதன், எம். ஜெகதீஸ்வரன் மற்றும் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சன் ஆகியோரின் தலைமையில் இவ்வேலைத்திட்டம் நடைபெற்றது.

மாகாண திறைசேரி அபிவிருத்தி நிதியத்தின் கீழ் 40 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள இம்மாடிக் கட்டடத்துக்காக முதற்கட்டமாக 27 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், இரண்டு வருட காலப்பகுதிக்குள் இதன் கட்டுமானப் பணிகளை நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஓமந்தை மத்திய மகா வித்தியாலயத்தில் சுமார் 300 மாணவர்கள் கல்வி கற்று வருவதுடன், அவர்களுக்காக ஆய்வகம் உள்ளிட்ட நவீன வசதிகளுடன் கூடிய ஸ்மார்ட் வகுப்பறைகள் இதில் நிர்மாணிக்கப்படவுள்ளன.

(அ)

# நீர்கொழும்பு சிறைச்சாலை வன்முறையில் உயிரிழந்த அதிகாரிகளுக்கு பதவி உயர்வு!

கொழும்பு, ஜூலை. 12

நீர்கொழும்பு சிறைச்சாலை மோதலில் உயிரிழந்த 8 அதிகாரிகளுக்கு சிறைச்சாலைகள் திணைக்களம் பதவி உயர்வு வழங்கியுள்ளது.

நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற துயரச் சம்பவத்தில் 8 சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் 21 கைதிகள் உயிரிழந்தனர்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மோதலில் உயிரிழந்த 8 சிறைச்சாலை அதிகாரிகளுக்குப் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

கொல்லப்பட்ட இரண்டாம் நிலை சிறைச்சாலை அதிகாரி எஸ்.எச்.எஸ். சந்திரவன்ஸ முதல் நிலை சிறைச்சாலை அதிகாரியாகவும், ஏனைய காவலர்கள் சார்ஜன்ட் பதவிகளுக்கும் உயர்த்தப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

(அ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சிறைக்குள் மோதலில் ஈடுபட்ட கைதிகள் மீது கொலை வழக்கு!

## விரைவில் தாக்கல் செய்ய பொலிஸ் நடவடிக்கை

கொழும்பு, ஜூலை. 12

நீர்கொழும்பு சிறைச்சாலையில் எட்டு சிறைச்சாலை அதிகாரிகள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக, அதனுடன் தொடர்புபட்ட கைதிகளுக்கு எதிராக கொலைக் குற்றச்சாட்டுகளின் கீழ் விரைவில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



இந்தக் கொடூரமான குற்றச் செயலை 'சுரேஷ்' மற்றும் 'பூருமூனா' உள்ளிட்ட 13 முக்கிய பாதாள உலகக் குற்றவாளிகள் முன்னின்று வழிநடத்தியுள்ளமை விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இச்சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், அங்குள்ள சி.சி.ரி.வி. வீடியோ காட்சிகளும் விரிவாக ஆராயப்பட்டு வருகின்றன.

வன்முறையில் ஈடுபட்ட கைதிகள் தொடர்பான தகவல்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

கைதிகள் சிலரின் கைகளுக்குத் துப்பாக்கிகள் எவ்வாறு கிடைத்தன என்பது குறித்தும், நீர்கொழும்பு சிறைச்சாலையின் ஆயுதக் களஞ்சியசாலை தொடர்பிலும் பொலிஸார் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

# நாளை முதல் நெல் கொள்வனவு

கொழும்பு, ஜூலை. 12

நெல் கொள்முதல் நடவடிக்கைகள் நாளை திங்கள்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, நாடு தழுவிய ரீதியில் அறுவடை செய்யப்பட்ட நெல்லை அரச கொள்முதல் நிலையங்கள் ஊடாக கொள்வனவு செய்வதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# டெங்கு வைரஸை எதிர்த்துப் போராட சிறப்பு ஆயுர்வேத மருந்துகள் தயாரிப்பு

கொழும்பு, ஜூலை. 12

டெங்கு வைரஸை எதிர்த்துப் போராடுவதற்காக சிறப்பு ஆயுர்வேத மருந்துகள் உருவாக்கப்பட்டுள்ளதாக அரசாங்க ஆயுர்வேத மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அரசாங்க ஆயுர்வேத மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் உபுல் கொன்தசிங்க, பொதுமக்களினதும் டெங்கு நோயாளர்களினதும் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிப்பதற்காக இந்த மருந்துகள் தயாரிக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

டெங்கு பரவலைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளின் ஒரு பகுதியாக, மேல் மாகாண ஆயுர்வேதத் திணைக்களம் ஒரு புதிய மருந்தை அறிமுகப்படுத்தி, அதனை மாகாணத்தில் உள்ள வீடுகளுக்கு விநியோகித்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

புகைமூட்டம் மூலம் நுளம்புகளை ஒழிக்கும் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படும் தூள்களையும் இத்திணைக்களம் விநியோகித்து வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த பொருள்களை தயாரிப்பதற்கும் விநியோகிப்பதற்கும் அரசாங்க நிதி செலவிடப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டிய கொன்தசிங்க, விநியோகிக்கப்படும் பொருள்களை தூக்கி எறிய வேண்டாம் என பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டார்.

# கண்டியிலும் விரைவில் மெட்ரோ பஸ் சேவைகள்

கொழும்பு, ஜூலை. 12

கண்டி மாநகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும், பொதுப் போக்குவரத்து வசதிகளை நவீனப்படுத்தவும் மெட்ரோ பஸ் சேவையை அறிமுகப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

போக்குவரத்துத் துறையை மேம்படுத்துவதற்காக முன்னெடுக்கப்பட்டு வரும் திட்டங்களின் ஒரு பகுதியாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

மத்திய அதிவேக நெடுஞ்சாலைப் பணிகள் கலகெதர வரை விரிவுபடுத்தப்பட்டு வருகின்றன.

இதனைத் தொடர்ந்து, குறித்த பாதையைக் கன்னொருவ வரை இணைப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை கலகெதர - கட்டுகஸ்தோட்டைப் பாலத்தை அகலப்படுத்தும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

அத்துடன், பேராதனைப் பாலத்துக்கு அருகில் இரண்டு மேம்பாலங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த நிலையில், பழமையான பேராதனைப் பாலத்தைப் புனரமைக்கும் பணிகள் இந்த வருட இறுதிக்குள் நிறைவு செய்யப்படும் என அமைச்சர் குறிப்பிட்டார்.

கண்டி மாநகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதையும், பொது மக்களின் பயண வசதிகளை நவீனமயப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டே இந்தத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க சுட்டிக்காட்டினார். (அ)

# நீர்கொழும்பில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சகல பெண் கைதிகளும் வேறு சிறைகளுக்கு!

கொழும்பு, ஜூலை. 12

நீர்கொழும்பு சிறைச்சாலையில் அண்மையில் ஏற்பட்ட வன்முறை மோதல்களின் போது உள்கட்டமைப்புகளுக்கு ஏற்பட்ட பாரிய சேதங்கள் காரணமாக, அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த அனைத்துப் பெண் கைதிகளும் ஏனைய சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட்டுள்ளதாகச் சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

நீர்கொழும்பு சிறைச்சாலையில் தற்பொழுது எஞ்சியிருக்கும் சுமார் 700 ஆண் கைதிகளையும் மிகத் துரிதமாக ஏனைய சிறை வசதிகளுக்கு மாற்றி, ஒட்டுமொத்தச் சிறை வளாகத்தையும் கைதிகள் எவருமற்ற ஒரு வெற்று வலயமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் ஏ. சி.கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளுக்கும் இடையே ஏற்பட்ட கொடூர மோதல்களில் எட்டு சிறை உத்தியோகத்தர்கள் மற்றும் 21 கைதிகள் உட்பட மொத்தம் 29 பேர் உயிரிழந்ததுடன், நூற்றுக்கும் மேற்பட்டோர் பாரிய காயங்களுக்கு உள்ளாகியிருந்தனர்.

2400 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்தச் சிறை வளாகம் தற்போதைய நிலையில் கைதிகளை வைத்திருப்பதற்கு முற்றிலும் தகுதியற்றது என நீதி அமைச்சு உத்தியோக பூர்வமாக பிரகடனம் செய்துள்ளது. (அ)

# பல்கலை வெட்டுப்புள்ளி ஓகஸ்ட் முதல் வாரத்தில்!

கொழும்பு, ஜூலை. 12

கடந்த கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை விதிகளுக்கு அமைவாக, பல்கலைக்கழகப் பிரவேசத்துக்கான ஆகக் குறைந்த புள்ளி விவரங்கள் அதாவது வெட்டுப்புள்ளிகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தின் முதலாவது வாரத்தில் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படும் எனப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கடந்த கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை விதிகளுக்கு அமைவாக, பல்கலைக் கழகப் பிரவேசத்திற்கான ஆகக் குறைந்த புள்ளி விவரங்கள் அதாவது வெட்டுப்புள்ளிகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தின் முதலாவது வாரத்தில் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படும் எனப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் பேராசிரியர் வசந்த லியனகே நேற்று காலை விடுத்துள்ள விசேட அறிவிப்பில், இந்த ஆண்டுக்கான பல்கலைக்கழகப் பிரவேசத்திற்காக மொத்தம் 92,043 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக குறிப்பிட்டார்.

இவற்றுள் தகுதி மற்றும் திறமைகளின் அடிப்படையில் 422937 மாணவப் பரீட்சார்த்திகளுக்கு பல்கலைக்கழகங்களுக்குள் நுழைவதற்கான உத்தியோகபூர்வ அனுமதி இம்முறை முழுமையாக வழங்கப்படவுள்ளது. (அ)

# குழந்தை பிறப்பு வீதம் இலங்கையில் வீழ்ச்சி!



கொழும்பு, ஜூலை. 12

நாட்டில் குழந்தை பிறப்பு வீதம் தொடர்ந்து குறைந்து வருவதால், குழந்தை பிறப்பு எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கில் குடும்பங்களுக்கு ஊக்கத்தொகை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என வலியுறுத்தும் தனிநபர் பிரேரணை ஒன்றை ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா முன்வைத்துள்ளார்.

2018 ஆம் ஆண்டு முதல் இலங்கையின் வருடாந்த குழந்தை பிறப்பு எண்ணிக்கை தொடர்ச்சியாக குறைந்து வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலை தொடருமானால், எதிர்காலத்தில் இளைஞர் சனத்தொகை குறைவடைந்து, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் உற்பத்தித் திறனுக்கும் பாதகமான விளைவுகள் ஏற்படக்கூடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

எனவே, குழந்தை பிறப்பை ஊக்குவிக்கும் வகையில் குடும்பங்களை கவரக்கூடிய நிதி ஊக்கத்திட்டத்தை அரசாங்கம் அறிமுகப்படுத்த வேண்டும் என தனது தனிநபர் பிரேரணையில் அவர் வலியுறுத்தியுள்ளார்.

### கண்டி பிரதான வீதியில் விபத்து; இரண்டு இளைஞர்கள் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை. 12

கொழும்பு - கண்டி பிரதான வீதியின் படலீய சந்திப்பகுதியில் இடம்பெற்ற கோர விபத்தொன்றில் இளைஞர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிள் ஒன்று, கொழும்பு திசையிலிருந்து அநுராதபுரம் நோக்கிச் சென்ற தனியார் பஸ் மற்றும் லொறியில் மோதி இந்த விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் பலத்த காயமடைந்த இளைஞர்கள் இருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளனர்.

ரதாவடுன்ன பிரதேசத்தைச் சேர்ந்த 20 மற்றும் 21 வயதுடைய இளைஞர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு

Eelanadu 12.07.2026 ஞாயிற்றுக்கிழமை ஈழநாடு

பராபவ வருடம், ஆனி 28

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## எதிரணியின் நம்பிக்கையில்லாப் பிரேரணைகள்

நீர்கொழும்பு சிறைக் கலவரத்தை தொடர்ந்து அரசாங்கத்துக்கும் எதிரணி கட்சிகளுக்கும் இடையில் மூண்டிருக்கும் "அரசியல் கலவரம்" அடுத்த கட்டத்துக்கு நகருகிறது.

சிறைக் கைதிகளின் பாதுகாப்பு தொடர்பில் தனக்கு இருக்கும் பொறுப்புணர்வையும் பொறுப்புக்கூறும் கடப்பாட்டையும் நிறைவேற்றுவதற்கு நீதியமைச்சர் ஹர்சன நாணயக்கார தவறிவிட்டதாக குற்றஞ்சாட்டி அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை பாராளுமன்றத்தில் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளில் எதிரணி கட்சிகள் இறங்கியிருக்கின்றன.

அந்த பிரேரணையில் எதிரணி பாராளுமன்ற உறுப்பினர்களுடன் சேர்ந்து எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச நேற்று முன்னதினம் வெள்ளிக்கிழமை கைச்சாத்திட்டிருக்கிறார்.

சிறைச்சாலை கட்டமைப்புக்குள் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் உள்ள குறைபாடுகளுக்கு நீதியமைச்சரை நேரடியாகப் பொறுப்புக்கூற வைப்பதே நம்பிகமகையில்லாப் பிரேரணையின் நோக்கமாகும் என்று எதிரணி பாராளுமன்ற உறுப்பினர்கள் கூறியிருக்கிறார்கள்.

நீர்கொழும்பு சிறைக் கலவரத்துக்கு முற்று முழுதான பொறுப்பை தான் ஏற்றுக் கொள்வதாக, அந்த கலவரம் முழுமையாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்படுவதற்கு முன்னதாகவே கடந்த திங்கட்கிழமை அமைச்சர் நாணயக்கார பகிரங்கமாக அறிவித்திருந்தார். என்றாலும் எதிரணி கட்சிகள் அவர் உடனடியாகப் பதவி விலக வேண்டும் கோரிக்கை விடுத்தன.

ஆட்சி நிருவாகத்தில் ஏதாவது தவறு நடந்து விட்டால் அரசாங்கம் பதவி விலக வேண்டும் அல்லது தவறு இடம் பெற்ற துறைக்குப் பொறுப்பான அமைச்சர் பதவி விலக வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் கோரிக்கை விடுப்பது வழமையானதாகும்.

அதேபோன்று அரசாங்கங்களுக்கும் அமைச்சர்களுக்கும் எதிராக பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் கொண்டு வரப்படுவதும் வழமையானதாகும்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பதவிக்கு வந்த பிறகு கடந்துவிட்ட சுமார் 20 மாதகாலப் பகுதியில் எதிரணி கட்சிகள் சில நம்பிக்கையில்லாப் பிரேரணைகளை கொண்டு வந்தன. ஆனால், எந்தவொரு பிரேரணையும் வெற்றி பெற்றதில்லை. இருந்தாலும், அந்த கட்சிகள் அத்தகைய பிரேணைகளைக் கொண்டுவரும் முயற்சிகளைக் கைவிடுவதில்லை.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு பாராளுமன்றத்தில் இருக்கும் மூன்றில் இரண்டுக்கும் அதிகமான பெரும்பான்மைப் பலம் காரணமாக எதிரணி கட்சிகளினால் கொண்டு வரப்படக்கூடிய எந்தவொரு நம்பிக்கையில்லாப் பிரேரணையும் பாராளுமன்றத்திற்குள் நுழையும்போதே தோல்வியடைவது உறுதியானதாகும்.

இறுதி முடிவு உறுதியான தோல்வி என்றிருக்கையில், எதிரணி கட்சிகள் நீதியமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவது அது தொடர்பான விவாதத்தில் அரசாங்கத்துக்கு எதிராக ஒரு நாள் முழுவதும் அல்லது சில வேளைகளில் அதற்கும் கூடுதலான நாட்கள் பேசுவதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொள்வதற்கேயாகும்.

நம்பிக்கையில்லா பிரேரணைகளை கொண்டுவரும் முயற்சிகளினால், எந்தப் பயனும் இல்லை என்ற எண்ணம் மக்கள் மத்தியில் ஏற்படுவது எதிரணி கட்சிகளுக்கே பாதகமாக அமையலாம்.

முறைகேடுகள் அல்லது தவறுகள் இடம்பெற்றதற்கான வலுவான, மறுக்க முடியாத ஆதாரங்கள் இல்லாமல் அடிக்கடி நம்பிக்கையில்லா பிரேரணைகள் கொண்டு வரப்படும் போது அது, ஏற்கெனவே கடுமையாகப் பலவீனப்பட்டிருக்கும் எதிரணி கட்சிகள் குறித்து மக்கள் மத்தியில் மேலும் சலிப்பை ஏற்படுத்தும் ஆபத்தையும் கொண்டிருக்கிறது.

# யாழ்ப்பான பல்கலைக்கழக பேராசிரியர் மீதான குற்றச்சாட்டு; உண்மை நிலைமை என்ன?

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் திட்டமிட்ட ரீதியில் பேராசிரியரும் முன்னாள் பீடாதிபதியுமான ஒருவருக்கு எதிராகப் உண்மைக்கு மாறான குற்றச்சாட்டுகளைப் பெற்று, அதன்மூலம் அவரது பணியிடை விடுப்பு உட்பட அடிப்படை உரிமைகளை வழங்காதிருக்க அல்லது இழுத்தடிக்க பல்கலைக்கழக நிர்வாகத்தினால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகத் தெரியவருகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 2021ஆம் ஆண்டு ஊடகக் கற்கைகளில் பட்டப்படிப்பை முடித்து வெளியேறியிருந்த மாணவி ஒருவர், 2022ஆம் ஆண்டில் தற்காலிக செய்முறை காட்டுநராக நியமனம் பெற்றிருந்தார். அவரது பதவிக் காலத்தின் பின்னர், 2024 மார்ச் மாதம் வரை வருகைதரு செய்முறை காட்டுநராக அவருக்கு குறித்த மணிநேரங்களுக்கு பணியாற்ற ஏனைய கற்று வெளியேறிய மாணவர்களுடன் இணைந்ததாக பல்கலைக்கழக விதிமுறைகளின் கீழ் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

இக்காலப் பகுதிக்குப் பின்னரும் பதவி நீடிப்பு வழங்கப்படாதிருந்த பட்சத்தில், தனக்கான பதவி நீடிப்பைப் பெற்றுக்கொள்ள அவர் பல முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். இது தொடர்பில், குறித்த துறைப் பேராசிரியர், கலைப்பீடத்தின் பீடாதிபதியாக நியமனம் பெற்றிருந்தபோது, அவரது அலுவலக நேரங்களிலும், அவரது வீட்டுக்கும் சென்று, குறித்த பெண் மெற்கொண்ட சச்சரவுகளின் அடிப்படையில் அந்தப் பெண்ணுக்கு எதிராக, யாழ்ப்பாணம் பெண்கள் மற்றும் சிறுவர் பொலிஸ் பகுதியிலும், வட்டுக்கோட்டை மற்றும் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையங்களிலும் பேராசிரியரால் பொலிஸ் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. குறித்த பெண்ணின் தாயார் மற்றும் சகோதரனை அழைத்த பொலிஸார், அவர்கள் மூலமும் அந்தப் பெண்ணின் தொந்தரவு நடவடிக்கைகள் தொடராதிருக்க எச்சரிக்கை செய்திருந்தனர். அவ்வாறு, 2024ஆம் ஆண்டு முதல் 2026 ஏப்ரல் மாதம் வரை இதுவரை நான்கு பொலிஸ் முறைப்பாடுகள் அந்தப் பெண்ணுக்கு எதிராக பேராசிரியரால் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறான சந்தர்ப்பத்தில், தான் தற்காலிகமாகப் பணியாற்றியபோதும், குறிப்பாகக் கடமையில் இல்லாத 2025ஆம் ஆண்டளவிலும் தனக்கு குறித்த பேராசிரியரால் பால் நிலைத் தொந்தரவு அளிக்கப்பட்டதாக உட்பட பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்து, குறித்த பெண் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவிற்கும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கும் புகார்க் கடிதங்களை அனுப்பியிருந்தார்.

இதுபற்றி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தனக்குக் கிடைத்த கடிதத்தை தனது வழமையான நெறிமுறைகளின் கீழ், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பால்நிலை ஒப்புரவு மையத்திற்கு அனுப்பியிருந்தது. குறித்த பெண்ணின் புகார் கடிதத்தை ஆராய்ந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பால்நிலை ஒப்புரவு மையம், தனது பணி ஒதுக்கல்களின்படியும், வழங்கப்பட்ட சட்ட உபவிதிகளின்பேரிலும் அப் புகார் கடிதத்தை ஏற்றுக்கொள்வதிலுள்ள சிக்கல்களை மானியங்கள் ஆணைக்குழுவிற்கும், துணைவேந்தருக்கும் தெரிவித்திருந்தது.

அதன்படி, குறித்த பெண் ஓர் பல்கலைக் கழக மாணவராகவோ, அல்லது பணியாளராகவோ இல்லாததும், அவ்வாறன போது அந்தப் புகாரை ஏற்பது, அப் புகார் தவறானதாக அல்லது வேண்டுமென்றே புனையப்பட்டதாக இருக்கும் பட்சத்தில் அந்தப் பெண்ணுக்கு எதிராக சட்ட உபவிதிகளின்படி நடவடிக்கை எடுக்க முடியாத நிலையையும் விளக்கியதோடு மாத்திரமல்லாது, காலதாமதமாக இவ்வாறான புகார் வேண்டுமென்றே கொண்டு வரப்பட்டதன் நியாயத்தின் பேரிலும் கேள்விகள் எழுப்பப்பட்டிருந்தன என அறியமுடிகின்றது. இதன்படி, வழமையாக இவ்வாறான விசாரணைகளை மேற்கொள்ளும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பால்நிலை ஒப்புரவு மையம் குறித்த பெண்ணின் புகாரை ஏற்பதிலிருந்து விலகிக்கொண்டது.

ஆனால், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் தனக்கு அனுப்பப்பட்ட கடிதம் மூலம் தனது நியாயாதிக்கத்தின்படி விசாரணைகளை மேற்கொள்வதாக, பல்கலைக்கழகப் பேரவைக்குத் துணைவேந்தர் தனது முடிவினை அறிவித்திருந்தார் என அறியமுடிகின்றது. இந்த விசேட விசாரணை, ஆரம்பத்தில் தகவல் பெற்றுக் கொள்ளும் விசாரணையாக ஆரம்பித்து பின்னர் முதனிலை விசாரணையாக அழைப்பாணைக் கடிதங்களில் குறிப்பிடப்படும் நிலை வரை தொடர்ந்திருந்தது.

இந்த விசாரணையில், துணைவேந்தரின் நேரடி தலையீடு ஆரம்பத்திலிருந்தே இருந்து வந்ததாக பல்கலைக்கழக வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது. விசாரணை ஒன்று அதனை ஒழுங்குபடுத்தும் அதிகாரிக்கு வழங்கப்பட முன்னரே, குறித்த புகாரினை அளித்த பெண்ணை நேரடியாகத் தொலைபேசி மூலம் அழைத்து, அவரது அடையாளத்தை உறுதிப்படுத்தியது முதல், சாட்சிகளைப் பிரேரிக்கும் உரிமையையும் பல்கலைக்கழகத்திற்கு வெளிநபரான அந்தப் பெண்ணிடம் உறுதிப்படுத்தியது என பல விதிமுறை மீறல்கள் இங்கு அடையாளம் காணப்படத் தொடங்கின.

குறித்த பேராசிரியருக்கு, 24 மணி நேரங்களுக்குள் விசாரணைக்குச் சமூகமளிக்குமாறு பல்கலைக்கழக நிர்வாகத்தால் விடுமுறை நாளில் மின்னஞ்சல் மூலம் அழைக்கப்பட்டது, ஏன் விசாரணைக்கு அழைக்கப்படுகின்றார் என்ற விவரங்கள் ஏதும் தரப்படாமலே அழைப்பாணைக் கடிதம் வெறுமனே குறித்த பெண் அளித்த புகார் பேரிலானது எனக் குறிப்பிடப்பட்டிருந்தது, மேலதிக விபரம் கோரப்பட்ட போதும் அதுபற்றிய தகவல்கள் உத்தியோகபூர்வமாக விசாரணை தொடங்கப்படும்வரை வழங்கப்படாதது, தகவல் சேகரிப்பு முறையா அல்லது முதனிலை விசாரணையா என்பதில் நிலவிய குழப்பங்கள், தற்போது வெளியாராக இருக்கும் நபர் தான் பணியிடத்தில் இல்லாத காலப்பகுதியில் நடைபெற்றதாகக் குறிப்பிடப்படும் செயற்பாடு தொடர்பில் அளித்த புகாரை பல்கலைக் கழகம் வலிந்து ஏற்றுக்கொண்டது, பல முரண்பாடுகள் கொண்ட புகார்க்கடிதம் குறிப்பாக புகார் அளித்த பெண்ணின் பெயரே பிழையாகக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது, பல்கலைக்கழகமொன்றின் விசாரணையில் வெளியாரான குறித்த பெண் தனது சாட்சியங்களாகப் பெயர் குறிப்பட்டவர்களை பல்கலைக்கழகம் ஏற்றுக்கொண்டு விசாரணைக்கு அழைத்தமை, கல்விசார் பணியாளரான பேராசிரியர் மீதான விசாரணைக்குச் சாட்சியாளராக அந்தப் பெண்ணே பெயர் குறிப்பிட்டிருந்த பரிசோதனைக்கூட உதவியாளரையும் அழைத்து விசாரணை செய்தமை, அந்தரங்க விசாரணை எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதும் விசாரணை விடயங்கள் வெளியே திட்டமிட்டே கசியவிடப்பட்டமை, விசாரணைச் சாட்சியங்கள் எவற்றிலும் அவை குறிப்பெடுக்கப்பட்டு கையெழுத்துப் பெறப்படாமை எனப் பல குழறுபடிகள் இந்த விசாரணைகளில் இடம்பெற்றிருந்தன.

இவ்வாறான சூழலில், விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகள் தொடர்பிலும் சிக்கல்கள் காணப்படுகின்றன. இந்த விசாரணை அறிக்கை இதுவரை மானியங்கள் ஆணைக்குழுவிற்கும் பேரவைக்கும் தரப்பட்டதாகக் கூறப்பட்டாலும், அந்தப் பரிந்துரைகளில் முக்கியமாகக் குறிப்பிடப்பட்டிருந்த குறித்த பெண் சமர்ப்பித்திருந்ததாகக் கூறப்படும் ஒலிப்பதிவின் உண்மைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மை உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதும், அந்தப் பெண்ணின் புகார்களில் காணப்படும் முரண்பாடுகளின் அடிப்படையில் அவை முன்னுக்குப் பின்

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்...)

- மனோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## வாரம் ஒருசிந்தனை 7

# தீட்டு, தீண்டு, தொடக்கு, துடக்கு.

*மறவன்புலவு க சச்சிதானந்தன்*

தீ தீட்டு தீண்டு தீது தீமை தீர்ப்பு தீரன் தீவு தீனியாவும் தீ... எனும் தமிழ் எழுத்தில் தொடங்கும் சொற்கள்.

கேடுதருவன, அழிவு தருவன, ஒழிந்து போவன, என பொருள் தொக்கி மறைந்து வருகின்றன.

பாம்பு தீண்டி இறந்தான். தீமை தருவதால் தீண்டல்.

அரபுப் பாலைவனத்தில் ஏமன் நாடு. மனிதக் கழிவுகள் அகற்றுவோர் சமூகம். அல் அத்தம் என்ற அரபுச் சமூகம். முகமதிய சமூகம்.

அவர்கள் தீண்டாதவர்.பாம்பையும் அல் அத்தத்தையும் கண்டால், அல் அத்தத்தைகொல் என்ற வழமையும் ஏமனில் முன்பு.

உன் தோல் நிறம் கறுப்பா? என்னை நெருங்காதே என் வீட்டுக்குள் வராதே. நான் போகும் தெருவில் போகாதே, நான் வாழும் ஊர்களுக்குள் நுழையாதே. வடஅமெரிக்காவில் ஒரு நூற்றாண்டுக்கு முன்பு. தென்னாபிரிக்காவில் அரைநூற்றாண்டுக்கு முன்பு.

கண்டால் தீட்டு.தொட்டால் தீட்டு.

அரபு நாட்டிலும் தென்னாபிரிக்காவிலும் அமெரிக்காவிலும் கைக் கொண்ட தீண்டாமை, தீட்டு உடல் நலம் சார்ந்ததாகவே தொடங்கியது.

கழிவுஎன்றால் 1) நுண்மிப் எசைரள பெருக்கம், 2) நுண்ணுயிரிப் bacteria பெருக்கம்.கண்ணுக்குத் தெரியாதன நுண்மிகள், நுண்ணுயிர்கள். அவற்றுள் சிலவால் மனிதருக்கு நன்மை, சிலவால் மனிதருக்குத் தீமை.

தீமை தரும் நுண்மிகளே நுண்ணுயிர்களே,தொற்றிக் கொள்ளும் நுண்மிகளே நுண்ணுயிர்களே, தீண்டாமையின் வேர்தீட்டின் தொடக்கம்.

காற்றோடுவந்து தொற்றுவன சிலநுண்மிகள் நுண்ணுயிர்கள். தொட்டால் தொற்றுவன சில நுண்மிகள் நுண்ணுயிர்கள்.

தொற்றில் இருந்து தடுக்கவே தீண்டாமை, தீட்டு. நல்ல வழமை முதலில் நம்பிக்கையானது. பின்னர் மூட நம்பிக்கையானது. அடுத்தே சமூக வேறுபாடு.

ஏமனில் அல் அத்தர் சமூகமே தீண்டத் தகாதவர். தென்னாபிரிக்காவில் கறுப்பு நிறத்தவரே தீண்டத்தகாதவர். வடஅமெரிக்காவில் அடிமைக் கறுப்பரே தீண்டத்தகாதவர். தென்னாப்பிரிக்காவிலும் வடஅமெரிக்காவிலும் அரசுச் சட்டங்களாயின தீட்டு, தீண்டாமை.

தெற்காசியாவில் சாதிக் கோட்பாட்டின் தொடக்கம் தீமைபயக்கும் தொற்று நுண்மிகளும் நுண்ணுயிர்களும். நம்பிக்கைகளாகி மூடநம்பிக்கைகளாகி வண்ண பேதங்களாகி மனு நீதியும் ஆயின.

575 ஆண்டுகளுக்கு முன்பு காஞ்சிபுரத்துக்கு மேற்கே களந்தையில் பிறந்தவர். வடக்கே திருப்பதிக்குக் கிழக்கே கண்ணப்பர் வாழ்ந்த திருக்காளத்தியில் சிலகாலம் வாழ்ந்தவர். பின்னர் தில்லையை வாழ்விடமாகக் கொண்டார்.பெயர் மறைஞானசம்பந்தர்.

1) பதிபசுபாசப் பனுவல், 2) சிவதருமோத்தரம், 3) அருணகிரிபுராணம், 4) கமலாலயமான்மியம், 5) முத்திநிலை 6) அட்டாங்கயோகம் என்பன இவர் இயற்றிய நூல்களுள் சில.

தீட்டுக் கொள்கைதொடர்பாகமறைஞானசம்பந்தர் எழுதியுள்ளார்.சிவதருமோத்தரம் நூலின் 11ஆவது தலைப்பு,பரிகார இயல்.

முதல் முப்பதுபாடல்களும் தூய்மையற்ற வாழ்வியலைக் கூறுவன. தீட்டுச் சார்ந்தநிலையைக் கூறுவன. தூய்மையற்ற நிலையிலிருந்து தூய்மைபெறுவது. தீட்டில் இருந்துவிடுபடுவது பரிகாரம்.

தீ நுண்மிகள் தீநுண்ணுயிர்கள் காற்றுவழியும் தொடுதல் வழியும் தொற்றாமல் இருக்கவழிகளைச் சொல்கின்றன. அவை தொற்றினால் நீக்கும் வழிகளையும் சொல்கின்றன.

மருத்துவமனையில் அறுவைக்கூடம், தீவிரநலம்பேண் பிரிவு,தொற்றுக் காப்புபிரிவு ஆகிய இடங்களுக்குரிய வழிகாட்டல்கள். உள்ளே யார் போகலாம்? யார் போகக் கூடாது யார் போனால் தீட்டு. விவரக் கோவை இருக்கும் அல்லவா? அவற்றை 575 ஆண்டுகளுக்கு முன்பு சொன்னவரே மறைஞானசம்பந்தர்

சிவதருமோத்தரம் 11 பரிகார இயலில், 30 பாடல்கள். அறிவியல் சார்ந்தபாடல்கள். அறிவுடையோருக்கு நம்பிக்கையாகப் பாடல்கள். அறிவிலிகளுக்கும் மூடர்களுக்கும் மூர்க்கர்களுக்கும் புரியும் மூடநம்பிக்கையாக அக்காலத்தில் தொகுத்துக் கொடுத்தவர் மறைஞானசம்பந்தர்.

883ஆம் பாடல்:

பிறப்பு இறப்பு இரண்டிலும்
பூசகருக்கு 10 நாள் தீட்டு.
அரசருக்கு 12 நாள் தீட்டு.
வணிகருக்கு 15 நாள் தீட்டு.
தீக்கைபெற்றோருக்கு 15 நாள் தீட்டு.
ஏனையோருக்கு 30 நாள் தீட்டு.
மறைஞானசம்பந்தர் சொல்கிறார்.

எட்டும் இரண்டும்
பிறந்தநாள் இறந்தநாளும்
இழுக்குஉண்டு
மறையோருக்கு
அரையருக்குஈராறுஉண்டு

எட்டுடன் ஏழ் ஏனையருக்கு
ஈர்எட்டுஒன்றும் ஊனம்
இயல் வழியில் இயங்கிடும்
சூத்திரனுக்கு இரட்டி

விட்டவருக்குவிதிபுதல்வி
தன்னுடனேபிறந்தநாள்
வேறுஅல்லாநன்மாமன்
எழுவாயாவியூகித்து

ஒட்டும் ஒரு மூன்றுநாள்
ஒழிந்தார்க்கு மூழ்கஒழியும் ஒரு
ஒருபதினைந்துள்
சிவகணிகையோர்க்கு.

சிவதருமோத்தரம் நூலில் மொத்தம் 1208 பாடல்கள்.சைவத்திருமடங்களில் தம்பிரான் அடிகளாராக இருப்பவர் இவற்றைமனப்பாடம் செய்யவேண்டும் என்பதுவிதி.

# இந்தவார ராசிபலன் 12.07.2026 - 18.07.2026

ஞாயிற்றுக்கிழமை
பராபவ வருடம் - ஆனி 28

நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : திரையோதசி

**மேஷம்** [ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

மேஷ ராசி அன்பர்களே, இந்த வார பலன் படி, குடும்பத்தில் உங்கள் மதிப்பு, மரியாதை உயரும். எதிர்பார்த்த வருமானமும் அதற்கேற்ற செலவுகளும் இருந்து கொண்டே இருக்கும். கணவன் மணவிடையே நெருக்கம் உண்டாகும். குடும்பத்தில் குதூகலமான சூழ்நிலை இருக்கும். வெளி நபர்களிடம் வீண் விவாதங்களில் ஈடுபட வேண்டாம். உத்யோகத்தில் மனநிறைவு ஏற்படும். தொழில், வியாபாரத்தில் மிதமான லாபம் இருக்கும்.

**ரிஷபம்** [ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

ரிஷப ராசி அன்பர்களே, இந்த வார பலன் படி, குடும்பத்தில் ஆடம்பர செலவுகள் நிறைய வரும். புது வாய்ப்புகள் உங்களை தேடி வரும். மற்றவர்கள் உங்களுக்கு தேடி வந்து உதவி செய்வர். உறவினர்களுடன் நல்லுறவு ஏற்படும். கணவன் மனைவிக்குள் நல்ல ஒற்றுமை இருக்கும். கடன் பிரச்சனை கட்டுக்குள் வரும். வெளிநாட்டு பயணங்களால் நிறைய ஆதாயங்கள் உண்டு. உங்களது செயல்கள் அனைத்தும் மற்றவர்களை கவரும்படி இருக்கும். உத்யோகத்தில் உயர்வு நிலை உண்டு. தொழில், வியாபாரத்தில் விரிவாக்கம் ஏற்படும்.

**மிதுனம்** [ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

மிதுன ராசி அன்பர்களே, இந்த வார பலன் படி, நீங்கள் தொடங்க நினைக்கும் புதிய முயற்சிகள் யாவும் சாதகமாக அமையும். சமூக நலனில் ஆர்வம் கூடும். கையில் எடுத்த வேலைகளை சரியான நேரத்தில் முடிக்க முடியும். கணவன் மனைவிக்கிடையே அன்யோன்யம் ஏற்படும். பண வரவு எதிர்பார்த்த அளவு இல்லாவிட்டாலும் தேவைகள் பூர்த்தியாகும். பொது காரியங்களில் ஈடுபாடு உண்டாகும். உத்யோகத்தில் உங்கள் கை ஓங்கும். தொழில். வியாபாரம் வழக்கம் போல் செல்லும்.

**கடகம்** [ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

கடக ராசி அன்பர்களே, இந்த வார பலன் படி, பொருளாதார நிலை உயர்வு தருவதாக அமையும். பொது ஜன தொடர்பு அதிகரிக்கும். குடும்ப பிரச்சனைகளை திறமையாக கையாள முடியும். கணவன் மனைவிடையே பனிப்போர் ஏற்படும். கொடுக்கல், வாங்கலில் கவனமாக செயல்படுவது நல்லது. காரிய தடைகள் விலகும். அக்கம் பக்கம் உள்ளவர்களின் ஆதரவு பெருகும். உத்யோகத்தில் பதவி உயர்வு கிடைக்கும். வியாபாரத்தில் மந்த நிலை காணப்படும்.

**சிம்மம்** [ மகம், பூரம், உத்திரம் 1 ]

சிம்ம ராசி அன்பர்களே, இந்த வார ராசி பலன் படி, உங்கள் திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். மனதில் இனம் தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும்.உடல் உபாதைகள் நீங்கும். கணவன் மனைவிடையே இருந்த மன வருத்தம் நீங்கும். செலவுகள் அனைத்தும் கட்டுக்குள் இருக்கும். வாகனத்தில் மெதுவாக செல்லவும். குடும்பத்தில் இதமான சூழ்நிலை இருக்கும். உத்யோகத்தில் அமைதி நிலவும். தொழில், வியாபாரம் விருத்தியடையும்.

**கன்னி** [ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

கன்னி ராசி அன்பர்களே, இந்த வார பலன் படி, புது முயற்சிகள் வெற்றிகரமாக முடியும். மனதில் தைரியமும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். உடலில் உஷ்ணம் தொடர்பான பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்புண்டு. கணவன் மனைவிக்குள் நல்ல புரிதல் இருக்கும். குடும்பத்தில் ஆனந்தமும் குதூகலமும் நிலவும். பயணங்களால் வீண் அலைச்சல் ஏற்படும். வாக்குவாதங்களையும், அடுத்தவர் பற்றிய விமர்சனங்களை தவிர்ப்பது நல்லது. உத்யோகத்தில் ஆதரவு பெருகும்.வியபாரத்தில் மந்த நிலை இருக்கும்.

**துலாம்** [ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

துலாம் ராசி அன்பர்களே, இந்த வார பலன் படி, எந்த ஒரு காரியத்திலும் தன்னம்பிக்கையுடன் செயல்பட்டால் வெற்றி நிச்சயம். கணவன் மனைவிக்குள் நல்ல ஒற்றுமை இருக்கும். நிலுவையில் இருந்த பணம் கைக்கு திரும்ப வரும். கடன் சுமைகள் நீங்கி நிம்மதியான வாழ்க்கை முறைகள் உண்டாகும். யாரிடத்திலும் வீண் வாக்கு வாதங்களால் பகையை வளர்த்து கொள்ள வேண்டாம். இரவு நேர பயணங்களை தவிர்க்கவும்.

**விருச்சிகம்** [ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

விருச்சிக ராசி அன்பர்களே, இந்த வார ராசி பலன் படி, ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். நீங்கள் விரும்பிய காரியத்தை உடனுக்குடன் செய்து முடிக்கும் ஆற்றல் உண்டாகும். கடன் பிரச்சனைகள் தீர்வுக்கு வரும். வெளி உணவுகளை அறவே தவிர்க்கவும். கணவன் மனைவிக்குள் விட்டுக்கொடுத்தல் அவசியம். குடும்பத்தில் சண்டை, சச்சரவுகள் முடிவுக்கு வரும். மற்றவர்களுக்கு உதவப் போய் வீண் பிரச்னையில் சிக்கிக் கொள்ள வேண்டாம். உத்யோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும்.

**தனுசு** [ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

தனுசு ராசி அன்பர்களே, இந்த வார பலன் படி, நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த காரியம் சிறப்பாக நடக்கும். குடும்பத்தில் சந்தோஷமான சூழ்நிலை இருக்கும்.உடன்பிறந்தவர்களின் நலனில் அக்கறைகொள்ளவும். வீடு, வாகன பராமரிப்பு செலவுகள் கூடும். பெண்கள் வகையில் சில பிரச்சனைகள் வர வாய்ப்புண்டு. குடும்பத்துடன் பயணிக்க விருப்பம் ஏற்படும். யாரையும் பகைத்துக் கொள்ள வேண்டாம். விலகி நின்றவர்கள் விரும்பி வந்து இணைவர். உத்யோகத்தில் பல சலுகைகள் கிடைக்கும்.

**மகரம்** [ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

மகர ராசி அன்பர்களே, இந்த வார பலன் படி, குடும்பத்தில் சற்றும் எதிர்பாராத பல நல்ல திருப்பங்கள் வரும். தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். சாதுர்யமாக பேசி எதிலும் வெற்றி பெற முடியும். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. நட்பு வட்டம் விரிவடையும். குடும்ப நபர்களை அனுசரித்து செல்வது நல்லது. வெளிநாடு சென்று வரும் யோகம் உண்டு. உத்யோகத்தில் உயர்வு நிலை உண்டு.

**கும்பம்** [ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

கும்ப ராசி அன்பர்களே, இந்த வார பலன் படி, குடும்ப விஷயத்திலும் மற்ற எல்லா விஷயத்திலும் கவனம் செலுத்துவது அவசியம். பொருளாதார சிக்கல் ஏற்பட்டு பின் சீராகும். கணவன் மனைவி இடையே இருந்த கருத்து வேற்றுமைகள் நீங்கும். கடன் வாங்குவதையும், கொடுப்பதையும் தவிர்க்கவும். யாருக்கும் ஜாமீன் கையெழுத்து போட வேண்டாம். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் நிம்மதியும் உண்டாகும். உத்யோகத்தில் கடுமையாக உழைக்க வேண்டி வரும்.

**மீனம்** [ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

மீன ராசி அன்பர்களே, இந்த வார பலன் படி, மனதில் பல நல்ல சிந்தனையும் அறிவாற்றலும் உண்டாகும். ஆன்மீக பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு கிட்டும். சமூக அந்தஸ்து உள்ளவர்களின் தொடர்பு கிட்டும். குடும்பத்தில் புது சொந்தங்களின் வருகை இருக்கும். வீட்டில் புது பொருள் சேர்க்கை உண்டாகும். தேவையற்ற செலவுகளால் கடன்கள் அதிகமாக வாய்ப்புண்டு. குடும்ப விஷயங்களில் மற்றவர்களின் தலையீட்டை அனுமதிக்க வேண்டாம். புதிய நபர்களுடன் பழகும் போது கவனம் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சமஷ்டித் தீர்வுக்கு இலங்கையை என்றைக்காவது இந்தியா வலியுறுத்துமா?



வீரகத்தி
தனபாலசிங்கம்

இலங்கையில் சமஷ்டி ஆட்சிமுறைக்காக எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க முதன் முதலாகக் குரல் கொடுத்து இந்த வருடத்துடன் சரியாக ஒரு நூற்றாண்டு நிறைவு பெறுகிறது. தனது யோசனைக்கு வடக்கு தமிழர்களின் ஆதரவை பெறுவதற்கு அன்று அவர் எடுத்த முயற்சி பயன் தரவில்லை. அவரது கோரிக்கைக்கு அன்று இனத்துவ அரசியல் பரிமாணம் ஒன்று இருக்கவில்லை. அன்றைய தமிழ் தலைவர்கள் பண்டாரநாயக்கவுடன் ஒத்துழைத்து சமஷ்டிக் கோரிக்கைக்காக பாடுபட்டிருந்தால் சிலவேளை இலங்கையின் அரசியல் வரலாறு நிச்சயமாக வேறுபட்டதாக இருந்திருக்கும்.

அதேவேளை, துரதிர்ஷ்டவசமாக, டொனமூர் அரசியலமைப்புக்கு பிறகு பெரும்பான்மை இனத்தவர்களின் வாக்குகளைப் பெற்று அதிகாரத்துக்கு வருவதற்காக, இனங்களுக்கு இடையிலான உறவுகள் படுமோசமாக சீர்குலைவதற்கு வழிவகுத்த தீவிரமான இனவாத கொள்கைகளை பண்டாரநாயக்க கடைப்பிடிக்காமல் இருந்திருந்தாலும் இலங்கையின் அரசியல் வரலாறு வேறு விதமாகவே இருந்திருக்கும்.

இலங்கையில் சமஷ்டி ஆட்சிமுறை தொடர்பான விவாதம் ஒரு நூற்றாண்டு வரலாற்றைக் கொண்டதாக இருக்கின்ற அதேவேளை, சமஷ்டி முறையின் அடிப்படையில் தங்களது பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்ற தமிழர்களின் கோரிக்கை முக்கால் நூற்றாண்டுக்கும் அதிகமான காலமாக நீடிக்கிறது.

எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையிலான இலங்கை தமிழரசு கட்சி சமஷ்டி ஆட்சிமுறைக் கோரிக்கையை முன்வைத்த போதிலும், கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் இரு வேறு அரசாங்கங்களுடன் சமஷ்டி முறைக்கு குறைவான தீர்வுகளை அடிப்படையாகக் கொண்ட ஒப்பந்தங்களைச் செய்து கொண்டது. செல்வநாயகத்துடன் அந்த ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்ட இரு பிரதமர்கள் தென்னிலங்கையின் சிங்கள இனவாத சக்திகளின் எதிர்ப்புக்கு மத்தியில், கனவான்களாக அரசியல் துணிவாற்றலை வெளிக்காட்ட முடியாதவர்களாக நம்பிக்கைத் துரோகம் செய்தார்கள்.

கொழும்பு அரசாங்கங்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி தேசிய இனப் பிரச்சினைக்கு இணக்கபூர்வமான அரசியல் தீர்வைக் காண்பது இனிமேலும் சாத்தியமில்லை என்ற ஒரு கட்டம் வந்ததும் தனிநாட்டுக் கோரிக்கை பிறந்தது. சமஷ்டி கோரிக்கையை முன்வைத்தபோது தமிழ் மிதவாத அரசியல் தலைவர்களிடம் அதை அடைவதற்கு நடைமுறைச் சாத்தியமான வழிவரை படம் ஒன்று இருக்கவில்லை. அதைப் போன்றே தனிநாட்டுக் கோரிக்கையை வென்றெடுப்பதற்கான எந்தவொரு திட்டமும் அவர்களிடம் இருக்கவில்லை.

இறுதியில், தனிநாட்டை அடைவதற்காக தமிழ் இளைஞர்களினால் முன்னெடுக்கப்பட்ட ஆயுதப் போராட்டம் உள்நாட்டுப் போராக மாறியதும் அதன் விளைவான பெருமளவு உயிரிழப்புகளும் அழிவுகளும் அண்மைக்கால வரலாறு. வட்டுக்கோட்டை (1976 மே 14) தீர்மானத்துக்கு பிறகு மூன்று தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக தமிழர் அரசியலில் 'மறக்கப்பட்டதாக' இருந்த சமஷ்டித் தீர்வுக் கோரிக்கை போரின் முடிவுக்குப் பின்னரான காலப் பகுதியில் மீண்டும் மேலெழுந்திருக்கிறது.

தேசிய இனப் பிரச்சினைக்கு சமஷ்டி முறையின் அடிப்படையில் நிலைபேறான அரசியல் தீர்வைக் காண வேண்டும் என்பதே இன்று சகல இலங்கை தமிழ் தேசியவாத அரசியல் கட்சிகளினதும் பிரதான கோரிக்கையாக இருக்கிறது. கோரிக்கை ஒன்றாக இருக்கின்ற போதிலும், இந்த கட்சிகளினால் தமிழ் மக்கள் சார்பில் ஒருமித்த நிலைப்பாட்டை முன்வைப்பதற்கு இணக்கப்பாட்டுக்கு வரமுடியவில்லை.

நோர்வேயின் அனுசரணையுடன் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் முன்னெடுக்கப்பட்ட சமாதானச் செயன் முறையின்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிருவாகத்துக்கும் விடுதலை புலிகளுக்கும் இடையில் வெளிநாடுகளில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் ஒரு கட்டத்தில் சமஷ்டி முறையின் அடிப்படையில் அரசியல் தீர்வைக் காண்பது குறித்து ஆராயத் தயாராக இருப்பதாக கூறப்பட்டதை தவிர, கொழும்பு அரசாங்கங்கள் ஒருபோதுமே தமிழ் அரசியல் தலைமைத்துவத்துடன் சமஷ்டித் தீர்வு குறித்து பேச்சுவார்த்தை நடத்தியதில்லை.

பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கம் முதலாவது குடியரசு அரசியலமைப்பை வரைவதற்காக அமைத்த அரசியல் நிருணய சபையிடம் தமிழரசு கட்சி சமர்ப்பித்த சமஷ்டி முறை யோசனை அடியோடு நிராகரிக்கப்பட்டது. 1972 மே 22 முதல் நடைமுறைக்கு வந்த அந்த அரசியலமைப்புத்தான் இலங்கையை ஒரு ஒற்றையாட்சி அரசு என்று பிரகடனம் செய்தது.

> தங்களது கோரிக்கைகள் தொடர்பில் உள்நாட்டில் ஜனநாயக ரீதியான மக்கள் இயக்கம் ஒன்றை முன்னெடுக்காமலும் முதலில் அரசாங்கத்தை அணுகாமலும் தமிழ்நாட்டில் ஆதரவைத் திரட்டுவதில் உள்ள பொருத்தப்பாடு குறித்து தமிழ் தேசிய பேரவை முதலில் தெளிவுபடுத்த வேண்டும். வடக்கு, கிழக்கில் எந்தவிதமான அரசியல் இயக்கத்தையும் முன்னெடுக்காமல் தமிழ்நாட்டு அரசியல் சக்திகளின் ஒருமைப்பாட்டை நாடுவதனால் மாத்திரம் எதைச் சாதிக்க முடியும்?



ஜனாதிபதி

ஜே.ஆர். ஜெயவர்தன தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் கொண்டு வந்த இரண்டாவது குடியரசு அரசியலமைப்பு (1978) நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை அறிமுகப்படுத்தியதுடன் ஒற்றையாட்சி முறையை மேலும் வலுப்படுத்தியது.

1987 ஜூலை இந்திய -- இலங்கை சமாதான உடன்படிக்கையின் விளைவாக கொண்டு வரப்பட்ட மாகாண சபை முறைமையுடனான தமிழர்களின் 38 வருடகால அனுபவம் ஒற்றையாட்சியின் கீழ் பயனுறுதியுடைய அதிகாரப்பகிர்வு சாத்தியமில்லை என்பதை தெளிவாக நிரூபித்திருக்கிறது.

இத்தகைய பின்புலத்தில், ஒற்றையாட்சி முறையை மாற்றி சமஷ்டி முறையின் அடிப்படையிலான அரசியலமைப்பு ஒன்றைக் கொண்டு வருவது மாத்திரமே இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு நிலைபேறான தீர்வாக அமையமுடியும் என்பதே சகல தமிழ் தேசியவாத அரசியல் கட்சிகளினதும் உறுதியான நிலைப்பாடாக இன்று இருக்கிறது. ஆனால், இந்த கட்சிகள் தங்களது கோரிக்கையை வெறுமனே வலியுறுத்தி வருகின்றனவே தவிர, உள்நாட்டில் அதை வென்றெடுப்பதற்கான அரசியல் வேலைத் திட்டம் எதையும் கொண்டிருப்பதாக தெரியவில்லை.

இலங்கை தமிழரசு கட்சியும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியும் தற்போது நடைமுறையில் இருக்கும் மாகாண சபைகளை அவற்றின் குறைபாடுகளுக்கு மத்தியிலும், பாதுகாத்துப் பயன்படுத்திக் கொண்டு நீண்டகால நோக்கில் சமஷ்டித்தீர்வை நோக்கிப் பயணிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டவையாக இருக்கின்றன.

அதேவேளை, தமிழ் தேசிய மக்கள் முன்னணியையும் வேறு சில குழுக்களையும் உள்ளடக்கிய தமிழ் தேசியப் பேரவை அதிகாரப் பகிர்வு விடயத்தில் மாகாண சபைகள் முறைமையை தொடக்கப்புள்ளியாகக் கூட கருதமுடியாது என்றும் ஒற்றையாட்சி அரசியலமைப்பு முறை ஒழிக்கப்பட்டு தமிழ் (தேசத்தின்) மக்களின் இறைமை யையும் சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரிக்கக்கூடிய சமஷ்டி முறை மாத்திரமே இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கு ஒரே வழி என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றது.

போர்க் காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்களுக்கு சர்வதேச சமூகத்தின் நெருக்குதலின் மூலமாக இலங்கை அரசைப் பொறுப்புக்கூற வைக்கலாம் என்ற நம்பிக்கையில் கடைப்பிடித்த அதே அணுகுமுறையையே தமிழ் கட்சிகள் அரசியல் தீர்வு விடயத்திலும் தற்போது கடைப்பிடிக்கின்றன. குறிப்பாக, இந்தியாவைக் கொண்டு நெருக்குதலைக் கொடுப்பதன் மூலமாக தாங் கள் விரும்பும் அரசியல் தீர்வை அடையலாம் என்று அவை நம்புகின்றன.

இந்திய தலைவர்களை குறிப்பாக வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் போன்ற இராஜதந்திரிகளைச் சந்திக்கின்ற வேளைகளில் எல்லாம் தமிழ் கட்சிகளின் தலைவர்கள் மாகாணசபை தேர்தல்களை மேலும் காலந்தாழ்த்தாமல் நடத்துவதற்கும் அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவும் இலங்கை அரசாங்கத்துக்கு நெருக்குதலைக் கொடுக்க வேண்டும் என்று கேட்பதுடன் நின்றுவிடுவதில்லை. சமஷ்டித் தீர்வொன்றைக் காண்பதற்கு கொழும்பை வலியுறுத்த வேண்டும் என்றும் அவர்கள் இந்தியாவிடம் வேண்டுகோள் விடுக்கத் தவறுவதில்லை.

சமாதான உடன்படிக்கையைத் தொடர்ந்து மாகாண சபைகளை அறிமுகப்படுத்துவதற்காக கொண்டுவரப்பட்ட 13 வது திருத்தத்தைக் கூட மூன்று தசாப்தங்களுக்கும் அதிகமான காலம் கடந்த நிலையிலும், முழுமையாக நடைமுறைப்படுத்தாமல் இருந்துவரும் இலங்கை அரசாங்கங்களிடம் சமஷ்டி முறையின் அடிப்படையில் தீர்வைக் காண்பது குறித்து எவ்வாறு பேசமுடியும் என்று ஜெய்சங்கர் கொழும்பில் தமிழ்

கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்த ஒரு சந்தர்ப்பத்தில் வெளிப்படையாக கேள்வியெழுப்பினார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்காக உள்நாட்டில் முன்னெடுக்கப்பட்ட எந்தவொரு முயற்சியும் வெற்றிபெறவில்லை. இந்தியாவின் நேரடித் தலையீடு இல்லையென்றால் மாகாணசபைகள் மூலமான அதிகாரப் பகிர்வு ஏற்பாடு கூட வந்திருக்காது. அவ்வாறிருந்தும், இதுநாள்வரை மாகாணசபைகளை பயனுறுதியுடைய முறையில் இலங்கை அரசாங்கங்களைக் கொண்டு இயங்கவைக்க இந்தியாவினால் முடியவில்லை என்பதே யதார்த்த நிலையாகும். இந்த இலட்சணத்தில சமஷ்டித் தீர்வைக் கொண்டுவருவதற்கு இந்தியாவினால் என்ன செய்ய முடியும்?

ஆனால், அண்மைக் காலமாக தமிழ் தேசிய பேரவை தமிழ்நாடு மாநிலத்தின் ஊடாக புதுடில்லிக்கு நெருக்குதலைக் கொடுத்து கொழும்பை வழிக்குக்கொண்டுவர முடியும் என்ற நம்பிக்கையில் நடவடிக்கைகளில் இறங்கியிருக்கிறது.

2025 டிசம்பரில் அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலினையும் மாநிலத்தின் ஏனைய அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் சந்தித்த தமிழ் தேசிய பேரவையின் தூதுக்குழு இரண்டாவது சுற்றாக கடந்த பல நாட்களாக இன்றைய முதலமைச்சர் ஜோசப் விஜய்யையும் ஏனைய அரசியல் தலைவர்களையும் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தியிருக்கிறது.

இந்த சந்திப்புகளின் போது இலங்கையில் தமிழ் மக்கள் தற்போது எதிர்நோக்கும் பல்வேறு அரசியல், மனித உரிமைகள் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடியதுடன் "ஒற்றையாட்சி அரசியலமைப்பு முறை ஒழிக்கப்பட்டு தமிழர் தேசத்தின் இறைமையை அங்கீகரிக்கும் சமஷ்டி அடிப்படைலான அரசியல் தீர்வின் அவசியம்" குறித்து வலியுறுத்தியதாகவும் தமிழ் தேசிய பேரவையின் அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலினைச் சந்தித்த அவர்கள் மாநிலத்தில் உள்ள அரசியல் கட்சிகளை உள்ளடக்கிய பிரதிநிதித்துவக்குழு ஒன்றை அமைத்து இலங்கை இனப் பிரச்சினை தொடர்பில் ஒருமித்த நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்றும் சர்வகட்சி மகாநாடொன்றைக் கூட்ட வேண்டும் என்றும் வேண்டுகோளை முன்வைத்தார்கள்.

இலங்கையில் தமிழ்க் கட்சிகள் தமிழ் மக்கள் சார்பில் ஒருமித்த நிலைப்பாட்டை முன்வைக்க இணக்கத்துக்கு வரமுடியாமல் இருக்கின்ற நிலையில், தமிழ்நாட்டு கட்சிகளிடம் இவ்வாறு கேட்பதில் உள்ள பொருந்தாத்தன்மையை தமிழ் தேசிய பேரவை முதலில் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மக்கள் ஆணையும் நீதித்துறை சட்டபூர்வத்தன்மையும்!



கலாநிதி ஜெகான் பெரேரா

இலங்கையில் பல சாப்தங்களாகப் பொதுவாழ்வில் ஆதிக்கம் செலுத்தி வந்த தண்டனையிலிருந்து விலக்கு பெறும் கலாசாரம் அகற்றப்பட்டு வருவதை நாம் காண்கிறோம். இது நீதிமன்றங்கள், பொலிஸ் விசாரணைகள் மற்றும் சட்ட நடைமுறைகள் மூலமாகச் சாத்தியமாகி வருகிறது. இதுவொரு எளிதான காரியமல்ல, இதற்கு வலுவான தலைமைத்துவம் தேவைப்படுகிறது ஏனெனில் இது கடுமையான எதிர்ப்புகளையும் உருவாக்கி வருகிறது.

மிக உயர்ந்த மட்டத்திலிருக்கும் அரசியல்வாதிகளுக்கும் குற்றச்செயல் வலையமைப்புகளுக்கும் இடையிலான தொடர்புகள் குறித்து தற்போது வெளியாகி வரும் தகவல்கள், ஊழலுக்கும் மற்றைய குற்றங்களுக்கும் எதிராக அரசாங்கத்திற்கு மக்கள் வழங்கிய தேர்தல் ஆணை, இப்போது சட்ட அமைப்பின் ஊடாகச் செயற்பாடாக மாற்றப்பட்டு வருவதைக் காட்டுகின்றன.

கடந்த தேசியத் தேர்தல்களில் மக்களின் வாக்குகள், ஊழலற்ற ஒரு நாட்டிற்காகவும் தசாப்தங்களாக நிலவி வந்த தண்டனையிலிருந்து விலக்கு பெறும் சூழலுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காகவுமே அளிக்கப்பட்டன. சட்டத்தின் ஆட்சியின் கீழ், தண்டனையிலிருந்து விலக்கு பெறுவதற்குப் பதிலாகப் பொறுப்புக்கூறலை நிலைநாட்டும் ஒரு 'அமைப்புமுறை மாற்றத்திற்காக' அவர்கள் வாக்களித்தனர். நாட்டைச் சூறையாடி, அதனை வங்குரோத்து நிலைக்குக் கொண்டு சென்றவர்கள், சட்டத்தின் உரிய வழிமுறைகளின் ஊடாகப் பொறுப்புக்கூறச் செய்யப்பட வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்த்தனர்.

பொலிஸாரால், சட்டமா அதிபர் திணைக்களத்துடன் இணைந்து விசாரிக்கப்பட்டு, நீதித்துறையினால் தீர்ப்பளிக்கப்படும் வழக்குகள் உறுதியான சான்றுகளின் அடிப்படையிலானவை ஆகும். தற்போது பகிரங்கப்படுத்தப்பட்டு வரும் பல சான்றுகள் பல ஆண்டுகளுக்கு முன்பே கிடைத்திருந்ததோடு, அவை சட்ட நடைமுறைக்குள்ளும் நுழைந்திருந்தன. கடந்த காலத்தில் அந்த வழக்குகள் இறுதி முடிவை எட்டத் தவறின. விசாரணைகள் வேகத்தை இழந்தன. அரசுத் தரப்பு வழக்குத் தொடரல்கள் அவற்றிடம் இருந்த சான்றுகளைச் சரியாகத் திரட்டத் தவறின.

மேலும் பல வழக்குகள், சில தொழில்நுட்பக் காரணங்களின் அடிப்படையில் தள்ளுபடி செய்யப்பட்டன.

2019 - 2024 காலப்பகுதியில் மொத்தம் 102 வழக்குகள் அரசாங்க அதிகாரிகளால் நீதிமன்றங்களில் இருந்து வாபஸ் பெறப்பட்டன. ஊழலும் பாரதூரமான குற்றங்களும் நடந்துள்ளன என்பதைப் பொதுமக்கள் அறிந்திருந்தனர் அல்லது வலுவாக நம்பினர். நீதிமன்றத்தின் முன்னிலையில் குற்றங்களை நிரூபித்து, அதற்குப் பொறுப்பானவர்களைப் பொறுப்புக்கூறச் செய்ய இயலாத நிலைமை அரசியல் அதிகாரம் என்பது சட்டப் பொறுப்புக்கூறலில் இருந்து பாதுகாப்பளிப்பதாகத் தோன்றும் ஒரு சூழலை உருவாக்கியது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன், "தேர்தல்கள் மற்றும் ஜனநாயகத்திற்கான சுறுசுறுப்பான குடிமக்கள்" என்ற திட்டத்தின் கீழ், 2024 தேர்தல்களுக்கு முன்னர் தேசிய சமாதானப் பேரவையினால் "இலங்கையில் தேர்தல்களில் வாக்காளர் தெரிவை வழிநடத்தும் காரணிகள்" என்ற தலைப்பில் நாடு தழுவிய ஆய்வு ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஆய்வாளர்களான கலாநிதி மகேஷ் சேனநாயக்க, செல்வி கிரிஷ்னி சில்வா ஆகியோரால் இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

இது பொறுப்புக்கூறல் மற்றும் நல்லாட்சிக்கான மக்களின் அமோக ஆதரவைக் கண்டறிந்தது. ஆய்வின்போது பதிலளித்தவர்களில் 93 சதவீதமானோர் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதே தங்களின் முதன்மையான தேர்தல் கவலை எனக் குறிப்பிட்டிருந்த அதேவேளை, அதற்கு இணையாக 83 சதவீதமானோர் ஊழலுக்கு எதிராகப் போராட அர்ப்பணிப்புடன் செயல்படும் வேட்பாளர்களுக்கே முன்னுரிமை அளிப்பதாகக் கூறினர். எனவே, அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட ஆணையை, பொது வாழ்வில் நேர்மையை மீட்டெடுப்பதற்கும் நீண்டகாலமாக நிலவி வரும் தண்டனையிலிருந்து விலக்கு பெறும் கலாசாரத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்குமான ஒரு ஆணையாகப் பொருள் கொள்ள முடியும்.

இன்று, ஊழல் மற்றும் குற்றங்கள் தொடர்பான தண்டனைகளிலிருந்து விலக்கு பெறும் விவகாரங்களை பொலிஸார், இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு, சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் நீதித்துறை ஆகியன கடந்த காலத்தை விட முற்றிலும் மாறுபட்ட முறையில் அணுகுவதைக் காண முடிகிறது. முன்னர் உயர் பதவிகளை வகித்த பல நபர்கள் இப்போது உரிய சட்ட நடைமுறைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன், பல சந்தர்ப்பங்களில், நீதிமன்றக் கட்டமைப்பின் வெவ்வேறு நிலைகளில் நீதித்துறை பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு தண்டனையும் பெற்றுள்ளனர்.

அரசியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த நபர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள் பெரும்பாலும் முன்னோக்கி நகரத் தவறிய அல்லது அவற்றின் முடிவை எட்டுவதற்கு முன்பே முறிவடைந்த முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இது ஒரு முக்கியமான மாற்றமாகும்.

தற்போதைய பொறுப்புக்கூறல் செயன்முறையின் பலம், பெறப்பட்ட தண்டனைகளில் மட்டுமல்லாமல், சட்டத்திற்கு மேல் யாரும் இல்லை என்ற வளர்ந்து வரும் பொதுமக்களின் நம்பிக்கையிலும் தங்கியுள்ளது. இந்த பின்னணியில்தான், உயர் நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை இரண்டு வருடங்களால் நீடிப்பதற்கான அரசாங்கத்தின் முன்மொழிவு பற்றிய அறிவிப்புகள் தற்போதைய பொறுப்புக்கூறல் செயல்முறை தொடர வேண்டும் என்று விரும்புபவர்களிடமிருந்து ஆதரவையும், அதனை நீதித்துறையில் செல்வாக்கு செலுத்தும் ஒரு முயற்சியாகப் பார்ப்பவர்களிடமிருந்து எதிர்ப்பையும் பெற்றுள்ளன.



**மேல்நிலை நீதிமன்றங்களின் நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை அதிகரிப்பதற்கு ஒரு கட்டாயக் காரணம் இருக்குமாயின், அந்த விவகாரம் பொதுமக்கள் மற்றும் பாராளுமன்றத்தின் முன் வைக்கப்பட்டு பகிரங்கமாக விவாதிக்கப்பட வேண்டும். இத்தகையதொரு அரசியலமைப்புத் திருத்தமானது, அதை நிறைவேற்றுவதற்கான பலம் அரசாங்கத்திடம் இருந்தாலும்கூட, அரசாங்கத்தின் பாராளுமன்றப் பெரும்பான்மையை மட்டும் அடிப்படையாகக் கொண்டிருக்கக் கூடாது.**

நீண்ட கால அனுபவம் வாய்ந்த நீதிபதிகளைத் தக்கவைத்துக்கொள்வதன் பெறுமதியை ஏற்றுக்கொண்டு பல நாடுகள் நீதித்துறை ஓய்வுபெறும் வயதை அதிகரித்துள்ளன. இது நீதித்துறைக்கு மட்டுமன்றி, கல்வித்துறை மற்றும் பொதுச் சேவைக்கும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும், இலங்கையில் இது தொடர்பிலான சர்ச்சை, அதன் சூழல் காரணமாகவும் உயர் நீதிமன்ற நீதிபதிகளின் சேவைக் காலத்தை நீடிப்பதற்கான முன்மொழிவு, நீதிமன்றங்கள் அரசியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த ஊழல் மற்றும் குற்றவியல் வழக்குகளை விசாரணை செய்து வரும் ஒரு தருணத்தில் வந்துள்ளதாலும் ஏற்பட்டுள்ளது.

முன்மொழியப்பட்டுள்ள அரசியலமைப்பு திருத்தத்தை கேள்விக்குட்படுத்துவதில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் முன்னிலை வகிக்கிறது. உயர் நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை அதிகரிப்பது குறித்து அரசாங்கம் பரிசீலித்து வருவதாக வெளியாகும் அறிக்கைகளை "கடுமையான கவலையுடன் கவனிப்பதாக" சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் பதவியிலிருக்கும் நீதிபதிகளின் பதவிக் காலத்தை நீடிப்பது, நீதித்துறையின் சுதந்திரத்தில் தலையிடும் முயற்சியாக பொதுமக்களால் பார்க்கப்பட வாய்ப்புள்ளது என்று அது எச்சரித்துள்ளது.

எனவே, சட்டத்தரணிகள் சங்கத்தினால் கிளப்பப்பட்ட முக்கிய பிரச்சினை, நீதி நிர்வாகத்தில் பொதுமக்களின் நம்பிக்கையைப் பாதுகாப்பதை அடிப்படையாகக் கொண்டதாகும். சங்கம் ஏற்பாடு செய்திருந்த கலந்துரையாடலொன்றில், இப்பிரச்சினை இலங்கைக்கு அப்பாலும் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது என்பது சுட்டிக்காட்டப்பட்டது. காமன்வெல்த் சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் லாவேசியா ஆகியவற்றின் பிரதிநிதிகள், நீண்ட ஆயுட்காலம் மற்றும் அனுபவம் வாய்ந்த நீதிபதிகளைத் தக்கவைத்துக்கொள்வதன் மதிப்பை ஏற்றுக்கொண்டு பல நாடுகள் நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை அதிகரித்துள்ளன என்பதை ஒப்புக்கொண்டனர்.

அவர்களின் கவலை ஓய்வுபெறும் வயதை அதிகரிப்பது பற்றி அல்ல, மாறாக அரசியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த ஊழல் வழக்குகள் நீதிமன்றங்கள் முன்னிலையில் இருக்கும் போது, பதவியிலிருக்கும் நீதிபதிகளின் பதவிக் காலத்தை மாற்றுவது பற்றியதே ஆகும். இத்தகைய சூழ்நிலைகளில், நல்லெண்ணத்துடன் கூடிய சீர்திருத்தங்கள் கூட, அரசாங்கத்தின் ஆணையை ஒரு பக்கச் சார்பான முறையில் முன்னோக்கி கொண்டு செல்வதற்காக நீதித்துறை செல்வாக்கிற்கு உட்படுத்தப்படுகிறது என்ற பொதுவான பார்வையை உருவாக்கலாம்.

ஊழல்வாதிகள் மற்றும் கடுமையான குற்றங்களுக்குப் பொறுப்பானவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கான மக்களின் ஆணையைத் தொடர்ந்து செயற்படுத்துவது முதலாவது நோக்கமாகும். அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள நீதித்துறையின் சுதந்திரம் மற்றும் நடுநிலைமை மீதான பொதுமக்களின் நம்பிக்கை குறைந்துவிடாமல் இருப்பதை உறுதி செய்வது இரண்டாவது நோக்கமாகும். இந்த இரண்டு சமமான முக்கியத்துவம் வாய்ந்த நோக்கங்களைப் பாதுகாப்பதே அரசாங்கத்தின் முன்னால் உள்ள சவாலாகும்.

தற்போதைய பொறுப்புக்கூறல் செயல்முறையின் பலம் விசாரணைகள், வழக்குத் தொடரல்கள் மற்றும் நீதித்துறை முடிவுகள் ஆகியவை சட்டத்தின்படியே மேற்கொள்ளப்படுகின்றன என்ற நம்பிக்கையைப் பொதுமக்களிடையே அது ஏற்படுத்தியுள்ளமையிலும், பெறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளின் தீர்ப்புகளிலுமே தங்கியுள்ளது. அரசியல் ரீதியாக உணர்திறன் வாய்ந்த வழக்குகள் வெற்றிகரமான முடிவை அரிதாகவே எட்டிய காலத்திலிருந்து இலங்கை நீண்ட தூரம் கடந்து வந்துள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் எதிர்க்கட்சிகள் மற்றும் சர்வதேச சட்ட அமைப்புகளால் வெளியிடப்பட்ட கவலைகளின் பின்னணியில், முன்மொழியப்பட்ட திருத்தம் குறித்த விவாதத்தை அரசாங்கம் விரிவுபடுத்துவது விவேகமானதாக இருக்கும். மேல்நிலை நீதிமன்றங்களின் நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை அதிகரிப்பதற்கு ஒரு கட்டாயக் காரணம் இருக்குமாயின், அந்த விவகாரம் பொதுமக்கள் மற்றும் பாராளுமன்றத்தின் முன் வைக்கப்பட்டு பகிரங்கமாக விவாதிக்கப்பட வேண்டும். இத்தகையதொரு அரசியலமைப்புத் திருத்தமானது, அதை நிறைவேற்றுவதற்கான பலம் அரசாங்கத்திடம் இருந்தாலும்கூட, அரசாங்கத்தின் பாராளுமன்றப் பெரும்பான்மையை மட்டும் அடிப்படையாகக் கொண்டிருக்கக் கூடாது.

அரசியலமைப்பில் மாற்றங்களைச் செய்வதற்கு அரசாங்கம் தனது பலத்தை மாத்திரம் பயன்படுத்துவது அதன் சட்டப்பூர்வத்தன்மையையோ அல்லது நம்பகத்தன்மையையோ அதிகரிக்காது. அந்த விழுமியங்கள் பொதுமக்களுடனான கலந்தாலோசனைக்கு உட்படுத்தப்பட்டு, பாராளுமன்றத்தில் கட்சிப் பாகுபாடின்றி ஆதரிக்கப்பட்டால் மட்டுமே வலுப்பெறும். தேசிய நலனுக்காகப் பொறுப்பான அரசியலை முன்னெடுக்க முனையும் எதிர்க்கட்சியினரிடமிருந்து இருதரப்பு அரசியல் ஆதரவை எதிர்பார்க்க முடியும்.


மக்கள் அரசாங்கத்தை மாற்றுவதற்காக மாத்திரமன்றி, முறைமையை (அமைப்பை) மாற்றுவதற்காகவும் வாக்களித்தனர். பொது நம்பிக்கையைத் துஷ்பிரயோகம் செய்தவர்கள், பொதுமக்களின் நம்பிக்கையைப் பெற்ற நிறுவனங்கள் மூலம் பொறுப்புக்கூற வைக்கப்பட வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்த்தனர். அந்த எதிர்பார்ப்பு தற்போது நிறைவேறத் தொடங்கியுள்ளது. பரந்த பொதுமக்களின் அங்கீகாரம் இல்லாத அரசியலமைப்பு மாற்றத்தினால் அது ஆபத்துக்குள்ளாக்கப்படக் கூடாது.

மேல்நிலை நீதிமன்றங்களின் நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை நீடிப்பதற்கு கட்டாயக் காரணம் இருப்பதாக அரசாங்கம் நம்பினால், அது முதலில் அந்த விவகாரத்தை மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும். அத்துடன் ஊழல் எதிர்ப்பு மற்றும் நல்லாட்சியின் மீது உண்மையுள்ள எதிர்க்கட்சியினருடன் இணைந்து பாராளுமன்றத்தில் இருதரப்பு ஆதரவைத் தேட வேண்டும். யாரும் சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல என்பதை உறுதிப்படுத்தும் அதே வேளையில், நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதே தற்போதைய சவாலாகும்.

இந்தச் சவாலை முறியடிப்பதே, இலங்கையைத் தண்டனையிலிருந்து தப்பிக்கும் கலாசாரத்திலிருந்து பொறுப்புக்கூறும் கலாசாரத்தை நோக்கி நிலைபேறான முறையில் கொண்டு செல்வதற்கான உறுதியான வழியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நீதிபதிகளின் பதவிக்கால நீட்டிப்பு; நீதித்துறையில் அரசாங்கத் தலையீட்டுக்கான ஒரு உத்தியா?



கந்தையா அருந்தவபாலன்

இலங்கையின் உச்ச மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளின் பணிக்காலத்தை இரண்டு ஆண்டுகளால் அதிகரிப்பதற்குத் தேவையான மாற்றங்களை அரசியலமைப்பில் கொண்டுவருவதற்கான முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டு வருகிறது. இது தொடர்பாக எதிர்க்கட்சிகள் மட்டுமன்றி உள்நாட்டு வெளிநாட்டு சட்டத்துறைசார் அமைப்புகளும் தொடர்ந்து தமது ஆட்சேபனைகளைத் தெரிவித்து வருகிறபோதும் அரசாங்கம் தனது முயற்சியில் உறுதியாக இருப்பது போலவே தெரிகிறது. அரசாங்கத்தின் இந்த முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் தரப்புகள் இது நீதித்துறையில் அரசாங்கம் தலையிடுவதற்கான உத்தி என்றும், அதன்மூலம் நீதித்துறை மீதான மக்களின் நம்பிக்கை பாதிப்படையும் என்றும் இவை நாட்டின் எதிர்காலத்துக்கு ஆரோக்கியமாக இருக்கப்போவதில்லை என்றும் சுட்டிக்காட்டுவதுடன் இது ஏனைய துறைகளிலும் புதிய பிரச்சினைகளை உருவாக்கும் எனவும் எச்சரிப்பதைக் காணமுடிகிறது.

இலங்கையில் நீதித்துறையில் ஆட்சியாளர்களின் தலையீடு என்பது புதிய தொன்றல்ல. நீதித்துறையில் தலையிடுவதற்கான வாய்ப்புகளை அவர்களுக்கு நாட்டின் அரசியலமைப்பு வழங்குவது மட்டுமன்றி தேவைப்படும்போது அதற்காகத் தமது அதிகாரங்களையும் பயன்படுத்த ஒருபோதும் அவர்கள் தயங்கியதில்லை. உச்சமாக ஆட்சியாளர் தாம் விரும்பிய தீர்ப்பை வழங்காத பிரதம நீதியரசரின் பதவியைப் பறித்த மோசமான வரலாற்றைக் கொண்ட நாடு இது. அரசியலமைப்பிலுள்ள விதிகள் என்ன நோக்கத்துக்காக உருவாக்கப்பட்டுள்ளன என்று நேர்மறையாக நோக்குவதை விடுத்து அவற்றை எவ்வாறு தமது தவறான நோக்கங்களை நிறைவேற்றப் பயன்படுத்துவது என எதிர்மறையாக சிந்திக்கும் ஆட்சியாளர்களும் அவர்களுக்குச் சார்பாகச் செயற்படும் சுயநலனும் பலவீனமும் கொண்ட நீதித்துறை சார்ந்தவர்களும் இந்நாட்டில் நிறையவே உள்ளனர். இவ்வாறு கடந்தகாலத்தில் ஆட்சியாளர்கள் செய்ததுபோல தற்போதைய அரசாங்கமும் நீதித்துறையை தமதுபக்கம் வளைப்பதற்கான ஒரு உத்தியாக நீதிபதிகளின் பதவிக்கால நீட்டிப்பைக் கையாள விரும்புகிறதா? அவ்வாறு நீட்டித்தால் நாட்டில் எவ்வாறான பாதக விளைவுகளை அது ஏற்படுத்தக்கூடும்?

இலங்கையில் நீதிபதிகள் ஓய்வு பெறுவதற்கான வயதெல்லைகள் நீதிமன்றங்களின் தரங்களின் அடிப்படையில் அமைந்துள்ளன. தற்போது கீழ்நிலை நீதிமன்றங்களான மாவட்ட மற்றும் நீதிவான் நீதிமன்றங்களின் நீதிபதிகளுக்கான வயதெல்லை 60 ஆகவும், மேல்நீதிமன்ற நீதிபதிகளின் வயதெல்லை 61 ஆகவும், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிபதிகளின் வயதெல்லை 63 ஆகவும், உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் வயதெல்லை 65 ஆகவும் காணப்படுகின்றன. மேன்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் மேற்குறிப்பிட்ட வயதெல்லைகள் அரசியலமைப்பின் உறுப்புரை 107(5) மூலம் வரையறை செய்யப்பட்டுள்ளன. இவ்வயதெல்லைகளை மாற்றுவதானால் அரசியலமைப்பில் மாற்றத்தைக் கொண்டுவரவேண்டியிருப்பதுடன் அதற்கு பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு உறுப்பினர்களின் ஆதரவும் தேவை. தற்போதைய அரசாங்கத்திற்குத் தனிக்கட்சி உறுப்பினர்களே மூன்றிலிரண்டு எண்ணிக்கையிலும் கூடுதலாக இருப்பதால் இம்மாற்றத்தைக் கொண்டுவருவது அதற்குக் கடினமான விடயமன்று.

நீதிபதிகளின் பணிக்கால நீட்டிப்பு தொடர்பான தனது முன்னெடுப்புக்கு அரசாங்கம் கூறும் முக்கிய காரணம் தேங்கியுள்ள வழக்குகளுக்கு அனுபவமுள்ள நீதிபதிகளின் சேவைகளைப் பெறுவதற்கானது என்பதாகும். அரசாங்கத்தின் இந்தவாதம் ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லை என்பதை ஆதாரங்களுடன் முன்வைக்கும் தரப்புகள் இது தனது உள்நோக்கத்தை நியாயப்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வைக்கும் அர்த்தமற்ற கருத்து என்றும் குறிப்பிடுகின்றன. அரசாங்கத்தின் இந்த முன்னெடுப்புக்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், கொழும்பு உயர் நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கம் மட்டுமன்றி பொதுநலவாய நாடுகளின் சட்டத்தரணிகள் சங்கம், மற்றும் ஆசிய- பசுபிக்குக்கான சட்ட அமைப்பு போன்ற பல சட்டத்துறைசார்ந்த முக்கிய அமைப்புகள் ஆட்சேபனை தெரிவித்திருப்பதுடன் இம்முயற்சியைக் கைவிடுமாறு அரசாங்கத்தைக் கோரியுமுள்ளன. மேலும் இதனால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகள் தொடர்பாக முன்னாள் அமைச்சரும் சட்டத்துறைப் பேராசிரியருமான ஜி.எல்.பீரிஸ் முன்வைக்கும் வாதங்கள் முக்கியமானவையாக அமைகின்றன. ஜி.எல்.பீரிஸின் கடந்தகால அரசியல் தொடர்பாக ஆயிரம் விமர்சனங்கள் இருந்தாலும் சட்டப் பேராசிரியர் என்றவகையில் அவரால் முன்வைக்கப்படும் வாதங்கள் தவிர்க்க முடியாதவையாதவையாக உள்ளன.

> இப்போது அனுபவமுடைய நீதிபதிகளின் பணியின் அவசியம்பற்றிக் கூறுகின்ற இதே அரசாங்கம்தான் அனுபவம் வாய்ந்த மூத்த நீதிபதியான மாணிக்கவாசகம் இளஞ்செழியனுக்கு பதவியுயர்வு வழங்குவதை வேண்டுமென்றே தாமதப்படுத்தி கட்டாய ஓய்வுநிலைக்குத் தள்ளியது என்பதும் இங்கு நினைவிற் கொள்ளவேண்டிய ஒன்று.

நீதிபதிகளின் வயதெல்லை நீட்டிப்பு உட்பட நீதித்துறையில் புகுத்தப்படும் எந்தவொருமாற்றமும் தேவையின் அடிப்படையில் அமையவேண்டுமேயன்றி அரசாங்கத்தின் விருப்பத்தின்படி அமையக்கூடாது என்பது சட்டப்புலமையாளர்களின் கருத்தாக உள்ளது. அரசாங்கம் கூறுவதுபோல வயதை நீட்டிப்பதற்கான தேவை உண்மையில் தற்போது எழவில்லை. எண்ணிக்கையில் அதிகரித்துவரும் வழக்குகளுக்கு விரைவாகத் தீர்வு காண்பதற்காகவே அரசியலமைப்புக்கு மேற்கொள்ளப்பட்ட 20 ஆவது திருத்தத்தின்மூலம் மேன்முறையீடு மற்றும் உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை ஏலவே அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 12 இலிருந்து 20 ஆகவும், உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 11 இலிருந்து 17 ஆகவும் உயர்தப்பட்டுள்ளன. அதேவேளை இவ்விரு நீதிமன்றங்களிலும் தற்போது தலா நான்கு வெற்றிடங்கள் உள்ளன என்றும் அவற்றை உரிய காலத்தில் நிரப்பாது ஜனாதிபதி வேண்டுமென்று காலங்கடத்திக்கொண்டு மறுபுறத்தில் வயதை நீட்டிக்கும் முனைப்பில் அவர் ஈடுபட்டுவருவது அரசாங்கத்தின் உள்நோக்கத்தை எடுத்துக் காட்டுவதாகவும் அத்தரப்புகள் குற்றஞ்சாட்டுகின்றன. மோசமான ஆட்சியென்று தற்போதைய ஆட்சியாளர்களால் குற்றஞ்சாட்டப்படும் முன்னைய ஆட்சிகளில்கூட இவ்வாறு உயர்நீதிமன்றங்களின் வெற்றிடங்கள் நிரப்பப்படாது இழுத்தடிக்கப்படவில்லை எனவும் அவர்களால் சுட்டிக்காட்டப்படுகிறது.

பணிக்கால வயதை நீட்டிப்பதால் ஓய்வு பெறவேண்டியவர்களுக்கு மேலும் இரண்டு வருடங்கள் மேலதிகமாகக் கிடைக்கும் அதேவேளை அப்பதவிகளுக்காக மூப்பின் அடிப்படையில் அடுத்தடுத்த நிலையிலுள்ள பலருக்குப் பதவியுயர்வு கிடைப்பதற்கான வாய்ப்பு அதன்மூலம் மட்டுப்படுத்தப்படுவதால் அவர்கள் கட்டாய ஓய்வுக்குத் தள்ளப்படுவார்கள். இது சிலருக்கு வரப்பிரசாதம். வேறு சிலருக்குத் தண்டனை. வரப்பிரசாதம் பெறுபவர்கள் பக்கஞ்சாய்வதற்கான வாய்ப்புகள் இதன்மூலம் அதிகரிக்கப்படுகின்றன. வைத்தியத்துறையிலுள்ள சிறப்பு நிபுணர்களுக்கான பற்றாக்குறை போன்றதல்ல நீதிபதிகளின் விடயம். கீழ்நிலை நீதிமன்றங்களிலுருந்து படிப்படியாக மேலுயர்ந்த அனுபவம் பெற்ற நீதிபதிகள் அடுத்தடுத்த நிலைகளில் நிறையவே உள்ளனர். பதவியுயர்வு கொடுத்து அவர்களின் பணியைப் பெறுவதற்குப் பதிலாக ஓய்வு பெறவேண்டிய நிலையிலுள்ளவர்களுக்கு பணிக்காலத்தை நீட்டிப்பதையிட்டு ஐயமேற்படுவது இயல்பானதே.

இரண்டு ஆண்டுகள் அதிகரிப்பென்பது அத்துறையிலுள்ள பலருக்கு ஏழு ஆண்டுகள் பணிக்கால அதிகரிப்பாகும். அதாவது 60 வயதில் ஓய்வு பெறவேண்டிய நீதிபதி ஒருவருக்கு உச்ச நீதிமன்ற நீதிபதியாகி 67 வயதில் ஓய்வு பெறும்போது ஏழு ஆண்டுகள் அரசபணிமூலமான நன்மைகள் கிடைக்கின்றன. உண்மையில் நீதிபதிகள் ஓய்வுபெறுவதற்கான வயதெல்லைகளில் காணப்படும் இவ்வாறான படிநிலைகள் நீதித்துறையில் ஆட்சியாளர்களின் செல்வாக்கு அதிகரிப்பதற்கான ஒரு வாய்ப்பை வழங்குகிறது எனச் சட்டவல்லுநர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். உயர்நிலை நீதிமன்றங்களுக்கான நீதிபதிகளின் பதவியுயர்வுக்கான பிரதான சாவி ஜனாதிபதியிடமே உள்ளது. இதனால் அப்பதவி உயர்வுகளுக்காக மட்டுமன்றி ஓய்வின்பின்னர் இராஜதந்திர பதவிகள் உட்பட பல்வேறு அரச உயர்பதவிகளயும் சலுகைகளையும் பெறுவதற்காக பல்வேறு சந்தர்ப்பங்களில் நீதிதேவையின் தராசு ஆட்சியாளர் பக்கம் சரிந்துவிடுவதான குற்றச்சாட்டுகள் உள்ளன. இதனால்தான் நீதிபதிகள் ஓய்வு பெற்றபின் எந்தவொரு அரசாங்கப்பதவியோ,அரசியல் பதவியோ வழங்கப்படக்கூடாது எனச் சட்டம் இயற்றப்படவேண்டும் என்று முன்னாள் இந்திய தலைமை நீதிபதியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையரின் சராசரி ஆயுட்காலம் கணிசமான அளவு உயர்ந்துள்ளபோதிலும் அதற்கிணங்க பணியாளர்களின் குறிப்பாக அரச பணியாளர்கள் ஓய்வுபெறுவதறகான வயதெல்லை அதிகரிக்கப்படவில்லை. கடந்த ஆட்சிக்காலத்தில் அவ்வயதெல்லை இரண்டு ஆண்டுகளால் அதிகரிக்கப்பட்டபோதும் பின்னர் அது மீளப்பெறப்பட்டுவிட்டது. இதற்கு அரச நிதிப்பற்றாக்குறை உட்படப் பல்வேறு விடயங்கள் காரணமாக இருக்கலாம். ஆனால் நீதிபதிகளின் வயதெல்லை அதிகரிக்கப்படும்போது அது ஏனைய துறைகளிலுள்ள உயர்நிலைப் பணியாளர்களிடையே நிச்சயமாகத் தாக்கத்தை ஏற்படுத்தும். குறிப்பாக பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் உட்பட வைத்தியர்கள், இலங்கை நிர்வாக சேவை போன்ற தீவடங்கலுக்கலுக்குமான பணிகளில் மூப்பு நிலையிலுள்ளவர்கள் அந்தச்சலுகை தமக்கும் வழங்கப்படவேண்டுமென போர்க்கொடி தூக்குவார்கள். அரசியலமைப்பின் 12 ஆவது உறுப்புரை மூலம் ஒவ்வொரு குடிமகனுக்கும் வழங்கப்பட்டுள்ள சமத்துவ அடிப்படை உரிமையை முன்னிறுத்தி உச்ச நீதிமன்றத்தை இவர்கள் நாடும் நிலை ஏற்படும். அது படிப்படியாக அடுத்த அரச பணியாளர்க்களுக்கும் பரவும். இலங்கையின் இன்றைய பொருளாதார நிலையில் பணியாளர்களின் ஓய்வுக்கான வயதெல்லையை அதிகரிப்பது நடைமுறைச் சாத்தியமானதாக அமையாது.

இவ்வாறான பல எதிர்விளைவுகளுக்கான சாத்தியப்பாடுகள் இருக்கின்ற சூழ்நிலையிலும்கூட அரசாங்கம் நீதிபதிகளின் பணிக்காலத்தை நீட்டிப்பதில் ஆர்வம் காட்டுகிறதென்றால் அது அவர்களின் அரசியல் தலையீட்டுக்கு வழிவகுக்கும் முயற்சியென குற்றஞ்சாட்டுவதிலும் நியாயம் இருப்பதாகவே தெரிகிறது. வயதை நீடிப்பதற்கு அரசாங்கம் முன்வைக்கும் காரணமும் வலுவுடையதொன்றாகத் தெரியவில்லை. இப்போது அனுபவமு டைய நீதிபதிகளின் பணியின் அவசியம் பற்றிக் கூறுகின்ற இதே அரசாங்கம்தான் அனுபவம் வாய்ந்த மூத்த நீதிபதியான மாணிக்கவாசகம் இளஞ்செழியனுக்கு பத வியுயர்வு வழங்குவதை வேண்டுமென்றே தாமதப்படுத்தி கட்டாய ஓய்வுநிலைக் குத் தள்ளியது என்பதும் இங்கு நினை விற் கொள்ள வேண்டிய ஒன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு



# அரசியலில் சுகமான கற்பனைகளும், சுடும் உண்மைகளும்



-யதீந்திரா

சில வாரங்களுக்கு முன்னர் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி, முல்லைத்தீவில் கூட்டமொன்றை ஏற்பாடு செய்திருந்தது. மகாண சபை முறைமை மற்றும் அதன் அவசியம் தொடர்பில், உரையாடுவதுதான் அந்தக் கூட்டத்தின் நோக்கம். இந்த நிகழ்வில் உரையாற்றுமாறு அழைக்கப்பட்டிருந்தேன். நான் மாகாண சபையின் ஆதரவாளன், இன்றைய சூழலில், அதனை விட்டால் வேறு வழியில்லை என்று கருதுபவன். எனது எழுத்துக்களை பின்தொடர்பவர்கள் அனைவரும் இதனை அறிவர். ஏனெனில் வேறு விடயங்கள் பற்றி நம்பிக்கையூட்ட ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. எனக்கும் தெரியாத ஒன்றைப் பற்றி நான் எவ்வாறு வாதிட முடியும்? - இந்த அடிப்படையில் எனது கருத்துக்களை பகிர்ந்து கொண்டேன். அதே போன்று ஏனைய பேச்சாளர்களும் தங்களின் அபிப்பிராயங்களை தெரிவித்திருந்தனர். எனது உரையின் போது - ஒரு யுத்தத் தோல்விக்கு பின்னரான அரசியலை கையாளுகின்றோம் என்னும் புரிதல் அவசியம், என்று குறிப்பிட்டிருந்தேன். தோல்விக்கு பின்னரான - என்னும் வாதத்தை அங்கிருந்த சிலரால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

கேள்வி - பதில் நேரத்தில், விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னைநாள் உறுப்பினர் ஒருவர், இங்கே தோல்வியடைந்ததாக கூறப்பட்டது, நாங்கள் தோற்கவில்லை, எங்களைப் பார்த்து பயந்த வல்லரசுகள், எங்களுடைய போராட்டத்தை அழித்தது என்று குறிப்பிட்டார். முன்வரிசையில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களும் சிலரும் இருந்தனர். விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னைநாள் உறுப்பினர் ஒருவர், அவ்வாறு கூறியது என்னைப் பொறுத்தவரையில் ஆச்சரியமான ஒன்றல்ல - ஏனெனில் விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்தவர்கள் எல்லாம் விடயஞானமுள்ளவர்கள் அல்லர். அவர்களில் பலருக்கு என்ன நடந்தது என்பதே சரியாகத் தெரியாது. ஒரு உத்தரவிற்கு கட்டுப்பட்டு செயற்பட்டவர்கள். மேலும் விடுதலைப் புலிகள் அமைப்பில் நீண்ட காலம் இருந்தவர்கள் பலர், எதுவும் பேசுவதில்லை. ஏனெனில் அவர்களுக்கு உண்மை தெரியும்.

> தமிழ் அரசியல் தலைவர்கள் என்போர், ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும், எந்தவொரு அரசியல் நிலைப்பாட்டையும் பேணிப் பாதுகாப்பதற்கு முதலில் மக்கள் உங்களுடன் நிற்க வேண்டும். மக்கள் ஒரு வேளை கடந்த தேர்தலில், அலையில் அள்ளுண்டு போனது போன்று, சென்றுவிட்டால், அதன் பின்னர் எங்களுக்கான அரசியல் நிலைப்பாடு என்று கூறுவதில் எந்தப் பயனும் இல்லை.

ஒரு யுத்தம் பேரழிவில் முடிவுற்ற பின்னர், அது தொடர்பில் சொல்லப்பட்ட கதைகளை விழுங்கிக் கொண்டு, சிந்திப்பவர்களே இன்று முன்னாள் போராளிகள் என்னும் பெயரில் தங்களை வெளிப்படுத்துகின்றனர். இங்கு பிரச்சினை அவர்கள் அவ்வாறு சிந்திப்பது பற்றியதல்ல மாறாக, யுத்தத்திற்கு பின்னர் சரியானதொரு அரசியல் உரையாடலை முன்னெடுப்பதில் தமிழ் கட்சிகள் என்போர் அனைவருமே தோற்றுவிட்டனர் என்பதுதான்.

இறுதி யுத்தம், அந்த யுத்தத்திற்கு பின்னரான அரசியல் கையறு நிலைமை - இவை தொடர்பில் யதார்த்தங்களை முன்வைப்பவர்கள் மீது சீறிப் பாயும் போக்குத்தான் இப்போதும் காணப்படுகின்றது. உண்மைகளை விழுங்கிக் கொண்டு, பொய்களை வர்ணிப்பதையே அறிவு என்று எண்ணிக் கொள்ளும் போக்குத்தான் மேலோக்கியிருக்கின்றது. இப்போதும் துரோகிக் கதைகள், அரசியல் உரையாடல்களில் பெரும் தடையாக இருப்பதாக சில நண்பர்கள் சலிப்படைகின்றனர்.

உண்மைகளை கண்டு அச்சம் கொள்ளுவதும், அவ்வாறானவர்களை விரோதிகளாகப் பார்க்க முற்படுவதையும் காணும் போதெல்லாம், ஒரு வரலாற்றுச் சம்பவமே நினைவுக்கு வருகின்றது. பூமி சூரியனைச் சுற்றிவருகின்றது என்று கலிலியோ கலி வாதிட்ட போது, அது அப்போதைய கத்தோலிக்கச் திருச்சபையோடு முரண்படுகின்றது, வேதாகமத்தோடு மோதுகின்றது, என்றே பார்க்கப்பட்டது. இந்த நிலையில் அப்போது போப்பாண்டவராக இருந்த போப் எட்டாம் ஆர்பன் - கலிலியோவை அழைத்து, நீர் உமது கருத்தை மாற்றி எழுத வேண்டும் என்று கூறினார். அதற்கு பதிலளித்த கலிலியோ, ஐயா, நீங்கள் கூறுவது போன்றே செய்கின்றேன் என்று கூறிவிட்டு, இன்னொன்றையும் கூறினராம் - அதாவது, நான் மாற்றி எழுதிவிட்டால் பூமி சுற்றாமல் விட்டுவிடப் போவதில்லை. அந்த அடிப்படையில் அவருடைய புகழ்பெற்ற வாசம் - "ஆனால் அது சுழல்கிறது" என்று அவர் வாய்க்குள் முணுமுணுத்ததாகவும் வரலாற்றாளர்கள் கூறுகின்றனர்.

பின்னர், கலிலியோ அவருடைய கருத்தை அதிகாரபூர்வதாக திரும்பப் பெறுமாறு கட்டாயப்படுத்தப்பட்டு, வீட்டுக் காவலிலும் வைக்கப்பட்டார். நமது தமிழ்ச் சூழலில் இடம்பெறும் அரசியல் உரையாடல்களும் இப்படியான ஒன்றுதான். அதாவது, தாங்கள் உண்மைகளை புறக்கணித்துவிட்டால், அதுதான் நிரந்தரமானது என்று எண்ணிக் கொள்கின்றனர். ஒன்றை துரோகம் என்று தூற்றிவிட்டால் தாங்கள் வெற்றிபெற்றுவிட்டதாக கற்பனை செய்து கொள்கின்றனர். நிஜம் எதுவோ, அது எப்போதும் நிஜம்தான். நாங்கள் தோற்றுவிடவில்லை என்று சத்தம் போடுவதால், அது உண்மையாகிவிடாது.

அரசியலை கையாளுவதற்கான அடிப்படையே முதலில் யதார்த்தங்களை ஏற்றுக் கொள்வதுதான். அதன். வழித்தடத்தில் பயணிப்பதுதான் -கடந்த காலத்தை வழிகாட்டும் ஒரு ஆசானாக்கிக் கொள்வதுதான். சீனத் தத்துவ ஞானி, கன்பூசியஸ் கூறியது போன்று, நீங்கள் எதிர்காலத்தை வரையறுக்க விரும்பினால் கடந்த காலத்தை படியுங்கள். யதார்த்தங்களை புரிந்து கொண்டு, அதனை மக்களுக்கும் சொல்லுபவர்களால்தான் மக்கள் நன்மையடைய முடியும். இப்படி சிந்திக்கும் போது, இந்தியாவில், இஸ்ரேலில் இரண்டாயிரம் ஆண்டுகால கதைகளைக் கூறுகி ன்றார்களே - அப்படியென்றால், நாங்கள், ஏன் பழம் பெருமைகளை பேசக் கூடாது என்று கேட்பவர்களும் இருக்கின்றனர். அவைகள் பலமான அரசுகள். அவர்களின் பிரச்சினை வேறு. அதாவது, இருக்கும் அதிகாரத்தை எவ்வாறு பேணிப்பாதுகா ப்பது என்பது பற்றியது. அதற்கு எதுவெ ல்லாம் கைகொடுக்கும் என்று அவர்கள் நம்புகின்றார்களோ, அவற்றையெல்லாம் ஒரு துருப்புச் சீட்டாகப் பயன்படுத்துகின்றனர். எங்களுடைய பிரச்சினையோ தப்பிப் பிழைப்பது பற்றியது. எமது தூரநோக்கற்ற செயற்பாடுகளால் பலவற்றை இழந்து நிற்கும் நாம், எவ்வாறு இதிலிருந்து மீண்டு எழப் போகின்றோம் - அதற்கு என்ன வழிகள் இருக்கின்றன என்பதுதான் எங்களின் பிரச்சினை. எனவே நாங்கள் எவருடனும் எங்களை ஒப்பிட்டுக் கொள்ளக் கூடிய இனமல்ல - மாறாக, மற்றவர்களிடமிருந்து எதையெல்லாம் கற்றுக்கொள்ள முடியுமே, அவற்றையெல்லாம் கற்றுக் கொள்ள வேண்டிய நிலையிலேயே நாம் இருக்கின்றோம்.

2009இற்கு பின்னரான அரசியல் உரையாடல்கள் பெருமளவிற்கு போலித்தனத்தால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றது. அரசியல் கட்சிகளின் தலைவர்களும் சரி, புத்திஜீவிகள் என்போரும் சரி, கருத்துருவாக்கிகள் என்போரும் சரி - ஒரு அரசியல் போலித்தனத்திற்குள் தங்களை வலிந்து இணைத்துக் கொண்டிருகின்றனர். நான் இங்கு குறிப்பிட்ட கூட்டத்திலும் கூட, விடுதலைப் புலிகள் இருக்கின்ற போது, அவர்கள் இதனை ஏற்றுக் கொண்டனர் - அவர்கள் அப்படிக் கருதினர் என்று, எல்லாவற்றிலும் விடுதலைப் புலிகளுக்கு விசுவாசமானவர்களாக தங்களை காண்பித்துக் கொள்ளும் போக்கு மேலோங்கிக் காணப்படுகின்றது. இது எதற்காக? விடுதலைப் புலிகள் ஆயுத வழியில் மட்டுமே நம்பிக்கை வைத்து இயங்கிய ஒரு அமைப்பு. எவ்வாறானதொரு அரசாங்கத்தை அமைக்கப் போகின்றீர்கள் என்று கேட்டதற்கு - யூகோஸ்லாவிய முறைமைக்கு அமைவான, ஒரு கட்சி ஆட்சியமைப்பு என்று, ஆயுதப் போராட்டத்தின் ஆரம்ப காலத்திலேயே, பிரபாகரன் கூறியிருந்தார். விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் புரிதலை ஒரு வரியில் கூறுவதனால் இப்படிக் கூறலாம் ஒரு இறைவன் - அவனைப் பயபக்தியோடு போற்றும் மக்கள் கூட்டம் - இதுதான் விடுதலைப் புலிகள் இயக்கம் விரும்பியிருந்த ஆட்சி முறைமை. உண்மை இவ்வாறிருக்கின்ற போது எதற்காக போலித்தனத்தை காவிக் கொண்டு திரிய வேண்டும். விடுதலைப் புலிகளுக்கு விசுவாசமாக இருப்பது என்றால், பிரபாகரனின் நிலைப்பாட்டுக்கு விசுவாசமாக இருப்பதுதான் - இன்று எவராலும் அப்படியிருக்க முடியுமா? அப்படியே இருக்கத்தான் போகின்றீர்கள் என்றால், எப்படி?

விடுதலைப் புலிகள் அமைப்பு என்பது அடிப்படையில், அந்த அமைப்பின் தலைவருடைய விருப்பங்களும் புரிதல்களும், சிந்தனையும்தான். அவருடைய கணிப்புக்கள் தோற்றுவிட்டன. விடுதலைப் புலிகள் அமைப்பின் வழியில் இனி எவருமே பயணிக்க முடியாது. எனவே அந்த விடயம் முடிந்துவிட்டது. அதற்காக அவர்களை தூற்றுவதும் தவறானது. விடுதலைப் புலிகளின் தோல்வியோடு ஒரு விடயம் நிரூபிக்கப்பட்டுவிட்டது. அதாவது, தமிழ் ஆயுத இயக்கங்கள் அனைத்துமே தோற்றுவிட்டன. இப்போது அந்த வலராற்றிலிருந்து நாம் எதைக் கற்றுக் கொள்ளப் போகின்றோம் என்பது மட்டுமே நமக்கு முன்னாலுள்ள யதார்த்தம். இப்போது பிறிதொரு அரசியல் சூழல் நமக்கு முன்னால் இருக்கின்றது. அதனை எவ்வாறு எதிர்கொள்ளுவது, தற்போதைய நிலைமையை எவ்வாறு கையாண்டால், நாம் தப்பிப்பிழைக்க முடியும் என்று சிந்திப்பதும், செயற்படுதும்தான் புத்தி சாதுர்யமானது.

தமிழ்ச் சூழலில் ஆக்கபூர்வமானதொரு அரசியல் உரையாடலை முன்னெடுக்க விரும்பினால், முதலில் அனைத்து கட்சிகளும் தங்களுடைய கடந்த கால முரண்பாடுகளை தூக்கியெறிந்து விட்டு, ஒரு ஐக்கிய முன்னணியாக மாற வேண்டும். ஒட்டுக் குழு - ஒட்டாக் குழு என்று விவாதிக்கும் தகுதியுடன் எவரும் இங்கு இல்லை. ஆயுதப் போரில் ஈடுபட்ட அனைத்து இயக்கங்களுக்கும் ஒரு நரகாசுர பக்கம் உண்டு. இதில் எவரும் உத்தமர்கள் அல்லர். கூடக் குறைய என்று வேண்டுமானால் பேசிக் கொள்ளலாம் - அதுவும் தேவையற்றது. மிதவாதிகளான தமிரசு கட்சியினரும், தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் மக்களுக்காக தங்கள் தசையை தராசில் போட்ட சிபிச் சக்கரவர்த்திகளும் அல்லர். உத்தம விவாதம் எவருக்கும் பொருந்தாது. காலம் தங்களுக்குச் சாதகமாக இருப்பதால், சிலர் தங்களை கதாநாயகர்களாகவும், மற்றவர்களை வில்லன்களாகவும் காண்பிக்க முற்படலாம், ஆனால் அனைவருடைய போலி முகத்திரையையும் காலம் கிழிக்கும், காலம் வரும்.

இந்தப் பத்தியாளரும், இன்னும் பலரும் நீண்டாகாலமாக வாதிட்டிருக்கின்றோம். ஒரு ஐக்கிய முன்னணியாகுங்கள். அதற்கு நேர்மையாக இருங்கள். தற்போதிருக்கும் மூத்த தலைவர்கள் என்போர் ஒதுங்கி, புதியவர்களுக்கு இடமளியுங்கள். ஆற்றலுள்ளவர்களை முன்னுக்கு கொண்டுவாருங்கள். அவர்கள் என்ன சாதி, எந்த மாவட்டம், எந்த ஊர், எவருடைய சொந்தம் என்பதைக் கடந்து சிந்தியுங்கள். அதற்கு இணங்காதவர்களை வெளியேற்றுங்கள். இளைய தலைமுறையாடு அரசியல் உரையாடல் ஒன்றை ஆரம்பியுங்கள். கிராமங்கள் தோறும் நடைப்பயணம் மேற்கொள்ளுங்கள். மக்களுடன் உரையாடுங்கள்.

முதலில், தமிழ் அரசியல் தலைவர்கள் என்போர், ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும், எந்தவொரு அரசியல் நிலைப்பாட்டையும் பேணிப் பாதுகாப்பதற்கு முதலில் மக்கள் உங்களுடன் நிற்க வேண்டும். மக்கள் ஒரு வேளை கடந்த தேர்தலில், அலையில் அள்ளுண்டு போனது போன்று, சென்றுவிட்டால், அதன் பின்னர் எங்களுக்கான அரசியல் நிலைப்பாடு என்று கூறுவதில் எந்தப் பயனும் இல்லை. இதனை விடுத்து, சர்வதேச நீதி, இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையில் மோதல் வரும், அப்போது இந்தியாவிற்கு நாங்கள் தேவைப் படுவோம், என்றெல்லாம் கதைகள் புனையும் அரசியலால், எதுவும் நடக்காது. தமிழர்களின் மீட்பர்கள் தமிழர்களே தவிர, வேறு எந்தவொரு வெளியாரும் அல்லர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மருதங்கேணி வரணி செம்மணி கதிர்காமம்: தமிழ் மக்களுக்கு யார் பொறுப்பு?


நிலாந்தன்

சில நாட்களுக்கு முன் வடமாராட்சி மருதங்கேணிப் பகுதியில் படையினரின் முகாம் அமைந்திருக்கும் நிலப்பரப்பும் உட்பட மொத்தம் 25 ஏக்கர் காணியை படையினருக்கு விலைக்கு கொடுப்பதற்கு ஒரு புலம்பெயர்ந்த தமிழர் முயற்சித்தார். அதனைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரமுகர்கள் அந்த இடத்துக்குச் சென்றுதடுத்தார்கள். படைத்தரப்புஏற்கனவேகிட்டத்தட்ட 20 ஏக்கர் நிலப்பரப்பை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதாகவும் அதையும் சேர்த்து மொத்தம் 25 ஏக்கர் நிலப்பரப்பு குறிப்பிட்ட புலம் பெயர்ந்த தமிழருக்கும் அவரைச் சேர்ந்தவர்களுக்கும் உரிய தனிப்பட்ட சொத்து என்றும் கூறப்படுகிறது. அன்றைய சம்பவத்தில் நில அளவைத் திணைக்களம் தமக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் அடிப்படையில் தான் செயல்படலாம் என்று கூறியதையடுத்து காணியை விற்பதற்கான அன்றைய முயற்சிகள் அதோடு நிறுத்தப்பட்டன. இது முதலாவது சம்பவம்.

இரண்டாவது சம்பவம்,கடந்த மாத இறுதியில் இடம் பெற்றது. அது தென்மராட்சியில் அங்கே வரணி மத்திய கல்லூரியில் விளையாட்டு மைதானத்துக்கான அரங்குதிறக்கப்பட்டது. அதற்கான நிதி உதவிகளை வழங்கியது புலம்பெயர்ந்து வாழும் வரணி அமைப்பாகும். அந்த அமைப்பினர் வழங்கிய நிதி உதவியை வைத்து இலங்கை படைத்தரப்பின் தொழில் நுட்பபிரிவு அந்த அரங்கத்தை தன்னார்வமாக கட்டிக் கொடுத்திருக்கிறது. கட்டடத் திறப்புவிழா அன்று சிறிலங்காவின் படைத் தளபதி நாடாவை வெட்டி அரங்கத்தை திறந்து வைத்தார். நிதி உதவி செய்த லண்டன், வரணி அமைப்பின் பிரதிநிதியும் அருகே காணப்பட்டார்.


இது நடந்த சில நாட்களில் வரணியில் இருந்துகிட்டத்தட்ட 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள செம்மணியில் தீப்பந்தங்களோடு மக்கள் போராடினார்கள். செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதிகேட்டு தீப்பந்தங்களை ஏந்தியபடி கண்டி வீதியின் ஓரமாக நின்று மக்கள் போராடினார்கள். எந்தப் படைத்தரப்பை அந்த மக்கள் குற்றம் சாட்டுகிறார்களோ, அதே படைத்தரப்பின் பிரதான தளபதி ஒரு பாடசாலையின் மைதான அரங்கத்தை திறந்து வைக்கிறார். 20 கிலோமீட்டர் தூரத்துக்குள் நடந்த இரண்டு சம்பவங்கள் இவை.

இவை தமிழ் மக்களின் தற்போதுள்ள அரசியல் நிலவரத்தின் குறிகாட்டிகள். தமிழ் மக்கள் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை மீட்பதற்காகப் போராடுகிறார்கள். உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை வேண்டாம் என்று கேட்டுப் போராடுகிறார்கள். ஆனால் தமிழ் மக்களில் ஒரு பகுதியினரே தமது காணிகளை படைத்தரப்புக்கு காசுக்கு விற்க முற்படுகிறார்கள். படைத்தளபதியைக் கூப்பிட்டு பாடசாலைமைதானத்தின் அரங்கத்தைத் திறக்கிறார்கள். இதில் புலம்பெயர்ந்த தமிழர்கள் சம்பந்தப்படுகிறார்கள்.

புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தில் ஒரு பகுதியினர் அபிவிருத்தி நடவடிக்கைகளில் அரசு தரப்போடு இணைந்து செயல்படுவது அல்லது அரச தரப்பை ஒரு பங்காளியாகக் கருதுவது என்பதுகடந்த 17 ஆண்டுகளிலும் படிப்படியாக பலமடைந்து வரும் ஒரு போக்காகும். உதாரணமாக கடந்த டித்வா புயலின்போது கனடாவில் உள்ள சில அமைப்புகளும் தனி நபர்களும் நிதிசேகரித்து அரசாங்கத்திடம் நேரடியாக அதைக் கொடுத்தார்கள். அந்த நிதியை தமிழ்த் தரப்பு ஒன்றுக்கூடாக பாதிக்கப்பட்ட மக்களிடம் சேர்ப்பிக்க கூடாதா? என்று கேட்கப்பட்டபோது, ஒருபுலம்பெயர்ந்ததமிழ் அரசியல் செயற்பாட்டாளர் கேட்டார், “தாயகத்தில் அவ்வாறான அமைப்புகள் எவையாவது உண்டா? புலம்பெயர்ந்த தமிழர்களின் நிதியைக் கையாள்வதற்கு ஒரு மையத்திலிருந்து செயல்படுகின்ற பலமான கட்டமைப்பு எதுவும் உங்களிடம் உண்டா?” என்ற பொருள்பட.

இக்கேள்வி எதை உணர்த்துகிறது என்றால், வெளிநிதியை பொறுப்பேற்கவோ அல்லது கையாளவோ தக்க தகைமையோடு மையமான அமைப்புகள் எவையும் தாயகத்தில் இல்லை என்பதைத்தான். வெளியில் இருந்துவரக்கூடிய நிதி உதவிகளை கையாள்வதற்கு மட்டுமல்ல, உள்நாட்டிலேயே நிர்ணயகரமான தருணங்களில் பொருத்தமான முடிவுகளை எடுத்து தமிழ் மக்களுக்கு வழி காட்டவல்ல அல்லது

> **சுப்பிரமணியன் கதிர்காமத்துக்குப் போகும் பாதயாத்திரையை முன்னரைவிட பிரபல்யப்படுத்தியிருக்கிறது. அதேசமயம் தமிழ்மக்கள் மத்தியில் உள்ள சமூக, சமய, அரசியல் தலைமைத்துவ வெற்றிடத்தையும் வெளிக்காட்டியிருக்கிறது. அதுமட்டுமல்ல, தங்களுக்குள் பிணக்குகளைத் தீர்த்துக்கொள்ளமுடியாமல் சாமியார்களும் போலீஸ் நிலையத்திற்குப் போகும் சீரழிந்தபோக்கை, அதுதான் தமிழ்த் தேசியஅரசியலின் பொதுப் போக்கை பிரதிபலித்திருக்கிறதா?**



தமிழ் மக்களை சரியான பாதையில் செலுத்தவல்ல அமைப்புக்கள் அல்லது கட்சிகள் என்று கூறக்கூடிய கட்டமைப்புக்கள் தமிழ் மக்கள் மத்தியில் உண்டா?

இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்ட மருதங்கேணி பிரதேசத்தில் தான் போதைப்பொருள் புனர்வாழ்வு மையத்துக்கு என்று அரசாங்கம் 10 ஏக்கர் காணியை வழங்கியது. அக்காணிக்குச் சுற்றுமதில் கட்டுவதற்கு நிதி உதவியை புலம்பெயர்ந்த தமிழர்கள் தான் வழங்கினர். எனவே தனது சொந்தக் காணியை படையினருக்கு விற்க விரும்பும் ஒரு புலம் பெயர்ந்த தமிழருக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை கொடுத்து அந்தக் காணியை வாங்க புலம்பெயர்ந்த தமிழர்களால் முடியும். இந்த விடயத்தில் புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு தாயக நோக்கு நிலையில் இருந்து பொருத்தமான விதங்களில் வழிகாட்ட யாருண்டு? அதாவது தமிழ் மக்களுக்கு யார் பொறுப்பு?

இவ்வாறான ஒரு தலைமைத்துவ வெற்றிடம் தமிழ்மக்கள் மத்தியில் நிலவுகிறது என்பதைத்தான் அண்மையில் சுப்பிரமணியம் என்ற பாதயாத்திரைக்குப் போன ஒரு நாயில் இருந்துதொடங்கி இப்பொழுதும் நிகழ்ந்துகொண்டிருக்கின்ற சமூக ஊடக வலைத்தள வாதப் பிரதிவாதங்கள் நமக்கு உணர்த்துகின்றன.

சுப்பிரமணியம் பாதயாத்திரைக்கு போனதால் வைரலாகியது மட்டுமல்ல. அது தமிழ் மக்கள் மத்தியில் உள்ள சமூக பொருளாதாரஅரசியல் மற்றும் சமய தலைமைத்துவவெற்றிடத்தையும் உணர்த்தியது. தமிழ்-முஸ்லிம் சமூகங்களுக்கு இடையிலானமுரண்பாடுகள் இப்பொழுதும் நீறுபூத்த நெருப்பாக உள்ளன என்பதனையும் அது உணர்த்தியது.சுப்பிரமணியன் கதிர்காமத்துக்குப் போய்ச் சேர்ந்துவிட்டது. ஆனால் அதைத் தொட்டுத் தொடங்கிய நோய்க்கூறான, விஷம் மிகுந்த விவாதப் பரப்பானது தொடர்ந்து திறக்கப்பட்டிருக்கிறது. சுப்பிரமணியம் ஒரு கடி நாயாகத் தெரியவில்லை. ஆனால் சுப்பிரமணியத்தை வைத்து மோதுபவர்கள் கடி நாய்களைப் போலவோ அல்லது வெறிநாய்களைப் போலவோ கடிபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அதைக் கட்டுப்படுத்த, அவர்களுக்கு சரியான வழியைக் காட்ட, இரண்டு மதப் பிரிவுகளையும் சேர்ந்து சமயப் பெரியார்கள் யாருமே முன்வரவில்லை. ஒருவாயில்லா ஜீவனை வைத்துக்கொண்டு வாயுடைய, கூர்படைந்த மனித ஜீவன்கள் மிகக் கீழ்த்தரமாக மோதிக்கொள்கின்றன. அதைத் தடுத்துநிறுத்தவோ அவர்களுக்குச் சரியான வழியைக் காட்டவோ எந்த ஒரு சமயப் பெரியாரும் அல்லது சமூகப் பெரியாரும் முயற்சிக்கவில்லை. அரசியல்வாதிகளும் அந்தப் பக்கம் வரவில்லை. குறிப்பாக, இதுபோன்ற விடயங்களில் தமிழ்த் தேசிய நோக்கு நிலையில் இருந்து தலையிடக்கூடிய சமயப் பெரியார்களோ அரசியல்வாதிகளோ, வாய் திறக்கவில்லை. இது கடந்த 17 ஆண்டுகளாக தமிழ் மக்கள் மத்தியில் நிலவிவரும் அரசியல், சமூக, சமயத் தலைமைத்துவ வெற்றிடத்தைக் காட்டுகிறதா?

அதுமட்டுமல்ல சுப்பிரமணியன் தொடர்பாக கிடைக்கும் சில செய்திகளின்படி அந்த நாயைவைத்து அரசியல் செய்பவர்கள், ஆன்மீகம் செய்பவர்களில் ஒருபகுதியினர் நேர்மையானவர்கள் இல்லை என்று கூறப்படுகிறது. சுப்ரமணியன் கதிர்காமத்தைச் சென்றடைவதற்கு முன்னரே அதனுடைய எஜமானர் என்று கூறி ஒரு பாதயாத்திரிகர் அம்பாறை மாவட்டத்தில் உள்ளபாணமை பொலீஸ் நிலையத்தில் ஒரு முறைப்பாடு செய்யச் சென்றிருக்கிறார். அந்த நாய் தன்னுடைய வளர்ப்பு நாய் என்றும் ஆனால் பாதயாத்திரைக்கு தலைமைதாங்கும் சாமியார் ஒருவர் அதனை தனது சம்பாத்தியத்துக்காக பயன்படுத்துகிறார் என்றும் அவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுசெய்யச் சென்றிருக்கிறார். பொலீசார் அந்த முறைப்பாட்டை ஏற்றுக்கொள்ளாமல் நாயை அவரேவைத்துக் கொள்ளுமாறு கூறியிருக்கிறார்கள். அதே சமயம் மேற்சொன்ன சாமியாரின் எதிரணியும் ஒரு முறைப்பாட்டு செய்வதற்கு பொலிஸ் நிலையத்துக்குச் சென்றிருக்கிறது. அதற்குப் பதில் கூறியபொலீசார் நாயின் உரிமையாளர் என்று கூறியவர் அந்தநாயுடன் கதிர்காமத்தைச் சென்றடையவில்லை என்றால், நீங்கள் கதிர்காமம் பொலீஸ் நிலையத்தில் ஒரு முறைப்பாட்டைச் செய்யுங்கள் என்று கூறியதாக ஒரு தகவல்.

எந்த நாயைத் திட்டமிட்டு வைரல் ஆக்கினார்களோ, அதே நாய்க்கு உரிமை கோரி போலீஸ் நிலையம்வரை போகும் ஒருநிலை. இது தமிழ்த் தேசிய அரசியலின் குறியீடாகவும் தெரிகிறதா?

தமிழ் மக்கள் தங்கள் சொந்தப் பிரச்சினைகளில் தொடங்கிகட்சிப் பிரச்சினைகள் வரைபொலீஸ் நிலையத்திற்குப் போகிறார்கள். நீதிமன்றத்திற்குப் போகிறார்கள். தமிழ்மக்கள் மத்தியில் உள்ள ஆகப் பெரிய கட்சிக்கு நீதிமன்றத்தில் வழக்குகள் உண்டு.நவீனயாழ்ப்பாணத்தைச் செதுக்கியதிருச்சபைகளில் முக்கியமானது ஆகிய தென்னிந்தியத் திருச்சபை பல ஆண்டுகளாக நீதிமன்றத்தில் வழக்காடிக் கொண்டிருக்கிறது. ஒரு தொகுதி இந்துஆலயங்கள் நீதிமன்றத்தில் நிற்கின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் கிட்டத்தட்ட 80 ஆலயங்கள் நீதிமன்றத்தில் நிற்கின்றன. தமிழ்ப் பகுதிகளில் உள்ள பாடசாலைகள் சிலவற்றின் பழைய மாணவர் சங்கங்கள் பொலீஸ் நிலையங்களுக்குச் சென்றுள்ளன.

இவைகூடப் பரவாயில்லை, உள்நாட்டு நீதிப் பொறிமுறை வேண்டாம், பன்னாட்டு நீதிப்பொறிமுறைதான் வேண்டும் என்று தமது போராட்டங்களின் போது திரும்பத்திரும்பக் கூறி வருகின்ற காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான உறவினர்களின் அமைப்புகள் தங்களுக்கு இடையே ஏற்பட்ட ஒரு முரண்பாடு காரணமாக சில ஆண்டுகளுக்கு முன் வவுனியா பொலிஸ் நிலையத்துக்கு சென்றதை இங்கு ஞாபகப்படுத்த வேண்டும். அந்த அமைப்புகளைச் சேராத ஒரு முதியபெண் - அவருக்கு 85வயது என்று சொன்னதாக ஒரு ஞாபகம்- அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த நீதி அமைச்சரைச் சந்தித்தபோது, தனது உரையில், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக போராடும் அமைப்புகளைச் சேர்ந்தவர்களைக் குறை கூறியிருந்தார். நீதிகேட்டுப் போராடும் முதிய அம்மாமார்களுக்கு இடையிலேயே முரண்பாடு. அது கைகலப்பாகி, காயப்பட்டு, பொலீஸ் நிலையம் வரைபோனது. இந்தப் பரம்பரை வருத்தத்தைத் தான் பாதயாத்திரைக்குப் போன சாமியார்கள் என்று அழைக்கப்பட்ட சிலரும் பிரதிபலிக்கிறார்களா?

சுப்பிரமணியன் கதிர்காமத்துக்குப் போகும் பாதயாத்திரையை முன்னரைவிட பிரபல்யப்படுத்தியிருக்கிறது. அதே சமயம் தமிழ்மக்கள் மத்தியில் உள்ள சமூக, சமய, அரசியல் தலைமைத்துவ வெற்றிடத்தையும் வெளிக்காட்டியிருக்கிறது. அது மட்டுமல்ல, தங்களுக்குள் பிணக்குகளைத் தீர்த்துக்கொள்ள முடியாமல் சாமியார்களும் போலீஸ் நிலையத்திற்குப் போகும் சீரழிந்தபோக்கை, அதுதான் தமிழ்த் தேசிய அரசியலின் பொதுப் போக்கை பிரதிபலித்திருக்கிறதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


# 'தேன் வந்து பாயுது காதினிலே!'













மாலி

தமிழைக் கொண்டாட ஒரு விழாவாக கம்பன் விழா திகழ்கிறது என்பதை சொல்லலாம்.

இராமாயணம், மகாபாரதம் என்ற தமிழின் இதிகாசங்கள் இரண்டினுள் இராமாயணம், மகாபாரதத்தைவிட காலத்தால் முந்தியது. இந்திய மொழிகளில் இதுவே தொன்மையான இலக்கியமாகவும் விளங்குகிறது.

வான்மீகி முனிவரால் வடமொழியில் இயற்றப்பட்ட இக் காவியம் கீழைத்தேய நாடுகளிலும் பரவியிருந்த சான்றுகள் உள்ளன. சங்க இலக்கியங்களில் இராமாயண நிகழ்வுகள் பேசப்படுகின்றன.

வான்மீகி இராமயணத்தை முதல் நூலாகக்கொண்டு தமிழில் கம்பர் இயற்றிய இராமாயணம், கம்பராமாயணம். தமிழ் மொழியை மற்றைய மொழிகளோடு ஒப்பிட்டு ஆராய்ந்து, **'A Comparative Grammer of the Dravidian or South-Indian Family of Languages'** என்ற ஒப்பிலக்கண நூலை எழுதியவர் ஸ்கொட்லாந்து பாதிரியாரான மொழி அறிஞர் றொபேட் கால்டுவெல். 1856இல் இவர் இந் நூலை வெளியிட்டார்.

"உலகில் நாகரிகம் முற்றாக அழிந்து விட்டாலும், கம்பராமாயணமும் திருக்குறளுமே இருந்தால் போதும் மீண்டும் அவற்றைப் புதுப்பித்துவிடலாம்" என்று கால்டுவெல் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆக, கம்பருடைய காலம் 12ஆம் நூற்றாண்டு என்று கூறப்படுகிறது.

இராமாயணத்தின் கதைப் போக்கில், கம்பனின் கவி நயத்தில் வெளிப்படும் சந்தமும், அணி நலங்கள், சொல் நயம், பொருள் வளம், கற்பனைச் சுவைபோன்ற இவையெல்லாவற்றையும் கம்பராமாயணத்தில் பொதுவாக நாம் அறிவோம். கம்பன் விழாக்களில் இவை ஒவ்வொன்றும் ராகமொன்றின் சுக ஆலாபனையாக - கற்பனா வரங்களாக இனிமையாகி, ஈர்க்கவைக்கின்றன.

'கம்பன் அடிப்பொடி' என்று அடிறியப்படும் தமிழ் அறிஞர் சா. கணேசன், அண்ணா துரை முதலமைச்சராகவிருந்த போது, 1968ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலக தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக்கு தலைமைவகித்தவர். அவர்தான், தனது சொந்த ஊர் காரைக்குடியில் 1939இல் கம்பன் கழகத்தை ஆரம்பித்து, கம்பன் விழாவை முதன் முதலாக தொடங்கினார். அதிலிருந்து தமிழ்நாட்டு நகரங்கள் பலவற்றிலும், இந்தியாவுக்கு வெளியே இலங்கை, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளிலும் கம்பன் கழகங்கள் தொடங்கப்பட்டு, கம்பன் விழா தொடங்கியது. கம்பராமாயணத்தை நயப்பதுடன், அதனுடன் தொடர்புபடுத்தி, சமகால பிரச்னைகளிலும் அணுகி வாதிடுவதும், வழக்காடுவதும்போன்ற விதத்தில் இக் கம்பன் விழாக்கள் நடைபெறுகின்றன.

இந்தியாவுக்கு வெளியே, இலங்கை கம்பன் கழகம் உலகளாவி அறியப்படுகிறது. 'கம்பவாரிதி' இ. ஜெயராஜ் யாழ்ப்பாணத்தில் 1980இல் இதனைத் தொடங்கினார். அது சிகரம் தொடுகிறது. அந்தப் பண்ணையில் வளர்ந்தவர்கள் இந்தியாவிலும் மற்றுமிடங்களிலும் சிறந்த இலக்கிய, ஆன்மீக பேச்சாளர்களாக மதிப்புறுகிறார்கள். இலங்கைக் கம்பன் கழகத்தின் கிளைகள்போல, இலங்கைத் தமிழர் புலம்பெயர்ந்த நாடுகளிலும் கம்பன் விழாக்கள் சில இடங்களில் நடைபெறுகின்றன.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் லண்டனில் ஒரு கம்பன் கழகம், கம்பவாரிதியுடன் தொடர்பானதாக ஆரம்பிக்கப்பட்டு, கம்பன் விழா என்று ஏற்பாடானபோது, லண்டனில் அது ஏற்புடையதாகுமா சாத்தியமானதாகுமா என்ற ஓர் எண்ணம் இயல்பானதாகவே இருந்தது. அது, ஏற்பாட்டாளர்களிடமும் நிச்சயமாக இருந்தது. நட்சத்திர பேச்சாளர்களும் பலரை இந்தியா, இலங்கையிலிருந்து வரவழைத்த வேளையிலும், பார்வையாளர்களைத் திரட்டும் ஒரு யுக்தியாக, குழாத்தினருடனான உள்ளூர் நடன நிகழ்ச்சிகளையும் கூடவே அமைத்தார்கள். முதல் இரண்டு வருடங்களும் இதேவிதமாகவே நடந்த போது, இந்த வருடம் ஒரு பாய்ச்சலுக்கு அவர்கள் துணிந்திருந்தார்கள். அதில் ஒரு சாதனையைப் புரிந்துதானிருக்கிறார்கள்.

கம்பன் விழா லண்டனில் ஓர் ஆவலை ஏற்படுத்தியேயிருக்கிறது. மொழி தெரிந்தவர்கள் சுவைப்பதற்கென்று மாத்திரமன்றி, எதிர்கால தலைமுறையிலும் அது மிகச் சிறு அளவிலாவது ஒரு பொறியை கிளப்புமென்பதும் நிச்சயமாய்த் தெரிகிறது. இம்முறை நிகழ்ச்சியின் ஏற்பாடு இதனை கட்டியம் சொன்னது. வரவழைக்கப்பட்ட நட்சத்திர பேச்சாளரும் உடன் சேர்ந்த இளையோர் அரங்கம், தமிழ்த் தாய் வாழ்த்து பாடியவர்கள் என்போர் ஒரு புறமிருக்க, நிகழ்ச்சி ஏற்பாட்டில் இணைந்த அவ் விளந் தலைமுறையினர் தரும் நம்பிக்கை பெரிது.

யூன் 27, 28ஆம் திகதிகளில் பி. ப. 2.30 மணியிலிருந்து இரவு 9.30 மணிவரையில் இரு தினங்களும் முழுமையயாய் ஆவலையும் ஆனந்தத்தையும் நிறைத்து, ரம்மியமான பொழுதுகளாக்கி, மிக நேர்த்தியாய் நடந்த இக் கம்பன் விழா, வந்தவர்கள் அனைவரையும் அடுத்தடுத்த முறைகளில் மீண்டும் மீண்டும் நிச்சயம் ஈர்க்கும். ஏற்பாட்டாளர்களின் இமாலய வெற்றி இது.

அறிவு அறக்கட்டளை என்ற அமைப்பு லண்டனில் இந்த கம்பன் விழாவை நடாத்துகிறது. அறிவு அறக் கட்டளையின் ப. நவேந்திரனும், விழா குழத் தலைவர் மு. குமாரநாயகமும் மிக நேர்த்தியான செயல்பாட்டாளர்கள் உழைப்பாளிகள். சோர்விலா உற்சாகமும் அர்ப்பணிப்புமான சிலரையும் தம்முடன் வைத்திருக்கிறார்கள். தன்னார்வத்தில் இவர்களுடன் இணைந்தும் பலர்.

இதில் மேலிட்டு தெரியும் ஒன்றுண்டு. பொதுவாக, இலங்கையுடன் தொடர்பான கம்பன் கழகங்கள், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை மையம்கொண்டனவாகவும் இருக்கின்றன. அங்கிருந்துதான் இலங்கையில் கம்பன் கழகம் தொடங்கி வளர்ந்ததில் பரவும் வாசனை இது. நவேந்திரன், குமாரநாயகம் ஆகியோர் மாத்திரமன்றி, இப்போது அவர்களுடன் இணைந்து உற்சாகம்கொள்ளும் விசாகன், சண்முகதாசன் போன்ற இளைய தலைமுறையினரும் பலர் இந்துக் கல்லூரி சார்ந்து தெரிகிறார்கள்.

இம்முறை இலங்கையிலிருந்து ஆறு. திருமுருகன்,சிறி பிரசாந்தன் ஆகியோருடன் இந்தியாவிலிருந்து த. இராமலிங்கம், தாமல் கோ. சரவணன் ஆகியோர் அழைக்கப்பட்டிருந்தனர். கடந்த ஆண்டுகளில் பாரதி பாகர், பர்வீன் சுல்தானா, பாரதி கிருஷ்ணகுமார் போன்றோரும் இந்தியாவிலிருந்து அழைக்கப்பட்டிருந்தனர்.

ஆக, லண்டனில் கம்பன் விழா தேவையா என்றால், தேவை என்றே தீர்ப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பிரதமர் மோடி அவுஸ்திரேலிய விஜயம்:


## இந்தோ பசிபிக்கில் மூலோபாய கூட்டாண்மை

ஐங்கரன் விக்கினேஸ்வரா

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் மூன்று நாள் அவுஸ்திரேலிய உத்தியோகபூர்வப் பயணம் ஜூலை 8-10வரை நடைபெற்றது. இந்த நிகழ்வு இந்தியா - அவுஸ்திரேலியா இருதரப்பு உறவுகளில் ஒரு புதிய திருப்புமுனையாகக் கருதப்படுகிறது.

கடந்த ஒரு தசாப்தமாக வேகமாக வளர்ச்சியடைந்து வரும் இரு நாடுகளின் மூலோபாய கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்தும் நோக்கத்துடன் நடைபெற்ற இந்தப் பயணம், சாதாரண அரசியல் மரியாதைச் சந்திப்பாக இல்லாமல், 21ஆம் நூற்றாண்டின் புதிய புவிசார் அரசியல் சூழ்நிலைக்கு ஏற்ப உருவாகும் விரிவான ஒத்துழைப்பின் வெளிப்பாடாகப் பார்க்கப்படுகிறது.

அவுஸ்திரேலிய பிரதமர் ஆண்டனி அல்பனீஸுடன் நடைபெறும் உயர்மட்ட பேச்சுவார்த்தைகளில், வர்த்தகம், பாதுகாப்பு, முக்கிய கனிம வளங்கள், சுத்தமான ஆற்றல், செயற்கை நுண்ணறிவு, தொழில்நுட்பம், கல்வி, இணையப் பாதுகாப்பு, இந்தோ - பசிபிக் பிராந்திய பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு முக்கிய விடயங்கள் விவாதிக்கப்பட்டன. உலக அரசியல் மற்றும் பொருளாதாரத்தில் உருவாகி வரும் புதிய சக்தி சமநிலைகளின் பின்னணியில், இந்தப் பயணம் இரு நாடுகளுக்கும் மட்டுமல்லாமல், முழு இந்தோ - பசிபிக் பிராந்தியத்தின் எதிர்காலத்திற்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.




இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா இரண்டும் பிரிட்டிஷ் பொதுநலவாய நாடுகளாக இருப்பதுடன், ஜனநாயகம், சட்டத்தின் ஆட்சி, மனித உரிமைகள், சுதந்திரமான வர்த்தகம் மற்றும் திறந்த கடல் வழித்தடங்கள் போன்ற அடிப்படை மதிப்புகளைப் பகிர்ந்து கொள்கின்றன. இருப்பினும், நீண்ட காலமாக இந்த உறவு அதன் முழு திறனை எட்டவில்லை. குறிப்பாக 1998ஆம் ஆண்டு இந்தியாவின் அணு ஆயுதச் சோதனைகளுக்குப் பின்னர் இரு நாடுகளுக்கிடையிலான உறவில் ஒரு பின்னடைவு ஏற்பட்டது. ஆனால் உலக அரசியல் சூழ்நிலை மாறிய தன் பின்னர், குறிப்பாக சீனாவின் அதிகரித்து வரும் பொருளாதார மற்றும் இராணுவ செல்வாக்கு, இந்தோ - பசிபிக் பிராந்தியத்தில் உருவான பாதுகாப்புச் சவால்கள் மற்றும் உலகளாவிய விநியோகச் சங்கிலிகளில் ஏற்பட்ட மாற்றங்கள் ஆகியவை இந்தியா - அவுஸ்திரேலியா உறவை புதிய உயரத்திற்கு கொண்டு சென்றன.

பின்னர் 2020ஆம் ஆண்டு இரு நாடுகளும் தங்களது உறவை முழுமையான மூலோபாய கூட்டாண்மை என்ற நிலைக்கு உயர்த்தின. அதனைத் தொடர்ந்து பாதுகாப்பு, கடல்சார் பாதுகாப்பு, உளவுத்துறை தகவல் பரிமாற்றம், தொழில்நுட்ப ஒத்துழைப்பு, விண்வெளி ஆராய்ச்சி, பாதுகாப்பு தொழில்நுட்பங்கள் மற்றும் பொருளாதார முதலீடுகள் போன்ற துறைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

### மூலோபாய கூட்டாண்மை:

இந்தப் பயணத்தின் மிக முக்கியமான அம்சங்களில் ஒன்று பொருளாதார ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்துவதாகும். உலகின் வேகமாக வளர்ந்து வரும் மிகப் பெரிய பொருளாதாரங்களில் இந்தியா ஒன்றாக உருவெடுத்து வருகிறது. மறுபுறம், அவுஸ்திரேலியா இயற்கை வளங்கள், கனிமச் செல்வம், உயர்தர வேளாண்மை, கல்வி மற்றும் அறிவியல் ஆராய்ச்சி ஆகிய துறைகளில் முன்னணி நாடாக விளங்குகிறது. இவ்விரு நாடுகளின் பொருளாதார பலங்கள் ஒன்றுக்கொன்று பூர்த்தி செய்யக்கூடியவை என்பதால், இருதரப்பு வர்த்தக உறவை பலப்படுத்துவதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளன.

சமீப ஆண்டுகளில் இரு நாடுகளும் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்தியுள்ளன. தற்போது முழுமையான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை நோக்கி நகரும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இந்த ஒப்பந்தங்கள் நடைமுறைக்கு வந்தால், இருதரப்பு வர்த்தகம் பல பில்லியன் டொலர்களால் அதிகரிக்கும் என்பதுடன், புதிய முதலீடுகள் உருவாகி, தொழில்முனைவோர், சிறு மற்றும் நடுத்தர



இந்தியா - அவுஸ்திரேலிய உறவின் புதிய அத்தியாயமாக பிரதமர் மோடியின் விஜயம் அமைந்துள்ளது. இந்தோ பசிபிக்கில் மூலோபாய கூட்டாண்மையை வலுப்படுத்தும் வகையில் இந்திய அவுஸ்திரேலிய உறவு மேலும் உறுதிப்படுத்தப்பட்டு வருகிறது. பிரதமர் நரேந்திர மோடியின் பயணமானது அரசியல், பொருளாதார மற்றும் புவிசார் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது.

தொழில்கள், உற்பத்தித் துறை மற்றும் சேவைத் துறைகளுக்கு புதிய வாய்ப்புகள் உருவாகும்.

இன்றைய உலக பொருளாதாரத்தில் முக்கிய கனிம வளங்கள் மிகப் பெரிய மூலோபாய முக்கியத்துவம் பெற்றுள்ளன. லித்தியம், கோபால்ட், நிக்கல், அரிய மண் தாதுக்கள் போன்ற கனிமங்கள் மின்சார வாகனங்கள், பாட்டரி உற்பத்தி, பாதுகாப்புத் தொழில்நுட்பங்கள், செயற்கை நுண்ணறிவு, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் விண்வெளி ஆராய்ச்சிக்கு இன்றியமையாதவை. இந்த வளங்களில் உலகின் மிகப்பெரிய உற்பத்தியாளர்களில் அவுஸ்திரேலியா முன்னணியில் உள்ளது. அதேவேளை, தொழில்மயமாக்கல் மற்றும் பசுமை ஆற்றல் மாற்றத்தை விரைவுபடுத்தும் இந்தியா, இவ்வளங்களை நீண்டகால அடிப்படையில் பாதுகாப்பாகப் பெற விரும்புகிறது. எனவே முக்கிய கனிம வளங்களில் உருவாகும் கூட்டாண்மை, எதிர்கால உலக பொருளாதாரத்திலும் தொழில்நுட்ப வளர்ச்சியிலும் மிக முக்கிய பங்காற்றும்.

பாதுகாப்பு ஒத்துழைப்பும் இந்தப் பயணத்தின் மற்றொரு முக்கிய அம்சமாகும். இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா இரண்டும் இந்தியப் பெருங்கடல் மற்றும் பசிபிக் பெருங்கடலில் சுதந்திரமான கடல்சார் போக்குவரத்தை உறுதி செய்வதில் ஒரே நிலைப்பாட்டைக் கொண்டுள்ளன. கூட்டு கடற்படைப் பயிற்சிகள், கடல்சார் கண்காணிப்பு, பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள், இணையப் பாதுகாப்பு மற்றும் உளவுத்துறை தகவல் பரிமாற்றம் போன்ற துறைகளில் இரு நாடுகளும் தொடர்ந்து ஒத்துழைத்து வருகின்றன. உலக வர்த்தகத்தின் பெரும்பகுதி கடல் வழியாக நடைபெறும் நிலையில், கடல்சார் பாதுகாப்பு உலக பொருளாதாரத்தின் நிலைத்தன்மையுடன் நேரடியாக தொடர்புடையதாகும்.

### இந்தோ பசிபிக் அரசியல்:


இந்தப் பயணத்தைப் புரிந்துகொள்வதற்கு இந்தோ - பசிபிக் பிராந்தியத்தின் அரசியல் முக்கியத்துவத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். உலகின் பொருளாதார வளர்ச்சியின் மையமாக மாறிவரும் இந்தப் பிராந்தியத்தில், அமெரிக்கா, சீனா, இந்தியா, ஜப்பான் மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளின் போட்டியும் ஒத்துழைப்பும் எதிர்கால சர்வதேச அரசியலை தீர்மானிக்கும் முக்கிய காரணிகளாக உள்ளன. இந்தச் சூழலில் இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா, சுதந்திரமான கடல் வழித்தடங்கள், சர்வதேச சட்டங்களுக்கான மரியாதை மற்றும் சிறிய நாடுகளின் இறையாண்மையைப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி வருகின்றன.

இதனுடன் தொடர்புடையதாக, குவாட் அமைப்பின் முக்கியத்துவமும் அதிகரித்துள்ளது. இந்தியா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் இணைந்து செயல்படும் இந்த அமைப்பு, இராணுவக் கூட்டணியாக இல்லாவிட்டாலும், இந்தோ - பசிபிக் பிராந்தியத்தில் நிலைத்தன்மை, பாதுகாப்பு, பேரிடர் மேலாண்மை, தொழில்நுட்ப ஒத்துழைப்பு மற்றும் கடல்சார் பாதுகாப்பு போன்ற துறைகளில் முக்கிய பங்காற்றி வருகிறது. மோடியின் இந்தப் பயணம் குவாட் நாடுகளுக்கிடையேயான நம்பிக்கையையும் ஒருங்கிணைப்பையும் மேலும் வலுப்படுத்தும்.

காலநிலை மாற்றம் மற்றும் சுத்தமான ஆற்றல் மாற்றம் ஆகியவை இன்றைய உலகின் மிகப் பெரிய சவால்களாகும். கார்பன் உமிழ்வைக் குறைக்கும் நோக்கில் உலக நாடுகள் நகரும் நிலையில், இந்தியாவும் அவுஸ்திரேலியாவும் பசுமை ஹைட்ரஜன், சூரிய ஆற்றல், காற்றாலை மின்சாரம், கார்பன் சேமிப்பு தொழில்நுட்பங்கள் மற்றும் சுத்தமான எரிசக்தி முதலீடுகள் போன்ற துறைகளில் இணைந்து செயல்பட முடியும். இந்த ஒத்துழைப்பு இரு நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கும், உலகளாவிய காலநிலை இலக்குகளை அடைவதற்கும் முக்கிய பங்களிப்பாக அமையும்.

### இந்திய மாணவர் உயர் கல்வி:

கல்வி மற்றும் ஆராய்ச்சி துறைகளும் இந்தியா - அவுஸ்திரேலியா உறவின் வலுவான அடித்தளங்களாக உள்ளன. அவுஸ்திரேலியாவில் இலட்சக்கணக்கான இந்திய மாணவர்கள் உயர் கல்வி பயின்று வருகின்றனர். பல்கலைக் கழகங்களுக்கிடையேயான கூட்டு ஆராய்ச்சிகள், மருத்துவ அறிவியல், செயற்கை நுண்ணறிவு, உயிரியல் தொழில்நுட்பம், இணையப் பாதுகாப்பு மற்றும் விண்வெளி அறிவியல் போன்ற துறைகளில் புதிய வாய்ப்புகளை உருவாக்கி வருகின்றன. எதிர்கால அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கான அடித்தளமாக இந்த ஒத்துழைப்பு அமையக்கூடும்.



அவுஸ்திரேலியாவில் வாழும் இந்திய வம்சாவளியினரின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது. மருத்துவம், தகவல் தொழில்நுட்பம், கல்வி, தொழில்முனைவு, வணிகம் மற்றும் அரசியல் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் அவர்கள் ஆற்றும் பங்கு, இரு நாடுகளுக்கிடையிலான மக்கள் - மக்கள் உறவை வலுப்படுத்துகிறது. இந்திய வம்சாவளியினர் இன்று அவுஸ்திரேலியாவின் பல்துறை சமூகத்தின் முக்கிய அங்கமாக மாறியுள்ளதுடன், இரு நாடுகளின் பொருளாதார மற்றும் கலாசார உறவுகளுக்கு பாலமாகவும் செயல்பட்டு வருகின்றனர்.

இந்தப் பயணம் நேரடியாக எந்த நாட்டையும் எதிர்த்து மேற்கொள்ளப்படவில்லை என்றாலும், புவிசார் அரசியல் ஆய்வாளர்கள் இதனை சீனாவின் வளர்ந்து வரும் செல்வாக்குக்கு எதிரான சமநிலை முயற்சியின் ஒரு பகுதியாகப் பார்க்கின்றனர். இந்தியாவும் அவுஸ்திரேலியாவும் சீனாவுடன் வலுவான பொருளாதார உறவுகளைத் தொடர்ந்து பேண விரும்பினாலும், பிராந்திய பாதுகாப்பு, கடல்சார் சுதந்திரம் மற்றும் சர்வதேச சட்டங்களைப் பாதுகாப்பது போன்ற விடயங்களில் தங்களது பொதுவான நிலைப்பாட்டை உறுதிப்படுத்துகின்றன.

பிரதமர் நரேந்திர மோடியின் அவுஸ்திரேலியப் பயணம் இரு நாடுகளுக்கிடையிலான நட்புறவை மேலும் வலுப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், இந்தோ - பசிபிக் பிராந்தியத்தின் அரசியல், பொருளாதார மற்றும் பாதுகாப்பு கட்டமைப்பிலும் நீண்டகால தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. வர்த்தகம், பாதுகாப்பு, முக்கிய கனிம வளங்கள், தொழில்நுட்பம், கல்வி, காலநிலை மாற்றம் மற்றும் மக்கள் - மக்கள் உறவுகள் ஆகிய அனைத்துத் துறைகளிலும் உருவாகும் புதிய ஒத்துழைப்புகள், இந்தியா - அவுஸ்திரேலியா உறவை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும். உலகம் பலதுருவ அமைப்பை நோக்கி நகரும் இந்தக் காலகட்டத்தில், ஜனநாயக விழுமியங்களையும் பரஸ்பர நம்பிக்கையையும் அடிப்படையாகக் கொண்ட இந்த கூட்டாண்மை, எதிர்கால ஆசிய - பசிபிக் மற்றும் உலக அரசியலில் முக்கியமான சக்தியாக உருவெடுக்கும் என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## யாழ்ப்பாண பல்கலை...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

தவறாகக் காணப்படுவது அவதானிக்கப்பட்டு அவருக்குக்கான உள நிலை அறிக்கை பெறப்படவேண்டும் என்பதும் நிறைவேற்றப்படாமலேயே, முறையான விசாரணைக்கு பல்கலைக்கழகம் தற்போது முயற்சித்து வரு வதாக அறிய முடிகிறது. இந்த முதனிலை அறிக்கையில், பேராசிரியருக்கு எதிரான எந்தக் குற்றச்சாட்டுக்களுமே நிரூபிக்கப்படாத நிலையில், முறையான விசாரணைக்கெனக் குற்றச்சாட்டுப் பட்டியலைத் தயாரி ப்பதிலும் பல்கலைக்கழக நிர்வாகம் சவால்களை எதிர்கொண்டுவருவதாகத் தெரியவரு கின்றது.

மேலும் பல்கலைக்கழக விசாரணைக்கென சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஒலிப்பதிவே சமீபத்தில் சமூக ஊடகங்களில் பரப்பப்பட் டிருந்ததும், இந்த ஒலிப்பதிவு ஏறத்தாழ 13 இடங்களில் கையாளலுக்கும் வெட்டி ஒட்டல்களுக்கும் உள்ளாக்கப்பட்டிருந்தது தொழில்நுட்பரீதியாக அறியப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. இதற்கான சட்ட நடவடிக்கையின் பிரகாரம், மேற்படி ஒலிப் பதிவைத் தம்வசம் வைத்திருந்த குறித்த பெண்ணும், சாட்சியமாக வழங்கப்பட்ட ஒலிப் பதிவைக் பெற்றிருந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சார்பில் அதன் நிர்வாகத் தலைவரான பல்கலைக்கழகத் துணைவேந்த ரும் முதல் இரண்டு பிரதி மனுதாரர்களாக, பேராசிரியர் தொடுத்திருக்கும் நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தின் கீழான வழக்கில் பெயர் குறிப்பிடப்படிருப்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

பல்கலைக்கழக விசாரணைகள் தொடர்பில், பல்கலைக்கழகப் பேரவையில் ஏற்கனவே அமைக்கப்பட்டிருக்கும் சட்ட உப குழுவின் அறிவுரைகளோ அல்லது வழிகாட் டுதல்களோ எதும் பெறப்படாததை, பேர வையில் அந்த குழுவின் தலைவரான கொழும்புப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் சட்ட பீடப் பீடாதிபதியாக நான்கு முறைகள் பதவி வகித்தவர் சுட்டிக்காட்டியும் அது அலட்சியப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் எந்தத் திசை நோக்கி நகர்வது என்ற குழப்பத்தில், பேராசிரியர் ஏற்கனவே கோரியிருந்த அவரது உரிமையான பணியிடை விடுமுறைக் கோரி க்கைக்கு இதுவரை பதில் தரப்படாதது மாத் திரமல்ல, அவரது நற்பெயருக்கும் களங்கம் ஏற்படுத்துவது தொடர்பிலும் திட்டமிட்டே பல்கலைக்கழக நிர்வாகம் செயற்ப ட்டு வருவது உறுதியாகின்றது.

பேராசிரியரின் செயற்பாடுகளை முடக்கி, அவரது நற்பெயரை அவதூறு செய்வதில் பல்கலைக்கழகத்தின் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்போது, இன்ன மும் பல விடயங்கள் வெளித்தெரியவரும்.

ஆனால், தனக்கிழைக்கப்பட்டதாகக் கூறப்படும் இந்த விடயங்கள் தொடர்பில் இதுவரை குறித்த பெண்ணாலோ அல்லது அவரைப் பின்னிருந்து இயக்குபவர்களாலோ இதுவரை ஒரு தடவையேனும் பொலிஸ் நிலையத்திலோ அல்லது நீதிமன்றச் சட்டமுறைமைகளின்படியோ எந்த விதமான புகாரிடும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இது, குறித்த பொய்ப்பரப்புரைகளை சமூக ஊடகங்களில் மாத்திரம் முன் வைப்பதினூடாக அவதூறைப் பரப்பும் முயற்சியே என்பதை மேலும் உறுதிப்படுத்துகின்றது.

வேண்டுமானால் ஓர் பொலிஸ் நடவடிக்கையாக, சட்டத்தின்பால் முன்னெடுக்கப் பட வேண்டிய புகாரைக் குறித்த பெண் ணும், அவரின் பின்னணியில் இருப்பவர்களும் சமூக ஊடகங்களில் அவதூறு பரப்பு வதனை நோக்ககாகக் கொண்டு குறுக்கிவை த்திருப்பது திட்டமிடப்பட்டே மேற்கொள் ளப்படுகின்றது. பொலிஸ் மற்றும் சட்ட நடவடிக்கைகளுக்குச் சென்றால், சாட்சியங்களின் போலித்தன்மையும் நம்பகத்தன்மையும் நிச்சயம் கேள்விக்குள்ளாகும் என்ற அச்சமே இதற்கு அடிப்படையாகும்.

இன்னும் எத்தகைய சட்ட, நிர்வாக மீறல்கள் தொடரும்?.

## பிரதேச சபை உறுப்பினர் துப்பாக்கியுடன் கைது!

கொழும்பு, ஜூலை. 12

ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அம்பலாங்கொடை பிரதேச சபை உறுப்பினர், காலி மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப் பட்டுள்ளார்.

ரிப்பீட்டர் ரக துப்பாக்கியொன்றை சட்டவிரோத மான முறையில் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரி லேயே கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த துப்பாக்கி அவருக்கு எவ்வாறு கிடைத் தது என்பது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேலும், இது ஏதேனும் குற்றச் செயல்களுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பது குறித்தும் விசாரணை நடத்தி வருவதாக காலி மாவட்ட குற்றத் தடுப் புப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

## வடமாகாணத்திலும்...

பீடாதிபதியுமான நாகமுத்து பிரதிபராஜா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் தனியார் விடுதி ஒன்றில் நேற்று மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான அமைப்பு ஏற்பாடு செய்த எல்நினோ தொடர்பான் விவசாயப் போதனாசிரியர்கள் மற்றும் கடற்தொழில் சார்ந்தவர்களுக்கான செயல்மர்வில் பங்கு பற்றிக் கருத்து தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த சமுத்திர பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள கடல் வெப்பம் இலங்கை மற்றும் மாலைதீவில் அதிக தாக்கத்தை செலுத்த வாய்ப்புகள் உள்ளது.

இலங்கையை பொறுத்தவரையில் குறிப்பாக வட மாகாணத்தின் முல்லைத்தீவு, மன்னார் , கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் பாரிய நீருக்கான தட்டுப்பாட்டினை ஏற்படுத்தும். நிலத்தின் ஊடாக வெப்பத்தை கடத்துவதிலும் பார்க்க 16 மடங்கு வேகமாக நீரின் ஊடாக வெப்பம் கடத்தப்படுகின்ற நிலையில் இந்து சமுத்திரக் கடற்பரப்பில் ஏற்படுகின்ற கடல் வெப்ப ஏற்றம் வேகமாக ஏனைய பகுதிகளுக்கும் பரவும். ஜூலை, செப்ரெம்பர் மாதங்களில் அதிகமான வறட்சியை ஏற்படுத்துகின்ற எல்நினோ ஒக்ரோபர், நவம்பர் மாதங்களில் பாரிய மழைவீழ்சியையும் ஏற்படுத்தும்.

இருந்தாலும் இந்த தாளமுக்கங்கள் ஒக்ரோபர் மாதத்திற்கு பின்னரான காலப் பகுதியிலே ஏற்படுவதற்கான சாத்தியங்கள் இருக்கும் நிலையில் அதுவரையான காலப் பகுதியில் அதிக வறட்சியே நிலவும். ஆகவே எல்நினோ இந்து சமுத்திரத்தை அண்மித்துள்ள நிலையில் பொதுமக்கள் நீர் முகாமைத்துவத்தை சரியாகப் பின்பற்றி அதிக வெப்பத்தினால் ஏற்படுகின்ற நீர்த்தட்டுப்பாட்டினை சமாளிக்கும் செயற்பாடுகளில் ஈடுபட முன் வர வேண்டும்- என்றார்.

இந்த நிகழ்வில் வட மாகாண பிரதி விவசாய பணிப்பாளர் அஞ்சனாதேவி சிறிரங்கன், யாழ் மாவட்ட கடற்தொழில் நீரியல் வள திணைக்கள உதவி பணிப்பாளர் எஸ். அகிலன், மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான அமைப்பு ஜாட்சன் பிகிராடோ ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

## டெங்கு மரணங்கள்...

முழுவதும் 67,174 டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளதாக அந்த பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஜூலை மாதத்தின் முதல் 09 நாள்களில் மட்டும் 10,685 நோயாளிகள் பதிவாகியுள்ளதுடன், நேற்று முன்தினம் ஒரே நாளில் மட்டும் சுமார் 1,110 நோயாளிகள் பதிவாகியுள்ளதாக டெங்கு ஒழிப்புப் பிரிவின் பதில் பணிப்பாளர் வைத்தியர் கபில கன்னங்கர தெரிவித்தார்.

தற்போது பல முக்கிய வைத்தியசாலைகளின் கொள்ளளவு அதன் உச்சத்தை எட்டியுள்ளதால், வைத்தியசாலைகளில் கடும் நெருக்கடி மற்றும் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## சமஷ்டித் தீர்வுக்கு இலங்கையை...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது இவ்வாறிருக்க, தமிழ்நாட்டில் இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பிலான உணர்வுநிலை பல்வேறு காரணிகளின் விளைவாக "தணிந்து போயிருக்கின்ற" இன்றைய காலகட்டத்தில் மீண்டும் அவர்களை "தட்டியெழுப்புவதற்கு" தமிழ் தேசிய பேரவை முன்னெடுக்கின்ற முயற்சிகள் எந்தளவுக்கு பயன்தரும் என்பதும் பிரதமர் நரேந்திர மோடியின் அரசாங்கத்துக்கு நெருக்குதலைக் கொடுக்கக்கூடியதாக முதலமைச்சர் ஜோசப் விஜய் உட்பட மாநில அரசியல் சக்திகள் இயக்கம் ஒன்றை முன்னெடுக்க அக்கறை காட்டுமா என்பதும் முக்கியமான கேள்விகள்.

தங்களது கோரிக்கைகள் தொடர்பில் உள்நாட்டில் ஜனநாயக ரீதியான மக்கள் இயக்கம் ஒன்றை முன்னெடுக்காமலும் முதலில் அரசாங்கத்தை அணுகாமலும் தமிழ்நாட்டில் ஆதரவைத் திரட்டுவதில் உள்ள பொருத்தப்பாடு குறித்து தமிழ் தேசிய பேரவை முதலில் தெளிவுபடுத்த வேண்டும். வடக்கு,கிழக்கில் எந்தவிதமான அரசியல் இயக்கத்தையும் முன்னெடுக்காமல் தமிழ்நாட்டு அரசியல் சக்திகளின் ஒருமைப்பாட்டை நாடுவதனால் மாத்திரம் எதைச் சாதிக்க முடியும்?

இலங்கை தமிழ் கட்சிகள் இந்தியாவின் உதவியையும் ஆதரவையும் கோருவது என்பது வரலாற்று ரீதியாக ஆழமாக வேரூன்றிய ஒரு தந்திரோபாயமாகும். ஆனால், இன்றைய சூழ்நிலையில் அது சிக்கலான புவிசார் அரசியல் மற்றும் உள்நாட்டு வரம்புகளைக் கொண்ட ஒரு அணுகுமுறையாகும்.

இனப்பிரச்சினையில் முறையான ஒரு உடன்படிக்கை அடிப்படையிலான "அதிகாரபூர்வத் தகுதியை" கொண்டிருக்கும் ஒரேயொரு வெளிநாடு இந்தியா மாத்திரம் என்பதே தற்போது தமிழ்க் கட்சிகள் புதுடில்லியை நோக்கிப் பார்ப்பதற்கான முதன்மையான காரணியாகும். 1987 ஜூலை சமாதான உடன்படிக்கை காரணமாக கொழும்புக்கு நெருக்குதலைக் கொடுப்பதற்கு அல்லது நல்லெண்ணத்தைப் பயன்படுத்துவதற்கு இந்தியாவுக்கு "கடப்பாடு" இருப்பதாக தமிழ் கட்சிகள் நம்புகின்றன.

ஆனால், மாகாணசபை தேர்தல்களை நடத்துவதுடன் 13 வது திருத்தத்தையும் முழுமையாக நடைமுறைப் படுத்துமாறு அவ்வப்போது இலங்கை அரசாங்கங்களிடம் வேண்டுகோள் விடுப்பதை தவிர, வேறு எந்தவிதமாகவும் அந்த "கடப்பாட்டை" புதுடில்லி நோக்குவதாக தெரியவில்லை. அது விடயத்தில் நெருக்குதலைப் பிரயோகிப்பதற்கு மோடி நிருவாகம் முன்வரும் என்று எதிர்பார்க்க முடியாது.

சமாதான உடன்படிக்கைக்கு கொழும்பைப் பொறுப்புக் கூற வைப்பதற்கு இந்தியாவின் பாத்திரத்தை முன்னிறுத்துவது தமிழ் கட்சிகளைப் பொறுத்தவரை, இயல்பான ஒரு தந்திரோபாயமாக இருந்தாலும் கூட, முழுமையான சமஷ்டிக் கட்டமைப்பை இந்தியா பெற்றுத்தர வேண்டும் என்ற கோரிக்கையின் நடைமுறைச் சாத்தியத் தன்மை பற்றி சிந்திக்க வேண்டும்.

தமிழ்த் தேசியத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் ஒரு சமஷ்டி கட்டமைப்பை தமிழ் கட்சிகள் கோருகின்ற போதிலும், இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைக் கட்டமைப்பு இந்த கோரிக்கையுடன் ஒத்துப்போகமுடியாத தெளிவான வரம்புகளைக் கொண்டிருக்கிறது. இந்தியாவே மிகவும் வலுவான மத்திய அரசைக் கொண்ட ஓரளவு சமஷ்டி மாதிரியில் (மாநிலங்களின் ஒன்றியம்) இருக்கும் நிலையில், தனது சொந்த எல்லைக்குள் மாநிலங்களுக்கு வழங்கத் தயங்கும் தன்னாட்சியை அயல்நாடு ஒன்றில் ஒரு முழுமையான சமஷ்டி அமைப்பாக வற்புறுத்துவதற்கு புதுடில்லி முன்வரும் என்று எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

தங்களது அதிகாரங்களை மோடி நிருவாகம் பறித்தெடுக்கிறது என்ற குற்றச்சாட்டை தமிழ்நாடு உட்பட பல மாநில அரசாங்கங்கள் அண்மைக்காலமாக முன்வைத்து வருவதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

1980 களில் செய்ததைப் போன்ற இராணுவ பலத்துடன் கூடிய தலையீட்டு இராஜதந்திரக் காலம் எப்போதோ கடந்து விட்டது. இன்று இலங்கையைப் பொறுத்தவரை, புதுடில்லியின் முதன்மை நோக்கம் இந்தியாவின் கடல்சார்மற்றும் மூலோபாய நலன்களை மதிக்கும் நிலையானதும் நட்புறவானதுமான அரசாங்கத்தைப் பேணிப் பாதுகாப்பதாகும். தமிழர் விவகாரத்தில் கொழும்பு அரசாங்கத்துக்கு மிதமிஞ்சிய நெருக்குதலைக் கொடுப்பது கொழும்பை இந்தியாவுக்கு விரோதமான வல்லாதிக்க நாடுகளின் குறிப்பாக, சீனாவின் பிடிக்குள் தள்ளிவிடும் என்று புதுடில்லி நம்புகிறது.

தென்னிலங்கை அரசியல் சூழலில், "சமஷ்டி" என்ற சொல் நாட்டுப் பிரிவினைக்கான முதற்படியாகவே பார்க்கப்படுகிறது. அதனால், கடுமையான சிங்கள தேசியவாத எதிர்ப்பைக் கிளப்பி, இராஜதந்திர ரீதியான எந்தவொரு முன்னேற்றத்தையும் முடக்கிவிடக்கூடிய அணுகுமுறையை இந்தியா ஒருபோதும் கடைப்பிடிக்காது என்று நம்பலாம்.

இந்த கருத்துக்களை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு தமிழ்நாட்டு அரசியல் சக்திகளினதும் மக்களின் ஆதரவையும் ஒருமைப்பாட்டையும் மீண்டும் பெறும் நோக்குடன் தமிழ் தேசிய பேரவை மேற்கொண்டு வருகின்ற முயற்சிகளை மலினப்படுத்தும் எண்ணத்தில் முன்வைக்கப்படுபவையாக வியாக்கியானம் செய்ய வேண்டியதில்லை. அந்த பேரவையில் அங்கம் வகிக்கும் கட்சிகளினதும் குழுக்களினதும் தலைவர்கள் சரியானது என்று தங்களுக்கு தெரிகின்ற தந்திரோபாயத்தைக் கடைப்பிடிக்கிறார்கள்.

ஆனால், 1983 கறுப்பு ஜூலைக்கு பின்னரான காலப் பகுதியில் இன்று வரை இனப்பிரச்சினையில் தமிழ்நாட்டு அரசியல் சக்திகளின் ஆதரவினதும் இந்தியாவின் ஈடுபாட்டினதும் மட்டுப்பாடுகள் பற்றியும் அவற்றினால் அடையக்கூடியதாக இருந்த விளைவுகளைப் பற்றியும் ஒரு தெளிவு இருப்பது அவசியமாகும்.

இந்தியாவின் முன்னைய ஈடுபாட்டை தமிழர் தரப்பு கையாண்ட முறையின் விளைவாக தோன்றிய நிலைவரம் பற்றியும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தமிழ் தேசிய பேரவையின் அண்மைக்கால முயற்சிகளுக்கு பிறகு முதலமைச்சர் ஜோசப் விஜய்யின் அரசாங்கமும் மாநில

அரசியல் சக்திகளும் எத்தகைய அணுகுமுறையைக் கடைப்பிடிக்கப் போகின்றன என்பது முக்கியமானது. அடுத்துவரும் நாட்களில் அதை அறியக்கூடியதாக இருக்கும்.

தற்போதைக்கு குறைந்தபட்சம் இலங்கையில் மாகாணசபை தேர்தல்களை நடத்தி 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கத்துக்கு நெருக்குதலைக் கொடுக்குமாறு மோடி அரசாங்கத்தை வலியுறுத்துவராக இருந்தால் அதுவே பெரிய விடயமாக இருக்கும். நாம் ஒன்றுமே செய்யாமல் எமக்கு எவரும் வாங்கித் தருவதல்ல சமஷ்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## இலங்கையில் கடுமையாகும்...

என்று சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்துகிறது.

அதனடிப்படையில் எதிர்வரும் காலங்களில் உள்நாட்டு இறைவரித் திணைக்களமும் சுங்கத்திணைக்களமும் கைகோர்த்துச் செயற்படவுள்ளன.

இலங்கையில் பிரதான வரி அறவிடல் நிறுவனங்கள் தங்களுக்குள் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளாமல் தன்னிச்சையாகச் செயல்பட்டதுதான் இதுவரை இருந்த மிகப்பெரிய பலவீனம் என்று சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது.

அதன் காரணமாக இனிவரும் காலங்களில் சுங்க மோசடி மற்றும் வரி ஏய்ப்பைத் தடுக்க பல புதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேலும் காகிதமில்லா சுங்க நடவடிக்கைகள் மற்றும் ஒரு புதிய கலால் வரி முகாமைத்துவ அமைப்பு என்பனவும் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. (அ)

## தமிழ் அரசியல்...

பிந்துனுவெவ படுகொலை போன்ற சம்பவங்கள் உட்பட சிறைச்சாலைகளில் வன்முறையான சூழல் உருவாகும் போதெல்லாம் தமிழ் அரசியல் கைதிகள் அதிக ஆபத்தை எதிர்கொள்கின்றனர்.

இதனையடுத்து, தமிழ் அரசியல் கைதிகளுக்காக தனித்துவமான பாதுகாப்பு வலயங்களை அமைத்தல், கைதிகளின் குடும்பங்களுக்கு அவர்களின் பாதுகாப்பு நிலை குறித்த தகவல்களை உடனுக்குடன் வழங்குதல், ஐக்கிய நாடுகளின் சித்திரவதைத் தடுப்புக்குழு மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகிய அமைப்புகளுக்கு தடையற்ற கண்காணிப்பு அனுமதி வழங்குதல் ஆகியன அவசியமாகும்.

மேலும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நீண்ட காலமாக விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை நிபந்தனையின்றி விடுதலை செய்ய ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்துவ வேண்டும்-என்றுள்ளது. (அ)

## விவசாயிகளுக்கு...

ஐக்கிய மக்கள் சக்தி தலைமைச் செயலகத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள மாண்புமிகு டி.எஸ். சேனநாயக்க அரசியல் பீடத்தில் நேற்று நடைபெற்ற செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்:

ஜனநாயக நாடொன்றில் சட்டவாக்கத்துறை, நிறைவேற்றுத்துறை மற்றும் நீதித்துறை என மூன்று முக்கிய தூண்கள் காணப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக, சுதந்திர ஊடகமும் மற்றுமொரு தூணாக விளங்குவதால், அது அரசியலமைப்பில் நேரடியாகக் குறிப்பிடப்படாவிட்டாலும் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

ஆனால், தற்போதைய அரசாங்கம் ஜனநாயக உரிமைகளை ஒடுக்கி, பேச்சுச் சுதந்திரத்தை இல்லாதொழித்துள்ளது. 'நிகழ்நிலை காப்புச் சட்டம்' மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டம் ஆகியவற்றை நீக்குவோம் என்று தேர்தல் காலத்தில் கூறினாலும், அவை இன்னமும் நடைமுறையில் உள்ளன. தற்போது பாராளுமன்றத்தில் பேசும் சுதந்திரம் கூட மீறப்பட்டு வருகின்றது.

இன்று விவசாயிகள் எதிர்கொள்ளும் பாரிய பிரச்சினைகள் குறித்துப் பேசுவதற்குக் கூட சுதந்திரம் இல்லை. தேர்தல் காலத்தில், தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சர்கள் நெல்லுக்கு 150 ரூபாய் உத்தரவாத விலை தருவதாகக் கூறினர். ஆனால் இன்று அது 120 ரூபாய்க்கும் குறைவான மட்டத்திற்கு வந்துள்ளது.

ஒரு கிலோ நெல்லை உற்பத்தி செய்வதற்கு 137 ரூபாய் செலவாவதாக விவசாய அமைச்சரே ஒப்புக்கொண்டுள்ளார். அவ்வாறிருக்க, விவசாயிகளின் தோள்களில் ஏறி ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கம், இன்று விவசாயிக்கு ஒரு கிலோவிற்குக் குறைந்தது 17 ரூபாய் நட்டத்தை ஏற்படுத்தியுள்ளது.

உண்மையை விட அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதையே நோக்கமாகக் கொண்டு, விவசாயிகளின் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசாங்கம், இன்று பாராளுமன்றத்தில் விவசாயிகளின் துயரத்தைக் கூறுவதற்கு எதிர்க்கட்சிக்குள்ள உரிமையை மறுத்து வருகின்றது.

இந்த அரசாங்கம் கடந்த அரசாங்கத்தின் பாதையிலேயே பயணித்து, 2023 ஆம் ஆண்டைப் போலவே இன்றும் பாராளுமன்றக் குழுக்களில் பேசுவதற்கும் கருத்துக்களை வெளியிடுவதற்கும் தடை விதித்துள்ளது.

விதை, உரம், விவசாய இரசாயனப் பிரச்சினைகள் மற்றும் மனித-யானை மோதல் போன்ற விடயங்கள் குறித்துப் பேசுவதற்கு இன்று உரிமை இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 52 வீத பங்களிப்பை வழங்கும் நுண், சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முனைவோரின் சொத்துக்களை ஏலம் விடுவது தொடர்பான 'பராட்டே சட்டத்தை', தேர்தல் இலக்குகளுக்காக மட்டுமே இந்த அரசாங்கமும் கடந்த அரசாங்கமும் தற்காலிகமாக இடைநிறுத்தி வைத்திருந்தன.

இதனால் அவர்களுக்கு உரிய நீதி கிடைக்கவில்லை. இந்த தொழில்முனைவோருக்குக் குறைந்த வட்டியில் மூலதனத்தைப் பெற்றுக்கொடுக்க அரசாங்கம் தவறிவிட்டது. அரசாங்கத்தின் சலுகைகள் அனைத்தும் பெரும் கோடீஸ்வரர்களுக்கே கிடைக்கின்றன. நடுத்தர வர்க்கத்தினருக்கும், கிராமப்புற மக்களுக்கும், தோட்டத் தொழிலாளர்களுக்கும் இந்த சலுகைகள் கிடைத்த பாடில்லை.

இந்த அரசாங்கம் சர்வாதிகார ஆட்சியை நோக்கி நகர முயற்சிக்கின்றது. இவர்கள் சட்டவாக்கத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை, சுதந்திர ஊடகம் மட்டுமன்றி சிவில் சமூகத்தையும் முடக்கி, ஒரு சர்வாதிகாரப் போக்கைக் கடைப்பிடிப்பது மிகவும் ஆபத்தான ஒரு நிலைமையாகும்.

தற்போது உயர் நீதிமன்றங்களில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்பாமல், நீதியரசர்களின் ஓய்வு பெறும் வயதை அதிகரிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது நீதித்துறைக்கு விடுக்கப்படும் பெரும் அழுத்தமாகும். இதற்கு எதிராக எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி தொடர்ந்து போராடும்.

எங்களிடம் சில குறைபாடுகள் காணப்பட்டாலும், நாட்டை கட்டியெழுப்பும் சரியான பாதையிலேயே ஐக்கிய மக்கள் சக்தி பயணித்துக்கொண்டிருக்கின்றது-என்றார். (அ)

## தேசிய பாதுகாப்பு...

மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

தற்போது நிலவும் சூழ்நிலைகள் காரணமாக பொதுப்பாதுகாப்பு தொடர்பான சில கவலைகள் எழுந்தபோதிலும், அந்தப் பிரச்னைகளுக்கு தற்போது தீர்வு காணப்பட்டுள்ளது. அத்துடன், தானும் தனது குழுவினரும் அரசியலமைப்பு மற்றும் நிறுவப்பட்ட கொள்கைகளுக்கு இணங்க அனைத்து ஆக்கப்பூர்வமான திட்டங்களையும் செயற்படுத்தி வருகின்றோம்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் எடுக்கப்பட்டு வரும் நேர்மறையான நடவடிக்கைகளை எதிர்க்கட்சியினர் நாளாந்தம் விமர்சித்து வருகின்றனர். மேலும், சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் நியமனம் மற்றும் போகம்பரை சிறைச்சாலையை மீண்டும் நிறுவுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளமை உள்ளிட்ட விடயங்கள் குறித்து தேசிய மக்கள் சக்தியின் ஊடகப் பேச்சாளர் வரும் நாட்களில் தெளிவுபடுத்துவார்-என்றார். (அ)

## இசைக்குயில் ஜானகி...

மருத்துவமனையில் நேற்று இயற்கை எய்தினார்.

ஆறு தசாப்தங்களுக்கும் மேலாக நீடித்த தனது இசைப் பயணத்தில், தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி உட்பட 20 இற்கும் மேற்பட்ட மொழிகளில் சுமார் 48,000 பாடல்களைப் பாடி உலகெங்கும் உள்ள கோடிக்கணக்கான இசை ரசிகர்களின் நெஞ்சங்களில் நீங்கா இடம் பிடித்தவர்.

4 தேசிய விருதுகளையும், 33 மாநில அரசு விருதுகளையும் வென்று சாதனை படைத்தவர்.

அவரது மறைவு இந்திய இசைத்துறையில் ஒரு பொற்காலத்தின் முடிவைக் குறிக்கிறது. ஜானகி அம்மாவின் மறைவுக்கு திரையுலகினரும், ரசிகர்களும் தங்களது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து வருகின்றனர்.

தமிழ் சினிமாவின் எம்.எஸ். விஸ்வநாதன், இளையராஜா, ஏ.ஆர். ரகுமான் உள்ளிட்ட பல்வேறு இசையமைப்பாளர்கள் இசையில் ஆயிரக்கணக்கான பாடல்களை பாடியுள்ளார்.

மலையாளம், தெலுங்கு, இந்தி உள்ளிட்ட ஏராளமான மொழிகளிலும் பாடி, உலகளவில் நன்கு அறியப்பட்ட பாடகியாவார். (அ)

## மின் இணைப்பு...

இதனையடுத்து உடனடியாக பளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில், அவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் அப்பகுதி மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (அ)

## இலங்கையில் மேற்கொண்ட...

தொடர்ந்து நடைபெற்று வரும் இந்த விற்பனைச் சரிவு காரணமாக பங்குச் சந்தையின் வேகம் குறைந்துள்ளது.

இந்த ஆண்டு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அரசாங்கப் பத்திரங்கள் மற்றும் பிணைமுறிப் பத்திரங்களிலிருந்து நிகரமாக 13.9 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் (அல்லது 5 பில்லியன் ரூபாவுக்கும் மேல்) அதிகமான தொகையை விற்றுள்ளனர்.

கிட்டத்தட்ட 4 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாயின் மதிப்பு மிகக் குறைந்த மட்டத்தில் இருப்பதால், டொலரின் மதிப்பைப் பாதுகாப்பதற்காக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இயல்பாகவே தங்கள் பங்குகளை விற்று வருகின்றனர்.

உலகளாவிய அரசியல் அமைதியின்மை மற்றும் அமெரிக்க மத்திய வங்கியின் கொள்கை முடிவுகள் காரணமாக, சர்வதேச நிதி முதலீட்டாளர்கள் பலவீனமான சந்தைகளிலிருந்து விலகி, தங்கம் போன்ற பாதுகாப்பான முதலீடுகளை நோக்கி நகர்வதும் இதற்கு ஒரு காரணமாகும் என்று தெரிய வந்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## நீதி அமைச்சரை...

மற்றும் தகுதியான அரச அதிகாரிகளின் முறையற்ற இடமாற்றங்கள் காரணமாக ஒட்டுமொத்த அரச பொறிமுறையும் பாரிய வீழ்ச்சியடைந்து வருவதாகவும் அவர் கடுமையாகச் சாடியுள்ளார்.

நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக நாம் தீவிர அவதானம் செலுத்தியுள்ளோம். இந்த விடயத்தில் பொறுப்பற்ற முறையில் செயற்பட்ட நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவுக்கு எதிராக எதிர்க்கட்சியில் உள்ள அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வரவுள்ளோம். இந்த அரசாங்கம் நாட்டில் உள்ள சிறைச்சாலைகளை மூடிவிடுவதாகக் கூறித்தான் ஆட்சிக்கு வந்தது.

இவர்கள் எதிர்க்கட்சியில் இருந்தபோது இவ்வாறான விடயங்கள் குறித்துப் பாரியளவில் விமர்சித்து, வீதிகளில் இறங்கிப் போராட்டங்களை நடத்தினர். ஆனால், ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பின்னர் மிகவும் பொறுப்பற்ற முறையில் செயற்படுகின்றனர். தங்களை ஒரு முன்மாதிரியான அரசாங்கம் என்று கூறிக்கொண்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கும் உயிரிழந்தவர்களுக்கும் அவமதிப்பை ஏற்படுத்தும் வகையில் இன்று செயற்படுகின்றனர்.

இவற்றுக்கான தீர்வாக இவர்கள் புதிய சிறைச்சாலைகளை உருவாக்குவதைக் காண்கிறோம். ஒரு நாட்டின் கொள்கை என்பது சிறைச்சாலைகளைக் குறைத்து, பாடசாலைகளை அதிகரிப்பதாகவே இருக்க வேண்டும். சிறைச்சாலைகளில் உள்ள நெரிசலைக் குறைக்க வேண்டும் என்பதை நாமும் ஏற்றுக்கொள்கிறோம் ஆனால், அதற்கு கைதிகளின் எண்ணிக்கையைக் குறைக்கக்கூடிய மாற்று சட்டங்கள், கொள்கைகள் மற்றும் வேலைத்திட்டங்களை உருவாக்குவதே சரியான தீர்வாகும்.

போகம்பறை சிறைச்சாலையை மீண்டும் ஒரு சிறைச்சாலையாக மாற்றுவதற்கு எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து நான் மிகவும் கவலையடைகிறேன். நான் பிரதி அமைச்சராக இருந்தபோது, அப்போதைய அமைச்சர் மலிக் சமரவிக்ரமவுடன் இணைந்து, அந்த சிறைச்சாலை வளாகத்தை இலங்கை முதலீட்டுச் சபையின் கீழ் கொண்டு வந்தோம். கண்டி நகரின் மத்தியில் மிகவும் அழகான மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சூழலில் அது அமைந்துள்ளது.

அதன் முன்பகுதியை பெருமளவிலான பணத்தைச் செலவழித்து முதலீட்டுச் சபையின் மூலம் மிகவும் அழகாக மாற்றியமைத்தோம். அதன் மையப்பகுதியில் புதிய முதலீடுகளை மேற்கொள்வதற்கான முதலீட்டாளர்களைத் தேடிக்கொண்டிருந்த நிலையில்தான் 2020 இல் எமக்கு ஆட்சி அதிகாரம் இல்லாது போனது. கண்டி நகரின் மையப்பகுதியில் உள்ள இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க இடத்தை, சிறைச்சாலையை விடவும் நாட்டிற்குப் பொருத்தமான ஒரு சிறந்த திட்டத்திற்குப் பயன்படுத்துவதே அன்றைய எமது நோக்கமாக இருந்தது.

ஆனால், இவர்கள் இப்போது பழைய போகம்பறை சிறைச்சாலையை மீண்டும் ஒரு சிறைச்சாலையாகவே பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். சிறைச்சாலைகளை அதிகரிப்பதுதான் இவர்களது கொள்கையா? இவர்களது கொள்கை சிறைச்சாலைகளின் நெரிசலைக் குறைப்பதாகவே இருக்க வேண்டும். நாட்டுக்கு பொருத்தமான, வணிக ரீதியான, சுற்றுலாப் பயணிகளையும் முதலீட்டாளர்களையும் ஈர்க்கக்கூடிய இடங்களை இவ்வாறான அபிவிருத்திகளுக்குப் பயன்படுத்த வேண்டும் சிறைச்சாலைகள் தேவையென்றால் அதற்கு வேறு பொருத்தமான இடங்களைக் கண்டறிய முடியும். எனவே, இலங்கை முதலீட்டுச் சபையினால் உள்வாங்கப்பட்டு, பெருந்தொகை பணம் செலவழிக்கப்பட்டு புதிய முதலீட்டுக்காகத் தயார்படுத்தப்பட்ட பழைய போகம்பறை சிறைச்சாலையை மீண்டும் சிறைச்சாலையாக மாற்றுவதற்கு நான் எனது கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்று மஹர சிறைச்சாலைச் சம்பவத்தின் போது நீங்கள் எவ்வாறு செயற்பட்டீர்களோ அதனை ஒரு முன்மாதிரியாகக் கொண்டு இந்த நீர்கொழும்பு சிறைச்சாலைச் சம்பவத்திலும் தலையிடுங்கள் என ஜனாதிபதியை வலியுறுத்துகின்றோம். நீதி அமைச்சரை பதவியிலிருந்து நீக்காமல் இந்த விவகாரம் குறித்து ஒரு நியாயமான விசாரணையை நடத்த முடியாது.-என்றார். (அ)

ஈழநாடு

## பேராசிரியர் நிஷான் கனகராஜாவுக்கு பிரித்தானிய மன்னரின் "நைட்" பட்டம்



லண்டன், ஜூலை. 12

இலங்கையில் பிறந்தும், தற்போது பிரித்தானியா வின் லெஸ்டர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகப் பணியாற்றும் பேராசிரியர் நிஷான் கனகராஜா பிரித் தானிய மன்னர் சாள்ஸ் வழங்கிய "நைட்" பட்டத்தை பெற்றுள்ளார்.

2026ஆம் ஆண்டுக்கான மன்னரின் புத்தாண்டு கௌர வப் பட்டியலில் இடம்பெற்றிருந்த பேராசிரியர் நிஷான் கனகராஜாவுக்கு, கடந்த செவ்வாய்க்கிழமை அரண்ம னையில் நடைபெற்ற சிறப்பு முதலீட்டு விழாவில் மன்னர் சார்ள்ஸ் பாரம்பரிய வாளால் தோள்களைத் தொட்டு அதிகாரபூர்வமாக "நைட்" பட்டத்தை வழங்கினார்.

உயர்கல்வித் துறைக்கு ஆற்றிய சிறப்பான பங்களி ப்பு, குறிப்பாக கல்வியில் சமத்துவம், அனைவரையும் உள்ளடக்கும் வாய்ப்புகள் மற்றும் பின்தங்கிய மாண வர்களுக்கு கல்வி அணுகலை மேம்படுத்திய சேவைக ளைப் பாராட்டி இந்த உயரிய கௌரவம் வழங்கப்பட் டது.

பேராசிரியர் நிஷான் கனகராஜா, லெஸ்டர் பல்கலை க்கழகத்தின் முதல் இனச்சிறுபான்மை துணைவேந்தரா கப் பதவி வகித்து வருவதுடன், உயர்கல்வி வாய்ப்பு களை விரிவுபடுத்துதல், சமூக நீதி, பல்வகைமை மற்றும் சர்வதேச கல்வி ஒத்துழைப்பை வலுப்படுத்தும் பல் வேறு முயற்சிகளுக்கு தலைமை தாங்கியுள்ளார். மேலும், பிரித்தானியாவின் தேசிய உயர்கல்வி நிர்வாக அமைப் புகளிலும் முக்கிய பொறுப்புகளை வகித்துள்ளார். (அ)

கடமை செய்யவிடாது தடுத்த குற்றச்சாட்டு;

# வெலிக்கடைச் சிறை அதிகாரிகளுக்கு மனித உரிமை ஆணைக்குழு அழைப்பு

கொழும்பு, ஜூலை. 12

பதில் சிறைச்சாலை ஆணைய ாளர் நாயகம் மற்றும் வெலிக்க டைச் சிறைச்சாலை அத்தியட்சகர் ஆகியோருக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு முன் முன்னிலையாகுமாறு அழைப் பாணை விடுக்கப்பட்டுள்ளது.

நீர்கொழும்பு சிறைச்சாலைக் கலவரத்தின் பின்னர் ஏனைய சிறைச்சாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்ட கைதிகளின் நலன் கள் மற்றும் அவர்கள் துன்புறுத்தல் களுக்குள்ளானமை தொடர்பில் ஆராயும் நடவடிக்கையொன்றை இலங்கை மனித உரிமைகள் ஆணை க்குழு முன்னெடுத்துள்ளது.

அதன் ஒரு அங்கமாக ஆணைக் குழுவின் அதிகாரிகள் கடந்த 07ஆம் திகதி வெலிக்கடை சிறைச்சாலைக் குள் உட்பிரவேசிக்க முயன்றபோது அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

ஜூலை 7ஆம் திகதி இரவு சுமார் 8.30 மணியளவில் வெலிக்கடை சிறைச்சாலைக்கு முன்னறிவிப்பின்றி மேற்கொள்ளப்பட்ட ஆய்வுப் பய ணத்தின்போது, தனது அதிகாரிக ளுக்கு உள்ளே நுழைய அனுமதி மறுக்கப்பட்டது தொடர்பில் ஆணைக்குழு தனது ஆழ்ந்த கவ லையை வெளிப்படுத்தியுள்ளது.

இது இலங்கை மனித உரிமை கள் ஆணைக்குழுச் சட்டத்தை மீறுவதாகும் என்றும், சித்திரவ தைக் குற்றச்சாட்டுகளை விசாரிக் கும் தனது அதிகாரத்தைக் குறை மதிப்பிற்கு உட்படுத்துகிறது என் றும் ஆணைக்குழு சுட்டிக்காட்டி யுள்ளது.

மறுநாள் சிறைச்சாலைக்குள் நுழைய அனுமதி வழங்கப்பட்ட போதிலும், இந்தத் தாமதம் உரிய நேரத்தில் விசாரணை நடத்துவத ற்கான வாய்ப்பை பறித்துவிட்ட தாக ஆணைக்குழு குறிப்பிடுகிறது.

இந்த சம்பவம் தொடர்பான விசாரணையொன்றுக்காக (பதில்) சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் மற்றும் வெலிக்கடை சிறைச்சாலையின் அத்தியட்சகர் ஆகியோர் ஆணைக்குழுவின் முன் முன்னிலையாகுமாறு அழைப் பாணை அனுப்பப்பட்டுள்ளது. (அ)

# சிறைக் கலவரங்களை அடக்க துப்பாக்கிச்சூடு நடத்த உத்தரவிடும் அதிகாரம் எனக்கு இல்லை!

நீதியமைச்சர் ஹர்ஷன விளக்கம்



கொழும்பு, ஜூலை. 12

சிறைச்சாலை வளாகங்களில் ஏற் படும் கலவரங்களை அடக்க துப்பாக் கிச் சூடு நடத்த உத்தரவிடும் அதிகா ரம் தனக்கு இல்லை என நீதியமைச் சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித் துள்ளார்.

நீர்கொழும்பு சிறையில் சமீபத் தில் ஏற்பட்ட கலவரம் மற்றும் அங்கு நடந்த துப்பாக்கிச் சூடுகள் குறித்து கருத்து தெரிவித்த அமைச் சர், சிறைச்சாலைகள் அவசரச் சட்ட த்தின் கீழ், நிலைமையைக் கட்டுப்ப டுத்த சிறை அதிகாரிகளுக்கு மட் டுமே துப்பாக்கிச் சூடு நடத்தும் அதிகாரம் உள்ளது என்று கூறியுள் ளார்.

இராணுவம் மற்றும் பொலி ஸார் தொடர்பில் ஒரு "கட்டளைத் தொடர்" மூலம் செயல்படுத்தப்ப டும் துப்பாக்கிச் சூட்டுக்கான உத்தரவுகள் சிறை அமைப்பில் எவ் வாறு செயல்படுத்தப்படுகின்றன என்பது குறித்து தனக்கு இன்னும் ஆழமான புரிதல் இல்லை என்றும், அதுகுறித்து தனக்கு மேலதிக தெளிவு தேவைப்படுவதாகவும் அமைச்சர் ஒப்புக்கொண்டார்.

மேலும், நீர்கொழும்பு சிறைச் சாலை சம்பவத்தில் விசேட அதிர டிப்படையினர் துப்பாக்கிகளைப் பயன்படுத்தாதமை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதில ளித்த அமைச்சர், சிறை வளாகத்திற் குள் துப்பாக்கிகளைப் பயன்படுத்த சிறை அதிகாரிகளுக்கு மட்டுமே சட்டபூர்வ அதிகாரம் உள்ளது என்று விளக்கம் கொடுத்துள்ளார்.

சிறை வளாகத்திற்குள் விசேட அதிரடிப்படையினர் துப்பாக்கிக ளைப் பயன்படுத்துவது சட்டவி ரோதமானது என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# பாலத்துடன் மோதியது வாகனம்



முல்லைத்தீவு, ஜூலை. 12

முல்லைத்தீவு- வெளிகண்டல் பகுதியில் கப்ரக வாகனம் பாலத்துடன் மோதுண்டதில் ஒருவர் காயமடைந்துள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று அதிகாலை இடம் பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து புதுக்குடியிரு ப்பு நோக்கி மீன்களை ஏற்றி பயணித்த கப்ரக வாகனம் பரந்தன் வீதி ஊடாக முல்லைத்தீவு சென்று கொண்டிருந்தபோது வெளிகண்டல் பகுதியில் வேகட்டுப்பாட்டை இழந்த நிலை யில் பாலத்துடன் மோதுண்டு பாரிய விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தில் வாகன ஓட்டுநரின் உதவி யாளர் சிறுகாயங்களுக்கு உள்ளான நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக் காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ)

# நீதிச் சேவை சங்கத் தலைவர் பசன் அமரசேன பதவி விலகல்

கொழும்பு, ஜூலை. 12

நீதவான்கள் மற்றும் மாவட்ட நீதிபதிகளை உள்ளடக்கிய நீதிச் சேவை சங்கத்தின் தலைவர் பதவியிலிருந்து நீதவான் பசன் அமரசேன வில கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று நடைபெறவிருந்த நீதிச் சேவை சங்க த்தின் விசேட பொதுச் சபை கூட்டத்தை முன் னிட்டு ஏற்பட்ட சர்ச்சையே அவரது பதவி வில கலுக்குக் காரணம் என கூறப்படுகிறது.

நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை நீடிப் பது தொடர்பான விடயத்தை கலந்துரையா டவும், உறுப்பினர்களின் கருத்துகளைப் பெற வும் சங்கத்தின் நிறைவேற்றுக் குழு, கடுவலை நீதவான் நீதிமன்ற வளாகத்தில் நேற்று விசேட பொதுச் சபை கூட்டத்துக்கு அழைப்பு விடுத்தி ருந்தது.

இந்த நிலையில், தனது பதவி விலகல் மற் றும் அதற்கான காரணங்கள் குறித்து சங்க உறு ப்பினர்களுக்கு தலைவர் பசன் அமரசேன அனு ப்பியதாகக் கூறப்படும் கடிதம் ஒன்று சமூக ஊடகங்களில் பரவி வருகிறது.

இதனையடுத்து, தலைவரின் குற்றச்சாட்டு களை மறுத்து, சங்கத்தின் செயலாளர் நீதிபதி சுரங்க முனசிங்க அனுப்பியதாகக் கூறப்படும் மற்றுமொரு கடிதமும் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டு வருகிறது. (அ)

# சுற்றுலாப் பயணியைக் கடத்தி கப்பம் பெற முயன்ற குழு கைது!

கொழும்பு, ஜூலை. 12

இலங்கைக்கு சுற்றுலா வந்தி ருந்த பிரேசில் நாட்டவர் ஒருவரை கடத்திச் சென்று கப்பம் பெற முய ன்ற இளைஞர்கள் குழுவொன்று பொலிஸாரினால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் காலி அருகே உணவட்டுன பிரதேசத்தில் நடை பெற்றுள்ளது.

இலங்கைக்கு சுற்றுலாப் பயணி யாக வருகை தந்திருந்த பிரேசில் பிரஜையொருவர், காலி, தல்பே பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்துள்ளார்.

இந்நிலையில், அந்த இடத்துக்கு சென்ற இருவர் சுற்றுலா பொலிஸ் அதிகாரிகள் என தம்மை அடையா ளப்படுத்திக் கொண்டு குறித்த சுற்று லாப் பயணியின் அறையை சோத னையிட்டுள்ளனர்.

அதன்போது சுற்றுலாப் பயணி யின் பிரேசில் நாட்டு கடவுச்சீட்டு, அமெரிக்க ஆவணங்கள், கைபேசி கள் மற்றும் பிற உபகரணங்களை வலுக்கட்டாயமாக தங்கள் வசம் எடுத்துக் கொண்டுள்ளனர்.

அத்துடன் அந்த இடத்திற்கு வந்த மற்றொரு நபரையும் இணைத் துக் கொண்டு, மூவருமாக குறித்த பிரேசில் பிரஜைக்கு கைவிலங்கு போட்டு அச்சுறுத்தியுள்ளனர்.

குறித்த சுற்றுலாப் பயணியைக் கைது செய்யாமல் இருக்க கொழும் பிலுள்ள முக்கிய பொலிஸ் அதிகாரி யொருவருக்கு இலஞ்சம் கொடுக்க வேண்டும் என்று அந்த குழுவினர் கூறியுள்ளனர்.

தமக்கு 30 இலட்சம் ரூபா இல ஞ்சம் வேண்டும் எனவும், அத்தொ கையை உடனடியாக வழங்குமா றும் பிரேசில் பிரஜையை அவர்கள் மிரட்டியுள்ளனர்.

இதற்கிடையே சம்பவம் தொட ர்பில் கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், உனவடுன சுற்றுலா பொலிஸ் பிரிவின் நிலையப் பொறு ப்பதிகாரி உள்ளிட்ட அதிகாரிகள் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட உடனடி நடவடிக்கையின் பிரகா ரம் குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.07.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org